307

பாடத்திட்டம்

# வரலாறு

# தரம் - 6



- குறிப்புகள்
- தேசப்பட விளக்கங்கள்
- பட விளக்கங்கள்
- பயிற்சி வினா – விடைகள்
- மாதிரி வினாத்தாள்கள் (இடைத்தவணை)
- மாதிரி வினாத்தாள்கள் (தவணை)
- வரலாற்றுத் துணுக்குகள்

S. J. ஆதி
B.A (Hons)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Class No: 900
Acc No 307

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பாடத்திட்டம்

# வரலாறு

# தரம் – 6

Public Library
Municipal Council
Batticaloa.

900
307

- குறிப்புகள்
- தேசப்பட விளக்கங்கள்
- பட விளக்கங்கள்
- பயிற்சி வினா – விடைகள்
- வரலாற்றுத் துணுக்குகள்
- மாதிரி வினாத்தாள்கள் (இடைத்தவணை)
- மாதிரி வினாத்தாள்கள் (தவணை)

ஆசிரியர்

S.J. ஆதீ B.A (Hons)

வெளியீடு : லோயல் பப்ளிகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : பெப்ரவரி 2018

தலைப்பு : வரலாறு - தரம் 6

பக்கங்கள் : 144

ஆசிரியர் : S. J. ஆதி B.A (Hons)
jayathy992@gmail.com

பதிப்புரிமை : லோயல் பப்ளிகேசன்

பதிப்பு : லோயல் அச்சகம்

வெளியீடு : *Loyal Publication*
*125, New Moor Street,*
*Colombo - 12.*

விலை : 250/-

ISBN : 978 - 955 - 38705 - 8 - 2



தொடர்பு : **Dr. A. JOGARAJAH**
**No. 125, New Moor Street,**
**Colombo -12.**

**T.P : 011 - 2433874**
**011 - 4280880**
**0777 556277**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கல்வி உலகம் சார் அனைவருக்கும் வணக்கம்!....

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தடைகளைத் தவிர்த்துக் கொள்ளவும் புதிய உபாயங்களை கவனமாக மேற்கொள்வதற்கு வழிகாட்டவும் வரலாற்றுக் கல்வி உதவுகின்றது. இந்த வகையில் கற்றலுக்கு தூண்டல், ஆதரவான ஊடகங்களை வழங்கல், நிலைமைகளை பொருத்தமாக்கல் என்பவை ஒரு மாணவன் கற்றலின் அடைவில் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு அவசியமான காரணிகளாகும். அதே வேளை மாணவனின் பெறுபேற்றை உயர்த்துவதில் ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் நோக்குதல், அவதானித்தல், ஒரு உந்து சக்தியாகி மூளையில் சிறந்த பதிவுகளை ஏற்படுத்தி விடுதல் போன்ற சிந்தனைகளை மனதில் தாங்கி எனக்கே உரித்தான பாணியில் தேடுகை, ஒழுங்காக்கல் என்னும் நுட்பங்களூடாக பயணம் செய்து தயாரித்த ஒரு படைப்பாக இந்நூலை கல்வி உலகம் சார் அனைவரின் கைகளிலும் தவழ விடுகின்றேன்.

இந்நூல் உருப்பெற ஆதரமாகவும் உதவியாகவும் இருந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் கோடான கோடி நன்றிகள்.குறிப்பாக இந்நூலை அழகுற வடிவமைத்து அச்சிட்டு விநியோகிக்கும் லோயல் பப்ளிகேசன் நிறுவனத்திற்கும் என்னை வளப்படுத்திய என் கல்லூரி அன்னைக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

தொடர்ந்து இந்நூல் தொடர்பாக தாங்கள் வழங்கும் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் யாவும் என் பிரகாசத் தன்மைக்கானதே என கருதிக்கொள்வேன். ஆதலால் இந்நூல் தொடர்பான கருத்துக்களை எனக்கு அறியத்தர பின் நிற்காதீர்கள். பெரியோர்களே!...

திரு. **S.J.** ஆதி **B.A (Hons)**

**"புகழ் பாடப்படும் போது வானத்தில் பறப்பதுமில்லை**
**இகழப்படும் போது பூமிக்குள் புதைபடுவதுமில்லை"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அலகு 01 | வரலாறு ஓர் அறிமுகம் | 01 |
| அலகு 02 | ஆதி மனிதன் | 16 |
| அலகு 03 | உலகின் புராதன நாகரிகங்கள் | 40 |
| அலகு 04 | இலங்கையில் குடியேற்றங்கள் நிறுவப்படல் | 66 |
| அலகு 05 | எமது பண்டைய அரசர்கள் | 80 |
| ❋ | தேசப்படங்கள் | 116 |
| ❋ | மாதிரி வினாத்தாள்கள் | 121 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 01

# வரலாறு ஓர் அறிமுகம்

**அறிமுகம்**

வரலாறு, வரலாற்றைக் கற்பதன் பயன்கள், என்பன பற்றி இந்த அத்தியாயத்தில் நீங்கள் கற்கப்போகின்றீர்கள். வரலாறு என்பது நீண்ட காலப்பகுதியைக் கொண்டிருப்பதால் அதனை விளங்கிக் கொள்வது எவ்வாறு மற்றும் அதன் காலத்தை அளவிடுவது எவ்வாறு என்பது பற்றியும் இந்தப்பாடத்தில் கற்றுக் கொள்வீர்கள்.

**01) வரலாறு என்றால் என்ன?**

- ★ முற்காலத்தில் வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களை தேடி அறிந்து அவற்றை விளக்குவதே வரலாறு எனப்படும்.
- ★ மானிட நாகரிகத்தின் விருத்தி பற்றி ஆராய்தல் வரலாறு எனப்படும்.
- ★ கடந்தகாலம் பற்றி ஆராய்தல் வரலாறு எனப்படும்.
- ★ பண்டைய காலம் முதல் நிகழ்காலம் வரையான மனிதனின் கதையே வரலாறு எனப்படும்.

**வரலாற்றின் தந்தை**

- ★ பெயர் - ஹெரடோரஸ்
- ★ வாழ்ந்த இடம் - கிரேக்கம்
- ★ வாழ்ந்த காலம் - கி.மு. 484 - 425
- ★ முன்வைத்தது - ஆராய்ச்சியின் விளைவாகப் பெறப் பட்டிருக்கும் தகவல்களை உள்ள டக்கியதே வரலாறு.

**02) வரலாறு பற்றி வரைவிக்கணம் முன்வைத்தோர் சிலரைத் தருக.**

- ★ E.H. கார் - கடந்தகாலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையிலான முடிவற்ற சம்பாசனைகள்.
- ★ பேராசிரியர் E. றியார் - சமூக முறைமைகளின் நினைவேடு

★ கிரேக்கர்கள் அவர்களுள் குறிப்பாக அயோனியர்களே வரலாற்றை எழுதும் முறைக்கு அடிகோலியவர்களாவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ History எனும் பதம் இஸ்டோரியா (Istoria) எனும் கிரேக்கச் சொல்லின் அடிப்படையில் தோற்றம் பெற்றது.

★ இஸ்டோரியா எனும் கிரேக்கச் சொல்லுக்கு ஆராய்ச்சியின் விளைவால் பெற்ற அறிவு அல்லது செய்தித் தொகுப்பு என்பது பொருளாகும்.

**03) மூலாதாரங்கள் என்றால் என்ன?**

★ வரலாறு பற்றிய அறிவினை பெற்றுக்கொள்ள உதவும் அனைத்தும் மூலாதாரங்கள் எனப்படும்.

★ வரலாறு என்ற கட்டடத்தை அமைக்கப்பயன்படுத்தும் செங்கற்களே வரலாற்று மூலாதாரங்கள் எனப்படும்.

**04) மூலாதாரங்களின் வகைகளைக் குறிப்பிடுக?**

★ இலக்கிய மூலாதாரம்

★ தொல்பொருள் மூலாதாரம்

**05) இலக்கிய மூலாதாரங்களுக்கான உதாரணங்களைக் குறிப்பிடுக?**

★ பழைய நூல்கள் (மகாவம்சம், தீபவம்சம், சூளவம்சம்)

★ கர்ண பரம்பரைக் கதைகள்

★ நாட்டார் கதைகள், பாடல்கள்.

★ யாத்திரிகர்களின் பயணக் குறிப்புக்கள்.


**06) தொல்பொருள் மூலாதாரங்களுக்கான உதாரணங்களைக் குறிப்பிடுக?**

★ நாணயங்கள்

★ கல்வெட்டுக்கள்

★ சிதைவுகள் (சிலைகள், சிற்பங்கள், எலும்புக் கூடுகள்)


★ புராதன காலப் பொருட்கள். (மட்பாண்டங்கள், ஆயுதங்கள்.)



தொல்பொருள் மூலாதாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**07) நாம் வரலாற்றினைப்பற்றி எவற்றினூடாக அறிந்து கொள்ளலாம்?**

- ★ அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்ட பழைய பொருட்களினூடாக அறிந்து கொள்ளலாம்.
- ★ பழைய நாணயங்களினைப் பார்ப்பதன் ஊடாக வரலாற்றினை அறிந்து கொள்ளலாம்.
- ★ முற்காலத்தில் எழுதப்பட்ட நூல்களின் ஊடாக வரலாற்றினை அறிந்து கொள்ளலாம்.
- ★ முற்காலத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருட்களினூடாக அறிந்து கொள்ளலாம்.
- ★ மூத்தோர்கள் கூறும் கதைகளினூடாக அறிந்து கொள்ளலாம்.

**08) வரலாற்றினூடாக நாம் அறிந்து கொள்ளக்கூடிய விடயங்களைக் குறிப்பிடுக.**

- ★ பண்டைய கால ஆட்சி முறை.
- ★ சமூகத் தொடர்புகள்.
- ★ வாழ்க்கை முறைகளும் பண்பாடுகளும்.
- ★ கல்வி சமய நடவடிக்கைகள்.
- ★ தொழினுட்பங்கள்.
- ★ பொருளாதார நடவடிக்கைகள்.
- ★ சமுதாயக் கட்டமைப்புக்கள்.

**09) மகாவம்சம் பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக?**

- ★ எழுதியவர் - மகாநாமதேரர்
- ★ எழுதப்பட்ட காலம் - கி.பி 5 ஆம் நூற்றாண்டு
- ★ வகை - இலக்கிய மூலாதாரங்கள்
- ★ எழுதப்பட்ட இடம் - மகாவிகாரையின் திக்சந்த செனவிய பிரிவெனா

**10) தீபவம்சம் பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக?**

- ★ வகை - இலக்கிய மூலாதாரம்
- ★ காலம் - கி.பி 4ம் நூற்றாண்டு
- ★ எழுதியவர் - கண்டறியப்படவில்லை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11) சூளவம்சம் பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.**

★ வகை - இலக்கிய மூலாதாரம்
★ எழுதியவர் - தர்மகீர்த்தி தேரர்.

**12) பொலன்னறுவை கல்விகாரை பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக?**

★ வகை - தொல்பொருள் மூலாதாரம்
★ காலம் - கி.பி 12ஆம் நூற்றாண்டு
★ நிர்மானித்தவர் - 1ம் பராக்கிரமபாகு


பொலன்னறுவைக் கல்விகாரை


பொலன்னறுவைக் கல்விகாரை

**13) இலங்கை வரலாற்றை அறிய உதவும் காலத்தால் முந்திய நூல் எது?**

★ தீபவம்சம்

**14) இலங்கை வரலாற்றை தொடர்ச்சியாக அறிய உதவும் இலக்கிய மூலாதாரம் எது?**

★ மகாவம்சம்

**15) உமது பாடசாலை வரலாற்றை அறிய உதவும் இலக்கிய மூலாதாரங்களைக் குறிப்பிடுக.**

★ சம்பவத்திரட்டுப் புத்தகம்.
★ பாடசாலைச் சஞ்சிகைகள்.
★ நூற்றாண்டு மலர்கள்.
★ சேர்வு மற்றும் வரவு இடாப்புக்கள்.
★ அறிக்கைகள்.

**16) உமது பாடசாலை வரலாற்றை அறிய உதவும் தொல்பொருள் மூலாதாரங்களைக் குறிப்பிடுக.**

★ நினைவுச் சின்னங்கள்.
★ நினைவுக் கற்கள்.
★ உருவச்சிலைகள்.
★ நிழற்படங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17) வரலாற்றைக் கற்கும் போது நாம் எதிர்கொள்ளும் சவால்களைக் குறிப்பிடுக.**

- ★ மொழிப்பிரச்சினை (கல்வெட்டுக்களில் எழுதப்பட்டிருப்பவை தொடர்பாக)
- ★ உண்மைகளை உறுதிப்படுத்துவதில் ஏற்படும் சவால்
- ★ சொற்பிரயோகத் தன்மையில் ஏற்படும் சிக்கல்
- ★ காலங்களை நிர்ணயித்தலில் ஏற்படும் பிரச்சினைகள்.

**18) வரலாற்றை கற்பதன் மூலம் நாம் பெறும் பயன்கள் எவை?**

- ★ வரலாற்றை கற்பதன் மூலம் தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ள முடியும்.
- ★ தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்ள முடியும்.
- ★ நாட்டினை எவ்வாறு முன்னேற்றலாம் என்பதை தீர்மானித்துக் கொள்ள முடியும்.
- ★ முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் அடைந்த வெற்றி தோல்விகளை அறிந்து கொள்வதன் மூலம் தற்காலத்தில் இடம்பெறும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும்.
- ★ இறந்த காலத்தில் இடம்பெற்றவைகளை அறிந்து கொள்வதன் மூலம் எதிர்காலத்தை சிறப்பாக திட்டமிட்டுக் கொள்ள முடியும்.
- ★ முற்காலத்தில் மக்கள் சூழல் மாசடையாமல் எவ்வாறு விவசாயத்தினை மேற்கொண்டனர் என அறிவதன் மூலம் தற்காலத்தில் விவசாயத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள முடியும்.




**கடந்தகாலத்தைப் பின்நோக்கிப் பார்த்து அக்காலத்தில் நிகழ்ந்தவற்றைக் கற்றுக் கொள்ளல் வரலாற்றைக் கற்றலில் அடங்கும்.**

**19) கீழைத்தேசத்தின் தானியக் களஞ்சியம் என அழைக்கப்பட்ட நாடு எது?**

- ★ இலங்கை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20) இலங்கை கீழைத்தேசங்களின் தானியக் களஞ்சியம் என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?**


★ முற்காலத்தில் இலங்கையானது விவசாயத்தில் தன்னிறைவு பெற்றதாகக் காணப்பட்டதனால் அவ்வாறு அழைக்கப்பட்டது.

**21) இலங்கை கீழைத்தேசங்களின் தானியக் களஞ்சியம் என அழைக்கப்படுகையில் இராசதானியாகச் செயற்பட்ட நகர் எது?**

★ பொலன்னறுவை



சிம்மாசனம்




ஹெரடோரஸ்

**22) இலங்கையின் எழுத்துக்கலைக்கு எத்தனை ஆண்டுகால வரலாறு காணப்படுகின்றது?**

★ 2250 ஆண்டு கால வரலாறு

**23) தற்காலத்தில் எழுதப்படுகின்ற "க" என்ற எழுத்து எத்தனை ஆண்டு கால வளர்ச்சியினால் இந்நிலையை அடைந்தது?**

★ 1500 ஆண்டுகால வளர்ச்சியினால்.




**1500 ஆண்டுகளாக 'க' என்ற எழுத்து தற்போதைய நிலையை அடைந்த விதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24) புராதன காலத்தில் நடைமுறையில் இருந்த ஆண்டு முறைகளைக் குறிப்பிடுக?**

- ★ கி.மு, கி.பி
- ★ புத்தவருடம்
- ★ சாலி வாகன சகாப்தம்
- ★ ஹிஜ்ரி ஆண்டு
- ★ வள்ளுவர் ஆண்டு

**25) வரலாற்றுக் காலத்தை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் எளிமையான முறை எது?**

- ★ கி.மு - கிறிஸ்துவுக்கு முன்
- ★ கி.பி - கிறிஸ்துவுக்கு பின்

**26) கி.மு, கி.பி என்னும் முறை எதனை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகின்றது?**

- ★ கிறிஸ்துநாதரின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது.

**27) கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்னரான காலம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

- ★ கிறிஸ்துவுக்கு முன் (கி.மு)
  Before Christ (B.C.)

**28) கிறிஸ்துவின் பிறப்பிற்கு பிற்பட்ட காலம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

- ★ கிறிஸ்துவுக்கு பின் (கி.பி)
  Anno Domini (A.D)

**கிறிஸ்து நாதர்**

- ★ பிறந்த இடம் - பெத்லகேம்
- ★ தந்தை - ஜோசேப்
- ★ தாய் - மரியாள்
- ★ பெத்லகேம் - பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் அமைந்துள்ள இடமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29) மகிந்ததேரர் இலங்கைக்கு வருகை தந்த ஆண்டு எது?**

★ கி.மு 250 ஆண்டுகளுக்கு முன்

**30) மகிந்ததேரர் எம் மன்னன் காலத்தில் இலங்கை வந்தார்?**

★ தேவநம்பியதீசன் காலத்தில்

**31) மகாசேனன் மன்னனின் ஆட்சி ஆரம்பிக்கும் ஆண்டினைக் குறிப்படுக?**

★ கி.பி 274

**32) மின்னேரியாக் குளத்தினைக் கட்டுவித்த மன்னன் யார்?**

★ மகாசேனன்

**33) முற்காலத்தில் இந்தியாவிலும், இலங்கையிலும் நடைமுறையில் இருந்த ஆண்டு முறைகளைக் குறிப்பிடுக?**

★ புத்தவருடம்

★ சாலி வாகன சகாப்தம்

**34) பஞ்சாங்கங்களில் பயன்படுத்தப்படும் ஆண்டு முறைகளைக் குறிப்பிடுக?**

★ புத்தவருடம்

★ சாலி வாகன சகாப்தம்

**35) புத்தவருடம் எந்நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப் படுகிறது?**

★ புத்தபெருமான் பரிநிர்வாணம் அடைந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது.

**36) புத்தபெருமான் பரிநிர்வாணமடைந்த ஆண்டு யாது?**

★ கி.மு 544

**புத்தர் (ஒளிபெற்றவர்)**

★ தந்தை - சுத்தோதனர்

★ தாய் - மாயா தேவி

★ மனைவி - யசோதரை

★ பிறந்த இடம் - நேபாளம் (லும்பினி எனுமிடத்தில்)

★ இறப்பு - இந்தியா (குசி நகர் உத்தரப்பிரதேசம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிநிர்வாணம்**

★ பௌத்த சமயத்தில் பரிநிர்வாணம் என்ற சொல் முதலில் பயன்படுத்தப்பட்டது.

★ பரிநிர்வாணம் என்பது உடல் இறப்பிற்கு பின்னர் பிறவிச் சுழற்சியிலிருந்து விடுபட்டு பிறவா நிலையை அடைவது.

**37) இந்து சமய நாட்காட்டிகளில் முற்காலத்தில் தோன்றியது எது?**

★ கலியுக வருஷ நாட்காட்டி

**38) இந்து சமய நாட்காட்டிகளின் பிற்காலத்தில் தோன்றிய நாட்காட்டி எது?**

★ சாலிவாகன சகாப்த நாட்காட்டி

**39) சாலிவாகன சகாப்த முறை எத்தனையாம் ஆண்டு ஆரம்பமாகிறது?**

★ கி.பி 78

**40) சாலிவாகன சகாப்தத்தை தோற்றுவித்தவர் யார்?**

★ கௌதமி புத்திர சதகர்னி

**41) சாலிவாகன சகாப்தம் எந்நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகிறது?**

★ இந்தியாவின் மேற்குப் பிரதேசத்தை ஆட்சிசெய்த கௌதமி புத்திரசதகர்னி என்பவர் சாகர்களைத் தோற்கடித்ததன் நினைவாக ஏற்படுத்தப்பட்டது.

**42) முஸ்லீம்கள் தமது சமய விழாக்களைக் கொண்டாடுவதற்காக பயன்படுத்தும் கால அளவீட்டு முறை யாது?**

★ ஹிஜ்ரி

**43) ஹிஜ்ரி ஆண்டு எத்தனையாம் ஆண்டுடன் ஆரம்பமாகிறது??**

★ கி.பி 622

**44) ஹிஜ்ரி ஆண்டு எந்நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகிறது?**

★ இஸ்லாமிய சமயத்தலைவரான முகமது நபி என்பவர் மக்காவை விட்டு மதீனாவிற்குச் சென்ற ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**45) வள்ளுவர் ஆண்டு ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தினைக் குறிப்பிடுக.**

★ தைப் பொங்கலைத் தொடக்க நாளாகக் கொண்டது.

★ வள்ளுவர் வாழ்ந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

**46) கி.மு, கி.பி என்பதன் அடிப்படையில் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வுகளைக் குறிப்பிடுக?**

★ கி.பி 1948 - இலங்கை சுதந்திரமடைந்தது

★ கி.பி 274 - மகாசேன மன்னனின் ஆட்சி ஆரம்பம்.

★ கி.பி 67 - வசப மன்னனின் ஆட்சி ஆரம்பம்.

★ கி.பி 1 - இயேசு கிறிஸ்துநாதரின் பிறப்பு.

★ கி.மு 544 - புத்தபெருமான் பரிநிர்வாணம் அடைந்தது.

**47) புத்தவருட முறைப்படி நடைபெற்ற முக்கியமான வரலாற்று நிகழ்வுகளைக் குறிப்பிடுக?**

★ புத்தவருடம் 818 - மகாசேன மன்னனின் ஆட்சி ஆரம்பம்


★ புத்தவருடம் 611 - வசப மன்னனின் ஆட்சி ஆரம்பம்


★ புத்தவருடம் 544 - இயேசு கிறிஸ்து நாதரின் பிறப்பு

★ புத்தவருடம் 1 - புத்தபெருமானின் பரிநிர்வாணம்

**48) தொல்பொருள் அகழ்வுகள் என்றால் என்ன?**

★ முறையாக பூமியை அகழ்வதன் மூலம் இறந்தகாலத்தைப் பற்றி அறியும் நோக்கில் நிலத்தை அகழ்தல்



அகழ்வாய்வு



புத்தரின் பரிநிர்வாணநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி - 01

01) முற்காலத்தில் மனிதர்கள் பற்றிய தகவல்களை தேடி அறிவது எவ்வாறு அழைக்கப்பட்டது?
   1. பாதுகாப்பு 2. சுகாதாரம்
   3. வரலாறு 4. அறவு

02) தீபவம்சம் எந்நூற்றாண்டைச் சேர்ந்தது?
   1. 8ம் நூற்றாண்டு 2. 4ம் நூற்றாண்டு
   3. 2ம் நூற்றாண்டு 4. 7ம் நூற்றாண்டு

03) மகாவம்சத்தை எழுதியவர் யார்?
   1. வசபன் 2. பராக்கிரமபாகு
   3. பாகியன்தேரர் 4. மகாநாமதேரர்

04) பராக்கிரமபாகுவுடன் தொடர்புடைய மூலாதாரம் யாது?
   1. தீபவம்சம் 2. மகாவம்சம்
   3. பொலறுவை கல்விகாரை 4. இசுறுமுனி விகாரை

05) கீழைத்தேசங்களின் தானிய கஞ்சியம் என அழைக்கப்படுவது யாது?
   1. இந்தியா 2. இலங்கை
   3. சீனா 4. யப்பான்

06) இலங்கையின் எழுத்துக்கலை எத்தனையாண்டு வரலாற்றை உடையது?
   1. 2250 2. 1960 3. 3450 4. 2350

07) பின்வருவனவற்றுள் எது தொல்பொருள் மூலாதாரம்
   1. வம்சக்கதைகள் 2. பழைய நூல்கள்
   3. சிதைவுகள் 4. புராண கதைகள்

08) பின்வருவனவற்றுள் எது இலக்கிய மூலாதாரம்
   1. தீபவம்சம் 2. சிதைவுகள்
   3. கட்டிடங்கள் 4. நாணயங்கள்

09) மஹிந்ததேரர் இலங்கைக்கு வந்த ஆண்டு யாது?
   1. கி.மு.350 2. கி.மு 250 3. கி.பி 250 4. கி.பி 450

10) மின்னேரியாக்குளத்தை கட்டிய மன்னன் யார்?
   1. மகாசேனன் 2. துட்டகைமுனு
   3. பண்டுகாபயன் 4. இராஜசிங்கன்

11) மகாவசம்சம் எனப்படுவது
   1. கல்வெட்டு
   2. இலக்கிய மூலாதாரம்
   3. தொல்பொருள் மூலாதாரம்
   4. சிதைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) புத்தபெருமான் பரிநிர்வாணம் அடைந்த ஆண்டு
1. கி.மு 620 ற்கு முன் 2. கி.பி 440
3. கி.பி 260 4. கி.மு 544 ஆண்டுகளிற்கு முன்

13) கௌதம புத்தர் சதகர்ணி என்பவர் எப்பிரதேசத்தை ஆட்சி செய்தவர்?
1. இந்தியாவின் கிழக்குப் பிரதேசம்
2. இலங்கையின் தெற்கு பிரதேசம்
3. இந்தியாவின் மேற்கு பிரதேசம்
4. இந்தியாவின் வடக்கு பிரதேசம்

14) சாலிவாகன சகாப்தமுறை எத்தனையாம் ஆண்டு ஆரம்பம் ஆகியது?
1. கி.பி. 78 2. கி.பி 94 3. கி.பி 87 4. கி.மு 506

15) முஸ்லீம்கள் காலங்களை அளவிட பயன்படுத்தும் முறை யாது?
1. கி.பி கி.மு முறை 2. ஹிஜ்ரி முறை
3. பருவநிலைக்கேற்ப 4. நாட்காட்டிக்கேற்ப

16) ஹஜ்ரி ஆண்டு எத்தனையாம் ஆண்டு ஆரம்பமாகியது?
1. கி.பி 632 ஆண்டு 2. கி.பி 884 ஆண்டு
3. கி.பி 506 ஆண்டு 4. கி.பி 622 ஆண்டு

17) இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு யாது?
1. 1948ம் ஆணடு 2. 1950ம் ஆண்டு
3. 1860ம் ஆண்டு 4. 1970ம் ஆண்டு

18) இயேசுநாதர் பிறந்த ஆண்டு யாது?
1. கி.பி 1 2. கி.மு 2 3. கி.பி 10 4. கி.பி 8

19) கி.பி 67ம் ஆண்டு எம்மன்னனின் ஆட்சி ஆரம்பமாகியது?
1. இராஜசிங்கன் 2. எல்லாளன்
3. வசபன் 4. பண்டுகாபயன்

20) புத்தவருடமுறைப்படி மகாசேனனின் ஆட்சி ஆரம்பமாகிய ஆண்டு?
1. புத்த வருடம் 496
2. புத்தவருடம் 818
3. கி.பி 818
4. புத்தவருடம் 518

21) மகாவம்சம் எத்தனையாம் நூற்றாண்டைச் சேர்ந்தது?
1. 20ம் நூற்றாண்டு
2. 16ம் நூற்றாண்டு
3. 9ம் நூற்றாண்டு
4. 5ம் நூற்றாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) மகாநாமதேரர் எவ்விகாரையைச் சேர்ந்தவர்?
1. பொலநறுவைக் கல்விகாரை 2. இசுருமுனி விகாரை
3. மகாவிகாரை 4. மஹியங்கனை விகாரை

23) இலங்கையில் விவசாயம் சிறப்பாக நடைபெற்றமையால் இலங்கை எவ்வாறு அழைக்கப்பட்டது?
1. பூமியின் சொர்க்கம்
2. கீழைதேசத்தின் தானியக் களஞ்சியம்
3. விவசாய பூமி
4. அழகிய நாடு

24) கிறிஸ்துநாதரின் பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படும் முறை
1. கி.மு, கி.பி 2. ஹிஜ்ரி
3. நிகழ்காலம், எதிர்காலம் 4. நவீனகாலம், புராதனகாலம

25) வசபமன்னனின் ஆட்சி ஆரம்பித்த ஆண்டு யாது?
1. கி.பி 256 2. புத்தவருடம் 420
3. புத்தவருடம் 611 4. கி.மு 402

26) இஸ்லாமிய சமய தலைவர் யார்?
1. வள்ளுவர் 2. முகமது நபி
3. சரிபுத்தீன் 4. புத்தர்

27) புத்தவருடம் எதனை வைத்துக் கணிக்கப்படுகின்றது?
1. புத்தரின் வாழ்வை அடிப்படையாக கொண்டு
2. புத்தரின் இறப்பைத் தொடர்ந்து
3. புத்தபெருமான் பரிநிர்வாணம் அடைந்த நாள் முதல்
4. புத்தரின் பிறப்பைக் கொண்டு

28) கௌதம புத்தர் சதகர்ணி யாரை தோற்கடித்து பிரதேசத்தை கைப்பற்றினான்?
1. சாகர்கள் 2. இந்தியர்கள்
3. வேடுவர்கள் 4. சீனர்கள்

29) பின்வருவனவற்றுள் எது இலக்கிய மூலாதாரம் யாது?
1. மகாவம்சம் 2. கல்வெட்டு
3. சிதைவுகள் 4. விகாரைகள்

30) மூலாதாரங்களின் இரண்டு வகைகளும் எவை?
1. கல்வெட்டு, சிதைவுகள்
2. இலக்கியம், தொல்பொருள்
3. நவீனமூலாதாரம், புராதன மூலாதாரம்
4. கதைகள், நூல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) பொலன்நறுவை விகாரைக்குரிய காலம் யாது?
1. கி.பி 11ஆம் நூற்றாண்டு 2. கி.பி 9 ஆம் நூற்றாண்டு
3. கி.பி 12 ஆம் நூற்றாண்டு 4. கி.பி 5 ஆம் நூற்றாண்டு

32) பின்வருவனவற்றுள் நூலை ஆக்கியோர் கண்டறியப்படாத மூலாதாரம் யாது?
1. சூளவம்சம் 2. வம்சத்தபகாசினி
3. மகாவம்சம் 4. தீபவம்சம்

33) பொலநறுவை கல்விகாரை என்பது
1. கல்வெட்டு 2. இலக்கியமூலாதாரம்
3. தொல்பொருள் மூலாதாரம் 4. நூல்

34) பண்டைய காலத்தில் அரசர்களின் இருக்கை எவ்வாறு அழைக்கப்பட்டது?
1. கதிரை 2. சிம்மாசனம்
3. பலகை 4. கல்வெட்டு

35) புராதன சிம்மாசனம் ஒன்று இலங்கையில் எங்கு வைக்கப்பட்டுள்ளது?
1. கொழும்பு தேசிய அருங்காட்சியகம்
2. தேசிய நூலகம்
3. கண்டிதலதாமாளிகை
4. கொழும்பு தேசிய பாடசாலை

36) நம்நாட்டின் வரலாற்றை அறிவதற்கு பெரிதும் உதவுபவை
1. கதைகள் 2. புத்தகங்கள்
3. மூலாதாரங்கள் 4. பரம்பரையாக கூறியதன் மூலம்

37) நாட்காட்டி முறைக்கு காரணமான மன்னன் யார்?
1. பராக்கிரமபாகு 2. கௌதமபுத்ர சதகர்ணி
3. வசபன் 4. தேவநம்பியதீசன்

38) முகம்மது நபி மக்காவை விட்டு எங்கு சென்றார்?
1. மதீனா 2. சீனா
3. ஜப்பான் 4. இந்தியா

39) இயேசுநாதரின் பிறப்பை புத்தவருட கணிப்பின்படி
1. புத்தவருட 460 2. புத்தவருடம் 02
3. புத்தவருடம் 544 4. புத்தவருடம் 201

40) வரலாறு என்றால்?
1. இறந்தகால நிகழ்வுகள்
2. எதர்காலத்தில் நடக்க இருப்பவை
3. நிகழ்காலத்தில் நடந்து கொண்டிருப்பவை
4. யாவும் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41) முற்காலத்தில் வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களை தேடி அறிந்து அவற்றை விளக்குவதே ............................... எனப்படும்.
42) வரலாற்றினைக் கற்பதற்கு பயன்படுபவை .................... ஆகும்.
43) மகாவம்வம், தீபவம்சம் போன்ற மூலாதாரங்கள் .......................... மூலாதாரங்கள் ஆகும்.
44) கல்வெட்டு, சிதைவுகள் போன்ற மூலாதாரங்கள் ............................ மூலாதாரங்கள் ஆகும்.
45) மகாநாம தேரரால் எழுதப்பட்ட ............................ ஓர் இலக்கிய மூலாதாரமாகும்.
46) கி.பி. எனப்படுவதன் விரிவு ............................................ ஆகும்.
47) கி.மு., கி.பி. என்பன வரலாற்று ............................ அளவிடுவனவாகும்.
48) முஸ்லீம்கள் தமது சமய விழாக்களைக் கொண்டாடுவதற்காகக் காலங்களை அளவிடும் முறை ............................ எனப்பட்டது.
49) மின்னேரியா குளத்தை கட்டுவித்த மன்னன் .................... ஆவான்.
50) புத்த பெருமானின் பிநிர்வாணத்தை தொடர்ந்து கணிக்கப்படுவது ................................ எனப்படும்.

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 2) | 2 | 3) | 4 | 4) | 3 | 5) | 2 |
| 6) | 1 | 7) | 3 | 8) | 1 | 9) | 2 | 10) | 1 |
| 11) | 2 | 12) | 4 | 13) | 3 | 14) | 1 | 15) | 2 |
| 16) | 4 | 17) | 1 | 18) | 1 | 19) | 3 | 20) | 2 |
| 21) | 4 | 22) | 3 | 23) | 2 | 24) | 1 | 25) | 3 |
| 26) | 2 | 27) | 3 | 28) | 1 | 29) | 1 | 30) | 2 |
| 31) | 3 | 32) | 4 | 33) | 3 | 34) | 2 | 35) | 1 |
| 36) | 3 | 37) | 2 | 38) | 1 | 39) | 3 | 40) | 1 |

| | | | |
|---|---|---|---|
| 41) | வரலாறு | 42) | மூலாதாரங்கள் |
| 43) | இலக்கிய | 44) | தொல்பொருள் |
| 45) | மகாவம்சம் | 46) | கிறிஸ்துவுக்குப் பின். |
| 47) | காலத்தை | 48) | ஹிஜ்ரி முறை |
| 49) | மகாசேனன் | 50) | புத்தவருடம். |



Class No: 900
Acc No 307
Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 02 ஆதி மனிதன்

**அறிமுகம்**

மனிதன் பூமியில் வாழ்கின்றான்.பூமி எம் அனைவரினதும் உலகமாகும். மனிதனுக்கு மட்டுமன்றி ஏனைய உயிர்கள் அனைத்துக்கும் ஆதாரமாக விளங்குகின்றது. இதனடிப்படையில் பூமியைப் பற்றி அறியும் நோக்கில் பூமியின் தோற்றம், உயிரினங்களின் தோற்றம் என்பன பற்றி இந்தப் பாடத்தில் கற்றுக் கொள்வீர்கள்.

**01) நாம் வாழும் கோள் எது?**


★ பூமி

**02) பூமி எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றது?**

★ ஏறக்குறைய பத்து இலட்சத்து நாலாயிரத்து ஐந்நூற்று நாற்பத்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றது.

**03) பூமி எவ்வாறு தோற்றம் பெற்றது?**

★ விண்ணில் இருந்து தூசிப்படலத்திலிருந்து தோற்றம் பெற்றது.



விண்ணிலுள்ள தூசிப்படலத்திலிருந்து பூமி தோன்றியமை



Class No
Acc No
Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04) பூமி தோன்றிய தூசிப்படலம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

★ நிகாரிகா

**05) நிகாரிகா என்பது ஆங்கிலப் புத்தகங்களில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**


★ நெபியுலா

**06) புவியின் நடுப்பகுதியின் வெப்பம் எத்தனை செல்சியஸ்?**

★ 6000 செல்சியஸ்

**07) எரிமலை வெடிக்கும் போது அதிலிருந்து வெளிவருவது எது?**

★ புவியின் நடுப்பகுதியில் வெப்பமடைந்திருக்கும் லாவா



யப்பானின் சுகுரஜிமா எரிமலை வெடித்து புவியின் மையத்திலுள்ள லாவா வெளியேறும் விதம்

**08) புவியில் தோன்றிய முதல் உயிரினம் எது?**

★ புரோகாயோட் பக்டீரியா

**09) புரோகாயோட் பக்டீரியா எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றது?**

★ இரண்டாயிரத்து ஐந்நூறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்.

**10) கனடாவில் எவ் உயிரினத்தின் சுவடு அல்லது தடயம் கண்டு பிடிக்கப்பட்டது?**

★ ஒபபீனியா உயிரினத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11) ஒபபீனியா உயிரினம் எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தது?**


★ ஐந்நூற்று நாற்பத்து இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்

**12) ஒபபீனியா உயிரினத்தின் இயல்புகளைக் குறிப்பிடுக?**


★ 4 - 7 cm க்கு இடைப்பட்ட நீளம் கொண்டது.

★ இது கடலின் அடியில் வாழ்ந்துள்ளது.


★ இதற்கு உண்பதற்கு வாய் இருந்ததுடன் ஐந்து கண்களும் இருந்தன




ஒபபீனியா



ஒபபீனியா



ஒபபீனியாவின் பாறைப் படிவு



புரோகாயோட் பக்டீரியா

**13) முதன் முதலில் உயிரினங்கள் எங்கு தோற்றம் பெற்றது?**

★ நீரில்

**14) முதன் முதலில் தரையில் தோற்றம் பெற்ற உயிரினம் எது?**

★ பாதங்கள் பலவற்றைக் கொண்ட மரஅட்டை

**15) முதன் முதலில் தரையில் உயிரினம் தோற்றம் பெற்றது எவ்வாறு அழைக்கப்படுகின்றது?**

★ சிலூரியன் யுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16) சிலூரியன் யுகம் எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் நிலவியது?**

★ நானூற்று இருபது மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்

**17) தாவரங்கள் தோன்றிய யுகம் எது?**

★ பெலியோசொயிக்

**தரையில் தோன்றிய உயிரினங்களின் படிமுறை**

| | |
|---|---|
| ★ புரோகாயோட் பக்டீரியா | - இரண்டாயிரத்து ஐந்நூறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் |
| ★ ஒபபீனியா | - ஐந்நூற்று நாற்பத்திரெண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர். |
| ★ மர அட்டை | - நானூற்றி இருபது மில்லியன் ஆண்டுகளுக்கு முன் (சிலூரியன் யுகம்) |
| ★ தாவரங்கள் (முதலில்) மிருகங்கள்(பின்னர்) | - ஐந்நூற்றி நாற்பது மில்லியன் நாற்பது ஆண்டுகளுக்கு முன் (பெலியோ சொயிக் யுகம்) |

**ஆதி மனிதனின் பரம்பல்**

**18) விலங்குகளைப் பார்ப்பிலும் மனிதன் முன்னணியில் உள்ளதை வெளிப்படுத்தும் செயல்களைக் குறிப்பிடுக?**

★ நிர்மாணிக்கும் ஆற்றல்
(தொழில்நுட்பம்)

★ கருத்துப் பரிமாற்றம் செய்யும் ஆற்றல்
(மொழி)

★ ஆடல் பாடல்
(கலை)

**19) மனிதன் எவ்விலங்கிலிருந்து தோன்றினான்?**

★ சிம்பன்சி குரங்கிலிருந்து

**20) பெரும்பனியுகம் என்றால் என்ன?**

★ புவியானது மிகவும் குளிர்ச்சியாக இருந்த காலப்பகுதி பெரும்பனியுகம் எனப்படும்.

**21) பெரும்பனியுகம் எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் நிலவியது?**

★ இருபத்தைந்து இலட்சம் வருடங்களுக்கு முன்னர் நிலவியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22) பெரும்பனியுகம் ஆரம்பமான காலத்தில் ஆபிரிக்காவில் வாழ்ந்தோரைக் குறிப்பிடுக?**

★ சிம்பன்சிகள்




**23) பெரும்பனி யுகத்தில் சிம்பன்சிகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுக?**

★ சிம்பன்சிகளின் பற்களிலும் முகங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டமை

★ இரண்டு கால்களால் நடக்கப்பழகியமை

**24) சிம்பன்சிகளில் மாற்றங்கள் ஏற்பட்டமைக்கான காரணம் யாது?**

★ பெரும்பனிகாலத்தில் நிலவிய கடும் குளிருக்கு முகம் கொடுக்க முடியாதிருந்தமை.

★ உணவுப் பற்றாக்குறையின் காரணமாக பழக்கமில்லாத உணவுகளை உட்கொண்டமை.

**25) வானரக் குடும்பத்தில் இருந்து மனிதப் பரம்பரை தோன்றியமைக்கான காரணம் யாது?**

★ பெரும்பனியுகத்தில் நிலவிய காலநிலை

**26) பெரும்பனிக்காலத்தின் இயல்புகளைக் குறிப்பிடுக?**

★ புவியின் வடக்கு தெற்குப்பகுதி முற்றாகத் தடித்த பனிப்படலத்தால் மூடப்பட்டிருந்தது.

★ தாவரங்கள் வளரவில்லை. இதனால் உணவு தாராளமாகக் கிடைக்கவில்லை.

★ மேமன்யானைகள் இக்காலத்திலேயே வாழ்ந்தன.


**27) பெரும்பனியுகத்தில் நிலவிய காலங்களைக் குறிப்பிடுக?**

★ 4 குளிரான காலங்கள்

★ 4 குறுகிய வெப்பம் நிலவிய காலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பனி யுகத்தில் நிலவிய சூழலை வெளிப்படுத்தும் ஓவியம்

**28) வானரப் பரம்பரையிலிருந்து மனிதன் முன்னேறிய காலம் யாது?**

★ பெரும்பனியுகத்தில் நிலவிய குறுகிய வெப்பகாலம்

**29) மானிடப் பரிணாமம் என்றால் என்ன?**

★ வானரப் பரம்பரையான சிம்பன்சியிலிருந்து மனிதன் முன்னேறிய செயன்முறை மானிடப் பரிணாமம் எனப்படும்.




**மானிடப் பரிணாமத்தின் உடல் ரீதியிலான கூர்ப்புக் கட்டங்கள்**

★ ஒஸ்ரலோபிதிகஸ்
★ ஹோமோஹெபிலஸ்
★ ஹோமோ இரெக்டஸ்
★ ஹோமோ நியண்டதாலென்சிஸ்
★ ஹோமோசேப்பியன்ஸ்

**30) மனிதனது நிலையை அடைந்த முதலாவது வானர கூர்ப்பு யாது?**

★ ஒஸ்ரலோபிதிகஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**31) 3.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இரு கால்களால் நடந்த மனிதனது கூர்ப்பு யாது?**

★ ஒஸ்ரலோபிதிகஸ்

**32) கூர்மையான ஆயுதங்கள் செய்யும் முயற்சியில் இறங்கிய மனித நிலை எது?**

★ ஹோமோஹெபிலஸ்



கல்லாயுதங்களைத் தயாரித்தல்.



கல்லாயுதங்களைத் தயாரித்தல்.

**33) ஹோமோஹெபிலஸ் என்பதன் பொருள் யாது?**

★ ஆற்றலுடைய மனிதன்

**34) ஹோமோஹெபிலஸ் மனிதன் வாழ்ந்த காலப்பகுதி யாது?**

★ 2.3 - 1.4 மில்லியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம்

**35) மனிதன் முதல் முதல் நெருப்பை பயன்படுத்தியமைக்கான சான்று காணப்பட்ட இடம் எது?**

★ இஸ்ரவேல்

**36) நெருப்பை முதல் முதல் பயன்படுத்திய மனிதக்கூர்ப்புக் கட்டம் எது?**

★ ஹோமோ இரெக்டஸ்

**37) ஹோமோ இரெக்டஸ் மனிதன் நெருப்பை பயன்படுத்தியமையால் அடைந்த பயன்களைக் குறிப்பிடுக?**

★ உணவை நெருப்பில் பதப்படுத்தி உண்ண முடிந்தமை

★ நெருப்பில் பதப்படுத்தி உண்டதனால் உணவு விரைவாக சமிபாடு அடைந்தமை.

★ குளிர்காலத்தில் குளிர்காயக் கூடியதாக இருந்தமை.


★ காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பு பெற முடிந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெருப்பை உண்டாக்குதல்



குளிர்காய்தல்

**38) வானரத்தின் மூளையை விட பெரிதாக வளர்ச்சி அடைந்ததுடன் அதற்கேதுவான மண்டையோட்டினையும் கொண்ட மனிதக் கூர்ப்புக்கட்டம் எது?**

★ ஹேமோ நியண்டதாலன்சிஸ்

**39) ஹோமோ நியன்டதாலன்சிஸ் மனிதன் எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தான்?**

★ ஆறு இலட்சம் வருடங்களுக்கு முன்னர்


**40) ஹேமோ நியன்டதாலன்சிஸ் மனிதன் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிடுக?**

★ பெரிய மிருகங்களின் எலும்பினைக் கொண்டு வீடுகள் அமைத்தமை.

★ காய்கறிகளை உணவாக உட்கொண்டமை.

★ சிறப்பாக வேட்டையாடியமை.

★ உணவு சமைத்து உண்டமை.



பெரிய மிருகங்களின் எலும்பினைக் கொண்டு வீடுகள் அமைத்தமை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**41) நவீன மூளையினைக் கொண்டதாக விருத்தி அடைந்த மனிதக் கூர்ப்பு நிலை எது?**


- ★ ஹேமோசேப்பியன்ஸ்

**42) ஹேமோசேப்பியன் மனிதனால் வெளிப்படுத்தப்பட்ட செயற்பாடுகளைக் குறிப்பிடுக?**

- ★ கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டமை.
- ★ உணர்வினை வெளிப்படுத்த ஆடல், பாடல், ஓவியம் என்பவற்றை பயன்படுத்தியமை.




கூர்ப்பு - 01
ஒஸ்ரலோபிதிகஸ்




கூர்ப்பு - 02
ஹோமோ ஹெபிலஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கூர்ப்பு - 03
ஹோமோ இரெக்டஸ்




கூர்ப்பு - 04
ஹோமோ நியண்டதாலென்சிஸ்





கூர்ப்பு - 05
ஹோமோ சேப்பியன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனிதன் பரிணாம வளர்ச்சியின் ஊடாக நவீன நிலையை அடைந்தான் எனும் கோட்பாட்டினை முன் வைத்தவர்**


★ சார்ள்ஸ் டார்வின்




ஒஸ்ரலோபித்திகசின் மண்டையோடு




வானரமாக இருந்து முன்னேறிய மனிதன் புவியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவனானான்.



பழைய கல்லாயுதம்




ஹோமோ சேப்பிய மனிதனால் பயன்படுத்தப்பட்ட குழல்



மானிடப் பரிணாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிரினங்களின் தோற்றம்

## கலாசார வளர்ச்சி

**43) கலாசார மாற்றம் என்றால் என்ன?**

★ நீண்ட காலப்பகுதியில் மனிதன் தான் வாழும் முறையை மாற்றிக் கொண்டமை கலாசார மாற்றம் எனப்படும்.

**44) மனிதன் நீண்ட காலமாக அடைந்த வெற்றியின் தன்மையை அறிந்து கொள்ள உதவுவது எது?**

★ மனிதனால் செய்யப்பட்ட கல்லாயுதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**45) மனிதனின் கலாசார வளர்ச்சி எத்தனை கட்டங்களைக் கொண்டது? அவை எவை?**

- ★ மூன்று (3)
- ★ பழைய கற்காலம்
- ★ இடைக் கற்காலம்
- ★ புதிய கற்காலம்

**46) மனிதனது கலாசார வளர்ச்சிக் கட்டங்கள் எதனடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.**

- ★ ஆயுதங்களின் தன்மைக்கு அமைய

**47) பழைய கற்காலத்தில் வாழ்ந்த மனிதனுடைய வாழ்க்கை முறை எத்தகையது?**

- ★ மனிதன் குழுவாக இடத்துக்கிடம் குடிசைகளை அமைத்து வாழ்ந்தான்.
- ★ சித்திரம் வரைவதற்கும் கற்களைக் கொண்டு உருவங்கள் அமைப்பதற்கும் பழகியமை.
- ★ ஒரு குழுவில் 20 - 30 வரையிலான அங்கத்தவர்கள் காணப்பட்டமை.
- ★ பண்டமாற்று முறை ஆரம்பமானமை
- ★ மரணச்சடங்கு முறையை மேற்கொண்டமை
- ★ உணவினை சேகரித்தும் வேட்டையாடியும் உண்டமை.



கற்கால மனிதன் சித்திரம் வரைந்து கொண்டமை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**48) பழைய கற்காலத்தில் மனிதன் மரணச்சடங்கு முறையை மேற்கொண்ட முறையைக் குறிப்பிடுக?**

★ இறந்தவர்களின் எலும்புகளில் வர்ணம் பூசியமை



இடைக்கற்காலத்தில் வரையப்பட்ட ஓவியம்.



மனிதனின் மரணச்சடங்கு



பழைய கற்கால மனிதனின் மரணச்சடங்கு

**49) மனிதன் இடைக் கற்காலத்தில் பெற்ற முன்னேற்றங்களைக் குறிப்பிடுக?**

★ 20,000 ற்கும் 18,000 ற்கும் இடைப்பட்ட காலம்

★ மனிதன் வேட்டையாடியும் உணவை சேகரித்தும் வாழ்ந்தமை

★ வில், அம்பு என்பவற்றைப் பயன்படுத்தி வேட்டையாடியமை.

★ காய், கனிகள், இலைகள், கிழங்குவகைகள் என்பவற்றை உட்கொண்டமை.

★ ஒரே இடத்தில் நீண்ட காலம் வாழப்பழகிக் கொண்டமை.

★ மரங்களாலும் தடிகளாலும் இலை குழைகளாலும் வீடுகள் அமைப்பதில் வெற்றி கொண்டமை.


★ பலவித நிறங்களைப் பயன்படுத்தி சித்திரங்களை வரையப் பழகிக் கொண்டான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைக்கற்காலத்தில் வில் அம்பு என்பவற்றைப் பயன்படுத்தி வேட்டையாடியமை



பழைய கற்கால பிற்பகுதியில் மிருக எலும்பில் செய்யப்பட்ட உருவம்



இலைகுழை, தடிகளால் வீடுகள் அமைத்தமை

**50) புதிய கற்காலத்தில் இடம்பெற்ற மாற்றங்களைக் குறிப்பிடுக?**

- ★ விவசாயம் செய்யப்பழகிக் கொண்டமை.(கோதுமை, பார்லி, நெல், குரக்கன்)
- ★ மிருக வளர்ப்பு மேற்கொண்டமை. (ஆடு, கோழி, மாடு)
- ★ உலோகப் பாவனை ஆரம்பிக்கப்பட்டு கல்லாயுதங்களுக்குப் பதிலாக உலோக ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டமை.
- ★ ஒரே இடத்தில் வாழத்தக்க வகையில் கிராமங்கள் தோற்றம் பெற்றமை.
- ★ விவசாயத்தின் பொருட்டு கடவுளை வழிபடுதல் ஆரம்பமானது.
- ★ மனிதன் முதல் முதல் சமய வழிபாடுகளில் ஈடுபட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**51) மனிதன் பரிணாமம் அடைந்த யுகம் எது?**

★ பெரும்பனியுகம்

**52) பெரும்பனியுகம் முடிவடைந்த காலப்பகுதி எது?**

★ 12000 வருடங்களுக்கு முன்

**53) பெரும்பனியுக முடிவில் தோற்றம் பெற்ற யுகம் எது?**

★ ஹொலோசின் யுகம்

**54) ஹெலோசின் யுகம் ஆரம்பித்த விதத்தினைக் குறிப்பிடுக?**

★ குளிர்ந்த காலநிலை வெப்பமடையத் தொடங்கியது. தாவரங்கள் செழிப்பாக வளரத் தொடங்கின. இதனால் மிருகங்களிலும் மனிதர்களிலும் மலர்ச்சி ஏற்பட்டது. இவ்வாறு உருவாகிய யுகமே ஹெலோசின் யுகம் எனப்படும்.

**55) ஹொலோசின் யுகம் தோற்றம் பெற்றதன் விளைவுகளைக் குறிப்பிடுக.**

★ காலநிலை வெப்பமடைந்து விவசாய நடவடிக்கைகளுக்கு ஏதுவான சூழல் உருவாகியது.

★ வேட்டையாடுவதற்குப் பதிலாக விவசாயம் செய்தனர்

★ உலோக வகைகளைப் பயன்படுத்த தொடங்கினர்.

**ஹோமோநியன்டதாலன்சிஸ் மனிதனிலிருந்து நாம் கற்றுக் கொண்ட விடயங்கள்**

★ பெரிய மிருகங்களின் எலும்புகளைக் கொண்ட வீடுகள் அமைக்கும் முறையை கற்றுக் கொண்டமை

★ உணவை சமைத்து உண்ணுதலைக் கற்றுக் கொண்டமை.

★ காய்கறிகளை உணவாக உட்கொள்ளுதலைக் கற்றுக் கொண்டமை

**56) விவசாயயுகத்தில் மனித வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுக?**

★ அலைந்து திரிந்து உணவை சேகரிக்கும் முறைக்கு பதிலாக விவசாயத்தை மேற்கொண்டமை.

★ வேட்டையாடுதலுக்குப் பதிலாக மிருகங்களை வளர்ப்பதற்குப் பழகிக் கொண்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கற்கருவிகளுக்குப் பதிலாக உலோகப் பாவனையை மேற்கொண்டமை.

★ குடும்பமாக வாழ்ந்தமை.

★ கிராமங்கள் தோற்றம் பெற்றமை.



பழங்கால விவசாயிகள் வாழ்ந்த கிராமமொன்று

**58) முதல் முதல் பயிரிடப்பட்ட பயிர்களையும் பயிரிடப்பட்ட நாடுகளையும் பயிரிடப்பட்ட காலப்பகுதியினையும் குறிப்பிடுக?**

★ நெல்
- ★ சீனா
- ★ கி.மு. 7000 (இற்றைக்கு 9000 ஆண்டுகளுக்கு முன்னர்)

★ கோதுமை
- ★ மத்திய தரை கடலை சூழவுள்ள பகுதி
- ★ கி.மு 9000 (இற்றைக்கு 11000 ஆண்டுகளுக்கு முன்)

★ சோளம்
- ★ மத்திய மெக்சிக்கோ
- ★ கி.மு 3000 (இற்றைக்கு 5000ஆண்கஞக்கு முன்)

**59) முதல்முறையாக கிராமங்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றது?**


★ கி.மு 6000 ஆண்டுகளுக்கு முன்

**60) களிமண்ணால் செய்யப்பட்ட அரிவாள் கண்டுபிடிக்கப்பட்ட கற்குகை உள்ள நாடு எது?**


★ இஸ்ரவேல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய கற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட மண்ணாலான அரிவாள்



ஐரோப்பாவின் பழங்கால விவசாயிகள்



பழைய கற்கால மனிதன் குழுவாக வாழ்ந்தமை

**61) மேற்குறிப்பிடப்பட்ட களிமண்ணால் ஆக்கப்பட்ட அரிவாள் எத்தனையாம் ஆண்டுக்குரியது?**

★ *கி.மு 3000 ஆண்டுக்குரியது.*

**62) விவசாயயுக மனிதனால் நிறுவப்பட்ட வீடுகளின் தன்மை எத்தகையது?**

★ வீடுகள் மிகவும் எளிமையானவையாகக் காணப்பட்டமை.
★ இவைகள் களிமண்ணால் கட்டப்பட்டமை.
★ கூரைகள் இலை குழைகளால் வேயப்பட்டமை.
★ மண் குடிசைகளாக காணப்பட்டமை.

**63) ஹோமோசேப்பிய மனிதனின் முகஅமைப்புக்கேற்ப அதன் வகைப்பாடுகளைக் குறிப்பிடுக?**

★ கொக்கசொயிட்
★ நிக்ரொயிட்
★ ஒஸ்ரிலொயிட்
★ மொங்கோலொயிட்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**64) ஹேமோசேப்பியனின் வகைகளையும் அவை வாழும் நாடுகளையும் குறிப்பிடுக?**


- ★ கொக்கசொயிட் - அவுஸ்ரேலியோ, வடஅமெரிக்கா, கிறீன்லாந்து, ரஸ்யா
- ★ நிக்ரொயிட் - ஆபிரிக்கா
- ★ ஒஸ்ரிலொயிட் - இந்தியா, இலங்கை.
- ★ மொங்கோலொயிட் - ஜப்பான், சீனா, கொரியா, தாய்லாந்து

**65) ஹேமோசேப்பிய மனிதனின் முகத்தோற்றம் மாற்றமடைந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

- ★ சூரிய வெப்பம்
- ★ குளிர் காலநிலை.




பல்வேறு முகங்களையுடைய ஹோமோசேப்பியன்கள் உலகில் பரவியுள்ள விதம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) பூமி தோன்றக் காரணமான தூசிப்படலத்தின் பெயர் யாது?
1. யுப்பிட்டர் 2. நிகாரிகா
3. புரோகாயோட் 4. புதன்

02) பூமியில் முதன் முதலாக தோன்றிய உயிரினம் யாது?
1. மனிதன் 2. மரம்
3. புரோகாயோட் பக்டீரியா 4. பூக்கள்

03) இற்றைக்கு ஐந்நூற்றி நாற்பத்திரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த உயிரினத்தின் பெயர் யாது?
1. ஒபபீனியா 2. நட்சத்திர மீன்
3. பக்டீரியா 4. மனிதன்

04) இற்றைக்கு நானூற்றி இருபது மில்லியன் ஆண்டுகளிற்கு முற்பட்ட காலம் எவ்வாறு அழைக்கப்படும்?
1. முன்யுகம் 2. புராதனயுகம்
3. இடையுகம் 4. சிலூரியன் யுகம்

05) தரையின் முதன் முதலல் தோன்றிய உயிரினங்கள் எவை?
1. குரங்கு 2. தாவரங்கள்
3. மனிதன் 4. நாய்

06) குரங்கிலிருந்து மனிதன் தோன்றுவதற்கு வித்திட்ட யுகம் யாது?
1. புராதன யுகம் 2. சிலூரியன் யுகம்
3. பெரும் பனியுகம் 4. வெப்பயுகம்

07) குரங்கிலிருந்து மனிதன் தோன்றிய விதம் எவ்வறு அழைக்கப்படுகின்றது?
1. மனித வளர்ச்சி 2. மனிதக் குரங்கு
3. மாற்றம் 4. மானிட பரிணாமம்

08) மனிதனது நிலையை அடைந்த வானரம் எவ்வாறு அழைக்கப் பட்டது?
1. ஒஸ்ரலோபிதிகஸ் 2. மனிதன்
3. ஆதிஹோமோ சேப்பியன்ஸ் 4. விலங்கு

09) முதலில் ஆயுதங்களை பயன்படுத்தி, பலமுயற்சிகளில் ஈடுபட்ட மனிதன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?
1. வானரம் 2. ஒஸ்ரலோபிதிகஸ்
3. ஹோமோஹெபிலஸ் 4. ஹோமோ சேப்பியன்ஸ்

10) ஆதிமனிதனால் கண்டு பிடிக்கப்பட்டு இன்றும் எமக்கு பயன்தரும் ஓர் விடயம் யாது?
1. காடு 2. நெருப்பு
3. கல்லாயுதம் 4. அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) மனிதன் முதன்முதலாக நெருப்பைப் பயன்படுத்தியமைக்கான சான்று கிடைக்கப்பட்ட இடம் யாது?
1. இந்திய 2. இலங்கை
3. கனடா 4. இஸ்ரவேல்

12) நெருப்பை முதன் முதலில் பயன்படுத்திய மனிதன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?
1. ஹோமோ இரெக்டஸ் 2. ஹோமோ ஹெபிலஸ்
3. ஒஸ்ரலோபிதிகஸ் 4. ஹோமோ சேப்பியன்ஸ்

13) இற்றைக்கு ஆறு இலட்சம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மனிதனின் பெயர் யாது?
1. ஹோமோ நியண்டதாலென்சிஸ் 2. ஹோமோ இரக்டஸ்
3. ஹோமோ ஹெபிலஸ் 4. ஹோமோ சேப்பியன்ஸ்

14) இன்றைய காலத்தில் வாழ்ந்த மனிதனுடன் நெருங்கிய தொடர் புடைய மனிதனின் பெயர் யாது?
1. ஹோமோ நியண்டதாலன்சிஸ் 2. ஹோமோ ஹெபிலஸ்
3. ஹோமோசேப்பியன் 4. ஹோமோ இரக்டஸ்

15) மனிதன் நீண்டகாலப் பகுதியில் தான் வாழும் முறையை மாற்றிக் கொண்டமை எவ்வாறு அழைக்கப்பட்டது?
1. மானிட பரிணாமம் 2. கலாசார வளர்ச்சி
3. மாற்றம் 4. மனித வளர்ச்சி

16) நீண்டகாலமாக மனிதன் அடைந்த வெற்றி எவ்வாறானது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணை புரிபவை எவை?
1. கல்வெட்டு 2. சிதைவுகள்
3. மண்டடையோடு 4. கல்லாயுதங்கள்

17) மனிதன் குழுவாக இடத்துக்கு இடம் கூட்டமாக குடிசைகளை அமைத்து வாழப் பழகியது எக் கற்காலத்திலாகும்?
1. இடைக் கற்காலம் 2. பழைய கற்காலம்
3. புதிய கற்காலம் 4. நவீன கற்காலம்

18) பழைய கற்காலத்தில் வாழ்ந்த மனிதன் பழக்கப்பட்ட சடங்கு முறை யாது?
1. மரணச் சடங்கு
2. பிறப்பு சடங்கு
3. திருமணச் சடங்கு
4. யாவும் சரி

19) இற்றைக்கு 20 000 இற்கும் 18 000 ற்கும் இடைப்பட்ட காலத்தில் ஆரம்பமான கற்காலம் யாது?
1. பழைய கற்காலம் 2. இடை கற்காலம்
3. நவீன கற்காலம் 4. புதிய கற்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) இடைக்கற்காலத்து மனிதன் பயன்படுத்திய சிறப்பான ஆயுதம் எது?

1. கல்லாயுதம் 2. களிமண் ஆயுதங்கள்
3. கத்தி 4. அம்பு, வில்

21) முதன்முதலாக ஆதிமனிதன் வீடமைத்து வாழ்ந்த காலம் யாது?

1. இடைக் கற்காலம் 2. பழைய கற்காலம்
3. புதிய கற்காலம் 4. யாவும் சரி

22) புதிய கற்காலம் இற்றைக்கு எத்தனை ஆண்டுகளிற்கு முன் தோன்றியது?

1. 4850 ஆண்டுகள் 2. 9000 ஆண்டுகள்
3. 1000 ஆண்டுகள் 4. 5610 ஆண்டுகள்

23) மனிதன் விவசாயத்தினை பழகிக்கொண்ட காலம் எது?

1. பழைய கற்காலம் 2. இடைக் கற்காலம்
3. புதிய கற்காலம் 4. புராதன கற்காலம்

24) புதிய கற்கால மனிதன் பால், இறைச்சி, முட்டை என்பவற்றை பெற்றுக்கொண்ட முறை?

1. பயிர்ச்செய்கை 2. விலங்கு வளர்ப்பு
3. நாடோடி முறை 4. பண்டமாற்று

25) புதிய கற்காலப் பகுதியில் முதன் முதலாக பயன்படுத்தப் பட்டதும், கல்லாயுதங்களிற்கு பதிலாக பயன்படுத்தப் பட்டதுமான பொருள் யாது?

1. உலோகம் 2. நெருப்பு
3. களிமண் 4. தடிகள்

26) கடவுளை வழிபடுதல், மாய வழிபாடுகள் போன்றன முதன் முதலாக தோன்றிய கற்காலம் எது?

1. இடைக் கற்காலம் 2. புதிய கற்காலம்
3. பழைய கற்காலம் 4. யாவும் சரி

27) புதிய கற்காலத்தில் செல்வந்தர்கள் தோன்றக் காரணம் யாது?

1. விவசாயத்தில் ஈடுபட்டமை. 2. பண்டமாற்றினால்
3. திருடியமையால் 4. வீடு கட்டியமையால்

28) புதிய கற்காலத்தில் நகரவாழ்க்கைக்கு அதிகம் பழக்கப்பட்டவர் யார்?

1. ஆதி ஹோமோ சேப்பியன்ஸ் 2. ஆதிமனிதன்
3. ஏழைகள் 4. செல்வந்தர்

29) மனிதனில் மலர்ச்சி ஏற்பட்டு மேலும் முன்னேற்றமடைந்த யுகம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

1. புதியயுகம் 2. ஹெலோசியன் யுகம்
3. மறுமலர்ச்சி 4. மறுயுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30) நெற்செய்கை முறை முதலில் தோற்றம் பெற்ற இடம் யாது?
1. இந்தியா 2. யப்பான்
3. சீனா 4. இலங்கை

31) கோதுமை பயிற்செய்கை முதன் முதலில் தோற்றம் பெற்ற இடம் யாது?
1. சீனா 2. இந்தியா
3. இந்து சமுத்திரம் 4. மத்தியதரைக்கடல் பிரதேசம்

32) குடும்பம் குடும்பமாக மனிதன் வாழ்ந்தமையால் தோற்றம் பெற்றவை எவை?
1. குடும்பம் 2. கிராமம்
3. வீடு 4. விவசாயம்

33) பழைய காலத்தைச் சேர்ந்த களிமண்ணால் செய்யப்பட்ட அரிவாள் எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?
1. இஸ்ரேல் 2. சீனா
3. யப்பான் 4. இலங்கை

34) பழைய காலத்து வீடுகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
1. மாடிவீடுகள் 2. குகைகள்
3. மண்வீடுகள் 4. தொடர்வீடுகள்

35) மனித நாகரிகத்தைக் கட்டியெழுப்ப காரணமாக அமைந்த விடயங்கள் எவை?
1. கல்லாயுதம் 2. பண்டமாற்று
3. சடங்கு முறை 4. விவசாயம், மந்தைவளர்ப்பு

36) வானத்தில் இருந்து மனிதன் தோன்றியமைக்கு உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆதாரமானது இவற்றில் முக்கியமானது?
1. உடல் 2. முகம்
3. கால் 4. தலை

37) புராதன ஹோமோசேப்பியன்களில் இந்தியாவில் வாழ்ந்த வர்க்கம் எது?
1. கொக்கசொயிட் 2. நீக்ரொயிட்
3. ஒஸ்ரிலொயிட் 4. மொங்கோலொயிட்

38) மானிட பரிணாமத்தின் முதல் கட்டம் யாது?
1. ஒஸ்ரலோபிதிகஸ் 2. ஹோமோ ஹபிலஸ்
3. ஹோமோ இரெக்டஸ் 4. ஹோமோ சேபியன்

39) புராதன ஹோமோசேப்பியன்களில் யப்பான், சீனா, போன்ற நாடுகளில் வாழ்ந்த வர்க்கம் எது?
1. கொக்கசொயிட் 2. மொங்கோலொயிட்
3. நிக்ரொயிட் 4. ஒஸ்ரிலொயிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40) மனிதன் தோன்றுவதற்கான முக்கிய காரணம்?
1. வாழிடம் 2. விபத்து
3. காலநிலை மாற்றம் 4. உணவு

41) இற்றைக்கு ஐந்நூற்றி நாற்பத்திரெண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ……………… பக்டீரியா வாழ்ந்தது.

42) முதன் முதலில் உயிரினங்கள் …………… தோன்றின.

43) இந்தப் புவியானது மிகவும் குளிர்ச்சியாக இருந்த காலம் …………………… ஆகும்.

44) வானர பரம்பரையில் இருந்து மனிதன் தோன்றியது ……………… எனப்பட்டது.

45) முதன் முதலில் நெருப்பை பயன்படுத்திய மனிதன் ………….. ஆவான்.

46) மனிதன் நீண்டகாலப் பகுதியில் தான் வாழும் முறையை மாற்றியமைத்துக் கொண்டமை. ……………… எனப்பட்டது.

47) மனிதன் குழுவாக இடத்துக்கு இடம் கூட்டமாக வாழ்ந்த காலம்

48) பழைய காலத்திலே ………………… முறை ஆரம்பமானது.

49) ஆதிமனிதன் ……………… முறை மூலமே முதலில் உணவை பெற்றுக்கொண்டான்.

50) சோளம் என்ற பயிர் முதன் முதலில் ……………… அறிமுகப்படுத்தப்பட்டது.

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 2) | 3 | 3) | 1 | 4) | 4 | 5) | 2 |
| 6) | 3 | 7) | 4 | 8) | 1 | 9) | 3 | 10) | 2 |
| 11) | 4 | 12) | 1 | 13) | 1 | 14) | 3 | 15) | 2 |
| 16) | 4 | 17) | 2 | 18) | 1 | 19) | 2 | 20) | 4 |
| 21) | 1 | 22) | 2 | 23) | 3 | 24) | 2 | 25) | 1 |
| 26) | 2 | 27) | 1 | 28) | 4 | 29) | 2 | 30) | 3 |
| 31) | 4 | 32) | 2 | 33) | 1 | 34) | 3 | 35) | 4 |
| 36) | 2 | 37) | 3 | 38) | 1 | 39) | 2 | 40) | 3 |

| | | | |
|---|---|---|---|
| 41) | புரோகாயோட் | 42) | நீரில் |
| 43) | பெரும்பனியுகம் | 44) | மானிடப் பரிணாமம் |
| 45) | ஹோமோ இரக்டஸ் | 46) | கலாசார வளர்ச்சி |
| 47) | பழைய கற்காலம் | 48) | பண்டமாற்று |
| 49) | வேட்டையாடும் | 50) | மத்திய மெக்சிக்கோவில் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 03

# உலகின் புராதன நாகரிகங்கள்

**அறிமுகம்**

நகரங்களை அமைத்து அவற்றில் வாழ ஆரம்பித்த பின்னர் மனித முன்னேற்றம் உயர் நிலையை அடைந்தது. இதனடிப்படையில் நகரங்களை மையமாகக் கொண்டு வாழ்ந்த மனிதர்களது குணப்பண்புகளையும் இயல்புகளையும் இவ் அத்தியாயங்கள் ஊடாக அறிந்து கொள்ள முடியும்.

**01) கிராமிய சமுதாயத்திலிருந்து நகரசமுதாயம் தோற்றம் பெற்ற முறையினைக் குறிப்பிடுக?**

★ விவசாயம் செய்ததாலும் மந்தை வளர்த்ததாலும் அதிக வருமானம் கிடைக்கவே சில கிராம வாசிகள் செல்வந்தர்களாயினர்.

★ சில கிராமவாசிகள் செழிப்பற்ற நீரைப்பெற முடியாத நிலங்களில் பயிர்செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதனால் வருமானம் குறைந்து ஏழைகளாயினர்.

★ செல்வந்தர்களாகினோர் தமது கிராமங்களை படிப்படியாக விருத்தியடையச் செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

★ இதனூடாக அவர்களது கிராமங்களில் கட்டட நிர்மாணிப்புகளும், நிரந்தர வீடுகளும் பொழுதுபோக்கு அம்சங்களும் ஏற்படலாயின. இதன் வாயிலாக அக்குடியிருப்புக்கள் நகரங்களாக மாற்றமுற்றன.

**02) கிராம சமுதாயத்திற்கும் நகரசமுதாயத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?**

★ நகரத்தில் கல்வீடுகளும், கிராமத்தில் மண்குடிசைகளும் காணப்படும்.

★ கிராமத்தில் விவசாயமும் மந்தை வளர்ப்பும் நகரத்தில் வர்த்தகமும் காணப்படும்

★ நகரினை நிர்வகிக்க ஒரு பிரிவினர் காணப்பட்டனர்.

★ நகரத்தில் நன்கு அமைக்கப்பட்ட பாதைகள், அகழிகள், மதில்கள், சமய வழிபாட்டுத்தலங்கள் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03) நகரத்தின் பண்புகளைக் குறிப்பிடுக?**

- ★ நகரநிர்மாணிப்பு
- ★ வர்த்தகவிருத்தி
- ★ நிரந்தரமான கல் வீடுகள்
- ★ பொழுதுபோக்கு அம்சங்கள்

**04) நாகரிகம் என்றால் என்ன?**

- ★ நகரங்களை மையமாகக் கொண்டு அங்கு வாழ்கின்ற மக்களின் இயல்புகளையும் சிறந்த குணப்பண்புகளையும் வெளிப்படுத்துதலே நாகரிகம் எனப்படும்.

**05) புராதன உலகில் தோற்றம் பெற்ற நாகரிகங்களை அதன் நதிக்கரைகளுடன் குறிப்பிடுக.**

- ★ மொசப்பத்தேமிய நாகரிகம் - யூப்ரடீஸ், தைகிரிஸ் நதி
- ★ எகிப்து நாகரிகம் - நைல் நதி
- ★ இந்தியா நாகரிகம் - சிந்து நதி
- ★ குவாங்கோ நாகரிகம் - குவாங்கோ நதி

**06) புராதன உலகில் தோற்றம் பெற்ற நாகரிகங்களையும் அவை நிலவிய கால கட்டங்களையும் குறிப்பிடுக.**

- ★ கி.மு 1700 - 1000 குவாங்கோ நாகரிகம்
- ★ கி.மு 3100 - 2900 மொசப்பத்தேமிய நாகரிகம்
- ★ கி.மு 3150 - 1070 எகிப்து நாகரிகம்
- ★ கி.மு 2600 - 1990 இந்திய நாகரிகம்

**07) புராதன உலகில் தோற்றம் பெற்ற நாகரிகங்களையும் அதன் மறுபெயர்களையும் குறிப்பிடுக?**

- ★ மொசப்பத்தேமிய - சுமேரிய நாகரிகம்
- ★ எகிப்து நாகரிகம் - நைல்நதி
- ★ இந்திய நாகரிகம் - சிந்துநதி நாகரிகம்
- ★ சீன நாகரிகம் - குவாங்கோநதி நாகரிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08) நாகரிகங்கள் நதிக்கரைகளில் தோற்றம் பெற்றதற்கான காரணம்?**

- ★ நீர் வசதி
- ★ குடிநீர் தேவை கருதி
- ★ விவசாயம் மேற்கொள்வதற்கு
- ★ வளர்ப்பு மிருகங்களின் நீர்த்தேவைக்கு
- ★ வளமான மண்
- ★ போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த

**09) கணித எண்ணக்கருக்களையும் எண்ணும் பழக்கத்தையும் எமக்குப் பழக்கியோர் எந்நாகரிகத்தவர்?**

- ★ மொசப்பத்தேமிய நாகரிகத்தவர்

**10) சீனர்களால் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்டவை எவை?**

- ★ திசையறிகருவி
- ★ கடதாசி
- ★ வெடிமருந்து
- ★ அச்சு இயந்திரம்

**11) முதன் முதல் இறப்பரினை அறிமுகம் செய்தவர் யார்?**

- ★ மாயா நாகரிகத்தவர்

## மொசப்பத்தேமிய நாகரிகம்



மொசப்பத்தேமிய நாகரிக பரம்பலைக் காட்டும் படம்

**12) மொசப்பத்தேமிய நாகரிகம் வளர்ச்சியடைந்த பிரதேசம் யாது?**

- ★ யூப்ரடீஸ், தைக்கிரீஸ் பள்ளத்தாக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13) மொசப்பத்தேமியா இன்று எவ்வாறு அழைக்கப்படுகின்றது?**

★ ஈராக்

**14) 3000 ஆண்டுகளுக்கு முன்னர் மொசப்பத்தேமியா எவ்வாறு அழைக்கப்பட்டது?**

★ நாகரிகத்தின் தொட்டில்

**15) மொசப்பத்தேமியா என்பதன் பொருள் யாது?**

★ இரு நதிகளுக்கு இடைப்பட்டது

**16) மொசப்பத்தேமியா என்பது எம்மொழிச்சொல்?**

★ கிரேக்க மொழிச்சொல்

**17) இற்றைக்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் மொசப்பத்தேமிய நாகரிகம் நிலவியது?**

★ 5000 ஆண்டுகளுக்கு முன்னர்

**18) மொசப்பத்தேமியாவில் அடங்கும் முக்கிய நகரங்கள் எவை?**

★ லாகாஷ்

★ சிஷ்

★ உருக்

★ ஊர்

★ நிப்பூர்

★ இரிடு

**19) மொசப்பத்தேமியாவின் பொருளாதார முறைகள் எவை?**

★ விவசாயம்

★ மிருகவளர்ப்பு

**20) மொசப்பத்தேமியாவில் விவசாயத்திற்காக பயிரிடப்பட்டவைகள் எவை?**

★ தானியங்கள்

★ பழங்கள்

★ காய்கறிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21) மொசப்பத்தேமியர்களால் பயிரிடப்பட்ட முக்கியமான தானியப் பயிர்கள் எவை?**

★ கோதுமை

★ பார்லி

**22) மொசப்பத்தேமியாவில் காணப்படும் கைத்தொழில்கள் எவை?**

★ உலோகம்

★ மட்பாண்டம்

**23) மொசப்பத்தேமியர்கள் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்ட விதங்களைக் குறிப்பிடுக?**

★ ஆற்று நீரை கால்வாய்கள் மூலம் கொண்டு சென்றமை.

★ பயிர்ச்செய்கைக்குத் தகுந்த விதத்தில் நிலத்தை தயார் செய்தமை.

★ விவசாயத்தின் பொருட்டு மிருகங்களைப் பயன்படுத்தியமை. உ-ம்:- உழுவதற்கு, எருக்களைப் பெறுவதற்கு

★ கலப்பை, கல்லாலான மண்வெட்டி பயன்படுத்தப்பட்டமை.



நிலத்தை உழும் விதத்தைக் காட்டும் பழைய மொசப்பத்தேமியக் களிமண் தட்டு

**24) மொசப்பத்தேமியா மக்கள் வணங்கிய பிரதான இயற்கை விடயங்கள் எவை?**

★ மழை

★ காற்று

★ வெள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25) மொசப்பத்தேமியாவில் காணப்பட்ட தெய்வங்கள் எவை?**

- ★ மாடுக்
- ★ சின்
- ★ சமாஸ்
- ★ இஆ

**26) மொசப்பத்தேமியர்களுடைய கடவுள் குழுவின் தலைவராகக் கருதப்பட்டவர் யார்?**

- ★ அனு

**27) மொசப்பத்தேமியாவின் பூமிக்கு அதிபதியான கடவுள் யார்?**

- ★ என்கிகி

**28) மொசப்பத்தேமியாவில் காற்றுக்கும் விவசாயத்திற்கும் அதிபதியான கடவுள் யார்?**

- ★ என்லிலி



மாடுக்



என்கிகி

**29) மொசப்பத்தேமியாவில் காணப்பட்ட பெண் தெய்வம் எது?**

- ★ எஸ்தர்

**30) கடவுளை வழிபட அமைக்கப்பட்ட சமயத்தலங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?**

- ★ சிகுறாத்

**31) சமூகத்தில் முக்கிய இடம் அளிக்கப்பட்டது யாருக்கு?**


- ★ சிகுறாத் எனும் ஆலயங்களிலிருந்த குருமார்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32) சிகுறாத் அமைந்திருக்கும் நகர் எது?**

★ ஊர்



புராதன ஊர் நகரில் அமைந்துள்ள சிகுறாத் ஆலயம்

**33) மொசப்பத்தேமிய மக்களுடைய சமய நம்பிக்கைகள் எவை?**

★ மொசப்பத்தேமிய மக்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர்.
★ இயற்கைக்குரிய தெய்வங்களை திருப்திப்படுத்தவே தாம் வாழ்வதாக வழிபட்டனர்.
★ அனைத்து நகரங்களிலும் கடவுள் இருப்பதாகக் கருதினார்கள்.
★ மனிதனை மீட்கக்கூடிய சக்தி தெய்வங்களுக்குரியது என்று நம்பப்பட்டது.
★ தம்மால் கட்டுப்படுத்த முடியாத சக்திகளை தனக்கு மேல் உள்ள சக்தியின் செயல் எனக் கருதினார்கள்.

**34) மொசப்பத்தேமிய நாகரிகத்தவர்களின் போக்குவரத்து பற்றிய விடயங்கள் எவை?**


★ சிறு கப்பல்களிலும் வர்த்தகம் செய்து கொண்டமை.
★ ஆறுகளில் பயணம் செய்யும் பொருட்டு கப்பல்களை பயன்படுத்தியமை.
★ உணவு, பான வகைகளையும் ஆடை ஆபரணங்களையும் கப்பலில் எடுத்துச் சென்றமை.
★ வர்த்தகப் பொருட்களை கழுதை மீது ஏற்றியமை.
(கழுதை மீது ஏற்றிக்கொண்டு செல்வதை தவளம் என அழைத்தமை).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**35) மொசப்பத்தேமியர்களுடைய வர்த்தகம் பற்றிய விடயங்கள் எவை?**

- ★ மொசப்பத்தேமியர்களில் வடபகுதியில் வாழ்ந்த ஆசீரியர்கள் சிறந்த வர்த்தகர்கள் ஆவார்.
- ★ இவர்கள் தரைமார்க்கமாக வர்த்தகத்தில் ஈடுபட்டனர்.
- ★ வர்த்தகப் பொருட்களை கழுதை மீது ஏற்றிச் சென்றனர்.



மொசப்பத்தேமிய நாகரிகத்தைச் சேர்ந்த கப்பல்.

**36) மொசப்பத்தேமிய சமூகம் எத்தனை பிரிவுகளைக் கொண்டது? அவை எவை?**

- ★ 4
- ★ குருமார்
- ★ உயர்குடி மக்கள்
- ★ கீழ்மட்ட மக்கள்
- ★ அடிமைகள்

**37) மொசப்பத்தேமியாவில் வாழ்ந்த உயர்குடிமக்கள் பற்றிய விடயங்கள் யாவை?**

- ★ ஆண்களும் பெண்களும் தங்கத்தினால் ஆபரணங்களை அணிந்தனர்.
- ★ ஆண்கள் தலைமயிரை நீளமாக வளர்த்தனர்.
- ★ அவர்களுக்கு நீண்ட தாடி இருந்தது.
- ★ பெண்கள் ஒரு தோளை மூடி உடை அணிந்தனர்.
- ★ அவர்களும் தலைமயிரை நீளமாக வளர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**38) மொசப்பத்தேமியாவில் வாழ்ந்த குருமார்கள் பற்றிய விடயங்கள் எவை?**

★ குருமார்கள் அதிகாரம் படைத்தவர்களாக இருந்தனர்.

★ சமய, சடங்குச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

★ குருமார்கள் வைத்தியர்களாகவும் செயற்பட்டனர்.

★ குருமார்கள் தலைமயிரை மழித்திருந்தனர்.

★ செம்மறி ஆட்டின் தோலால் செய்யப்பட்ட உடைகளை அணிந்தனர்.



உயர்குடிகளின் தோற்றம்

**39) மொசப்பத்தேமியாவில் வாழ்ந்த கீழ்மட்ட மக்கள் பற்றிய விடயங்கள் எவை?**

★ தமது வீடுகளில் சாதரண வாழ்க்கை வாழ்ந்தனர்.

★ அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்தனர்.

★ அவர்கள் சம்பளம் பெறும் தொழிலாளர்களாகக் காணப்பட்டனர்.

★ ஆண்களின் ஆடை ஆபரணங்களும் பெறுமதி வாய்ந்ததாகக் காணப்பட்டது.

**40) மொசப்பத்தேமியாவில் வாழ்ந்த அடிமைகள் பற்றிய விடயங்கள் எவை?**

★ இவர்கள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை.

★ இவர்கள் எஜமானின் கீழ் சேவை செய்பவர்களாகக் காணப்பட்டனர்.

**41) உலகில் முதன் முதலில் எழுத்தைத் தோற்றுவித்தவர்கள் யார்?**

★ மொசப்பத்தேமியர்கள்

**42) மொசப்பத்தேமியரின் ஆரம்பகால எழுத்துக்கள் எவ்வடிவில் காணப்பட்டன?**

★ ஆப்பு வடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**43) மொசப்பத்தேமியாவில் ஆரம்ப காலத்தில் எழுதப் பயன் படுத்தப்பட்ட பொருள் யாது?**

★ ஈரக்களிமண் தட்டுக்கள்

**44) உலகில் மிகப்பழமை வாய்ந்த நூல் எங்கே காணப்படுகின்றது?**

★ மொசப்பத்தேமியாவில்

**45) உலகின் மிகப் பழமை வாய்ந்த நூல் எது?**

★ கில்கமேஷ் என்பவரால் எழுதப்பட்ட வீரக்கதை



மொசப்பத்தேமிய எழுத்துத் தொகுதி

**46) உலகின் மிகப் பழமையான சட்டநூல் எது? எங்கே உள்ளது?**

★ ஹமுராபி என்ற அரசனால் எழுதப்பட்ட சட்டக்கோவை

★ மொசப்பத்தேமியாவில்

**47) யூப்பிரட்டீஸ், தைகிரிஸ் நதி கலக்கும் கடல் எது?**

★ பாரசீக குடாக்கடல்

**48) மொசப்பத்தேமியா நாட்டின் தலைவன் யார்?**

★ அரசன்

**49) ஹமுராபி மன்னன் எந்த வம்சத்தைச் சேர்ந்தவன்?**

★ ஆகேடிய வம்சம்

**50) மொசப்பத்தேமியாவில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் யாவை?**

★ இங்கு எழுத்துக்கலை தோற்றம் பெற்றமை.

★ உலகவரைபடம் வரையப்பட்டமை.

★ சில்லின் உபயோகம் காணப்பட்டமை.

★ நாணயங்கள் பயன்படுத்தப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**51) மொசப்பத்தேமியர்களிடமிருந்து தற்காலத்தவர்கள் பெற்றுக் கொண்ட விடயங்கள் யாவை?**

★ எழுத்துக்கலை.
★ 1வது சட்டவரைபு
★ விஞ்ஞான அறிவு
★ சில்லு
★ வண்டில்கள், கப்பல்கள் பயன்பாடு
★ கட்டடக்கலை
★ கணித எண்ணக்கரு

## சிந்துநதி நாகரிகம்



சிந்துநதி நாகரிகப் பரம்பலைக் காட்டும் படம்

**52) சிந்துநதி நாகரிகத்தின் மறுபெயர்களைக் குறிப்பிடுக?**

★ இந்திய நாகரிகம்
★ மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரிகம்

**53) சிந்துநதி நாகரிகம் வளர்ச்சியடைந்த பிரதேசத்தினைக் குறிப்பிடுக.**

★ இந்தியாவின் வடமேற்குப் பகுதியினூடாக பாய்ந்து செல்லும் சிந்துநதியை மையமாகக் கொண்டது.

**54) சிந்துநதி நாகரிகம் நிலவிய பிரதேசம் இன்று எப்பிரதேசங் களுக்கு உரியதாகக் காணப்படுகின்றது?**

★ ஆப்கானிஸ்தானுக்கும், பாகிஸ்தானுக்கும் இந்தியாவின் வடமேற்குப் பிரதேசத்திற்கும் உரியதாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**55) சிந்துநதி நாகரிகம் நிலவிய காலம் எது?**

★ கி.மு. 2600 - 1990

**56) சிந்துநதி நாகரிகத்திற்குட்பட்ட பிரதான நகரங்களினைக் குறிப்பிடுக.**

★ மொகஞ்சதாரோ
★ ஹரப்பா

**57) சிந்துநதி நாகரிகத்திற்குட்பட்ட நகரங்களில் நிலவிய சனத்தொகை யாது?**

★ 50 இலட்சம் மக்கள்

**58) சிந்துநதி நாகரிக மக்கள் பயன்படுத்திய உலோகங்களினைக் குறிப்பிடுக.**

★ செம்பு
★ வெண்கலம்
★ ஈயம்
★ வெள்ளி

**59) சிந்துநதி நாகரிக மக்களின் வாழ்க்கை முறை பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.**


★ உலோகப் பாவனை காணப்பட்டமை.
★ செங்கற்கள் கொண்ட வீடுகளை வசிப்பிடமாகக் கொண்டமை.
★ தமது வீடுகளில் உயர்நிலையான நீர்க்குழாய்களைப் பயன்படுத்தியமை.
★ திட்டமிடப்பட்ட நகரங்களில் வாழ்ந்தமை.
★ கோதுமை, வாட்கோதுமை என்பவற்றை பிரதான உணவாகப் பயன்படுத்தியமை.

**60) சிந்துநதி நாகரிகத்திற்குட்பட்ட நகரங்களைக் குறிப்பிடுக.**

★ மொகஞ்சதாரோ
★ ஹரப்பா
★ டொலவீர
★ கலிபன்கள்
★ லோத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழைய மொகஞ்சதாரோ நகர்



சிந்துநதி நாகரிக நகரச்சிதைவுகள்

**61) தொல்பொருள் அகழ்வின் போது நகரமொன்றின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்ட நாகரிகம் எது?**

★ சிந்துநதி நாகரிகம்

**62) மதகுரு ஒருவரின் உருவம் கண்டுபிடிக்கப்பட்ட நாகரிகம் எது?**

★ சிந்துநதி நாகரிகம்

**63) சிந்துநதி ஊற்றெடுக்கும் பிரதேசம் யாது?**

★ இந்தியாவின் வடமேற்குப் பிரதேசம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**64) சிந்துவெளி நாகரிகத்தின் சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்துக.**


★ ஆண், பெண் தெய்வங்களை வழிபட்டமை
★ பெண் தெய்வ வழிபாடு பிரபலமடைந்தமை.
★ ஓநாய் வழிபாட்டு முறை காணப்பட்டமை.
★ பூஜைகளை நிறைவேற்ற மதகுருமார் காணப்பட்டமை.
★ புகழ்வாய்ந்த தெய்வ வழிபாடாக தாய்த் தெய்வ வழிபாடு காணப்பட்டமை.

**65) சிந்தநதி நாகரிகத்தின் நகரப்பண்புகளைப் பட்டியற்படுத்துக.**

★ திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட நகரங்கள்.
★ நேர்த்தியான வீதிகள்.
★ நீர் வழிந்தோடக்கூடிய வடிகால்கள்.
★ எல்லா வீடுகளிலும் கழிப்பறை வசதிகள்.
★ எல்லா வீடுகளிலும் குளியல் தடாகங்கள்.
★ அதி உயர்தரத்தில் நகர நிர்மாணம் காணப்பட்டமை.
★ நகரங்கள், உள்நகர், புறநகர் எனக் காணப்பட்டமை.



விளையாட்டு மண் வண்டி



கிணறு

**66) சிந்துநதி நாகரிக எழுத்துக்கலை பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.**

★ எழுத்துக்கலை வளர்ச்சியைக் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகள் மூலம் அறியலாம்.
★ இலச்சினைகளில் வலமிருந்து இடமாக எழுதப்பட்ட குறிப்பு இனங்காணப்பட்டமை.


**67) சிந்துநதி நாகரிகத்தின் இலச்சினையில் காணப்படும் மிருகம் எது?**

★ காண்டாமிருகம் (ரைனோசிரஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலச்சனை


மதகுரு உருவம்

**68) சிந்துநதி நாகரிகத்தின் கலை நுட்பங்களுக்கான சான்றுகளை வெளிப்படுத்தும் உதாரணங்களைத் தருக**

★ நடனமாதுவின் உருவச்சிலை
★ விளையாட்டு வண்டி.
★ முத்திரையில் உள்ள சித்திரங்கள்
★ கல்பதித்த மாலைகள்
★ மதகுருவின் சிலை

**69) சிந்துநதி நாகரிகம் மூலம் இவ்வுலகுக்கு கிடைத்த கொடைகள் எவை?**

★ நீர்வடிகால் கழிவகற்றல் முறை.
★ இலச்சினைகளின் எழுத்துத் தொகுதி
★ கட்டிடக்கலை தொழில்நுட்பம்.
★ உலோக நாணயப்பயன்பாடு.
★ இந்துமதப் பண்புகள்.
★ நகர திட்டமிடல் முறைகள்.
★ ஆடம்பரம் மிக்க நகர நாகரிகம்.

## எகிப்திய நாகரிகம்

**70) எகிப்து நாகரிகத்தின் அமைவிடம் யாது?**

★ ஆபிரிக்கா கண்டத்தில் எகிப்துப் பிரதேசத்தின் நைல்நதியை அண்டி வளர்ச்சியடைந்துள்ளது.

**71) நைல்நதி நாகரிகம் நிலவிய காலப்பகுதி யாது?**

★ கி.மு. 3150 தொடக்கம் கி.மு 1070



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எகிப்திய நாகரீக பரம்பலைக் காட்டும் படம்

**72) நைல்நதி ஊற்றெடுக்கும் பிரதேசத்தையும் கலக்கும் கடலினையும் குறிப்பிடுக.**

★ ஆபிரிக்காவின் விக்டோரியா ஏரியில் ஆரம்பித்து எகிப்து ஊடாக பாய்ந்து மத்திய தரைக்கடலில் கலக்கிறது.

**73) எகிப்திய நாகரிகத்தின் ஆட்சிமுறை பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.**

★ பாராவோ எனப்படும் பரம்பரையைச் சேர்ந்தவர்களால் ஆட்சி செய்யப்பட்டது.

★ இங்கு துத்மோசிஸ், ரமேஷஸ் எனப்படும் அரசர்கள் ஆட்சி செய்தார்கள்.

★ ஆட்சி அதிகாரம் தெய்வத்திடமிருந்து பெறப்பட்டதாக நம்பப்படுகின்றது.

★ அரசன் உலகில் வாழ்ந்த போது ஓரஸ் தெய்வமாகவும் இறந்த பின்னர் ஓசிரிஸ் கடவுளாகவும் மதிக்கப்பட்டார்.

**74) எகிப்து நாகரிகத்தவர்களின் பொருளாதாரப் பண்புகளைக் குறிப்பிடுக.**

★ இவர்களின் பிரதான ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது.

★ நைல்நதிப் பள்ளத்தாக்கில் கோதுமை, வாட்கோதுமை, மிலட் போன்றவை பயிரிடப்பட்டன.

★ செங்கடலின் ஆரம்பம் முதல் முடிவு வரை கடல்வழி வர்த்தகத்தில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**75) எகிப்திய நாகரிகத்தவர்களின் சமய வழிபாட்டு நம்பிக்கைகளினைக் குறிப்பிடுக.**

- ★ இவர்களின் சமய நம்பிக்கைகள் பற்றி அறிவதற்கு 'மரணித்தவர்களின் புத்தம்' எனும் நூல் ஆதாரமாக அமைகின்றது.
- ★ தெய்வங்கள், பேய்கள் பற்றியும் அவர்களின் ஆற்றல்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய முறைகள் பற்றியும் சடங்கு சம்பிரதாயம் பற்றியும் இவர்கள் அறிந்திருந்தனர்.

**76) எகிப்திய நாகரிகத்தவர்களிடமிருந்து இவ்வுலகிற்குக் கிடைத்த கொடைகள் எவை?**

- ★ பிரமிட்டுக்கள்.
- ★ சித்திர எழுத்துக்கள்
- ★ சடலங்களை மருந்திட்டு நீண்டகாலமாக பாதுகாக்கும் முறைகள்.
- ★ உலோகக் கைத்தொழில்
- ★ தங்க ஆபரணத்தொழிற்பாடு
- ★ எழுத்துத்தொகுதி



பிரமிட்

**77) எம்மன்னர்களின் சடலங்கள் பிரமிட்டுக்குள் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன?**

- ★ பாராவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**78) சித்திர எழுத்துக்கள் என்றால் என்ன?**

★ பல்வேறுபட்ட மிருகங்களினதும், பொருட்களினதும் உருவங்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட எழுத்துக்கள் சித்திர எழுத்துக்கள் எனப்படும்.



எகிப்திய சித்திர எழுத்துக்கள்

**79) எகிப்தின் தலைநகர் எது?**

★ கெய்ரோ

**80) பிரமிக்கத்தக்க வகைகயில் எகிப்தில் அமைக்கப்பட்டுள்ள நிர்மாணம் எது?**

★ பிரமிட்

**பிரமிட்டுகள்**

★ மரணத்தின் பின் வாழ்க்கையுண்டு என்ற நம்பிக்கையால் பிரமிட்டுக்களை அமைத்தனர்.

★ மருந்துகளிட்டு அடக்கம் செய்யப்பட்ட உடல்கள் இன்றும் அழியாமல் உள்ளன, இவைகள் பிரமிட்டுக்குள்ளேயே வைக்கப்பட்டுள்ளன.

★ இறந்தவர்களால் பயன்படுத்தப்பட்டவைகளும் அப் பிரமிட்டுக்குள் வைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**81) கீசா பிரமிட் அமைந்துள்ள இடம் எது? அதனை நிர்மானித்தவர் யார்?**

★ இடம் : எகிப்தின் கெய்ரோ

★ நிர்மாணித்தவர் : கு∴பு மன்னன்

**82) பாராவோ மன்னர்களின் மறுபெயர் யாது?**

★ பார்வோன்

**83) கீசா பிரமிட் அமைக்கப்பட்ட காலப்பகுதி எது ?**

★ கி.மு 2630 - 2611

**84) எகிப்திலுள்ள உலக அதிசயம் எது?**

★ கீசா பிரமிட்

**85) அகனெட்டான் என்பவரின் மனைவி யார்?**

★ நெபநெபவுட்டேன் நெபட்டிட்டி

**86) அகனெட்டான் மன்னனின் மறுபெயர் யாது?**

★ அக்ஹெனதன்

**87) நெபநெபவுட்டேன் நெபட்டிட்டி என்பவர் வாழ்ந்த காலப்பகுதி யாது?**

★ கிமு.1370 - 1339

**88) நெபநெபவுட்டேன் நெபட்டிட்டிக்கு முன்னர் ஆட்சி செய்தவர் யார்?**

★ அகனெட்டான்

**89) எகிப்து நாகரிகத்தில் வாழ்ந்த பேரழகி யார்?**

★ நெபநெபவுட்டேன் நெபட்டிட்டி

**90) எகிப்திய நாகரிக எழுத்துக்கலை பற்றிக் குறிப்பிடுக.**

★ 3000 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட உருவ வடிவிலான எழுத்துக்கள் காணப்பட்டன.

★ எகிப்தில் எழுதுவதற்கு பப்பிரிஸ் புல் பயன்படுத்தப்பட்டது.

★ எழுதும் போது சொற்பிரிப்புக்களோ இடைவெளிகளோ காணப்படவில்லை.

★ 700 தொடக்கம் 800 வரையான எழுத்துக்கள் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எகிப்திய சித்திரம்

**91) எகிப்தில் பிரமிட்டுக்கள் மேற்குக் கரையில் அல்லது திசையில் அமைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?**

★ சூரியன் உதிக்கும் போது உடலில் இருந்து பிரியும் உயிரானது வானத்தில் பயணம் செய்து சஞ்சரித்து விட்டு சூரியன் மறையும் போது சரீரத்துடன் இணைந்து கொள்வதாக நம்பிக்கை நிலவிய காரணத்தினால் பிரமிட்டுக்கள் மேற்குத்திசையில் அமைக்கப்பட்டுள்ளன.



துட்டன்காமன்



நெபநெபவுட்டேன் அரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**92) மம்மி என்றால் என்ன?**

★ இறந்த உடலை நீண்டகாலம் பேணி வைத்திருக்கும் முறை மம்மி முறை எனப்படும்.



செல்வந்தர் ஒருவரின் மம்மி

**93) மம்மி முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியோர் யார்?**


★ எகிப்திய நாகரிகத்தவர்

**94) துட்டன் காமன் மன்னனது மறுபெயர் யாது?**

★ டூடன் காமன்

**95) துட்டன் காமனு ஆட்சிக்காலம் யாது?**

★ கி.மு. 1332 - 1323



எகிப்திய மரணச்சடங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) காலப்போக்கில் கிராமங்களை விட்டுப் பிரிந்து நகரங்களில் வாழத் தொடங்கியவர்கள் யாவர்?

1. ஏழை 2. செல்வந்தர்கள்
3. தலைவர்கள் 4. அடிமைகள்

02) பாதைகள், அகழிகள், மதில்கள் என்று சகல வசதிகளையும் உள்ளடக்கிய இடம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

1. நகரம் 2. கிராமம்
3. சமூகம் 4. நாடு

03) நகரத்தையும், அங்கு வாழ்ந்தோர், அவர்கள் வாழ்ந்த விதம் என்பவற்றை கூறுவது யாது?

1. நூல் 2. வரலாறு
3. நாகரிகம் 4. பண்பு

04) நிமிடம் ஒன்றில் 60 வினாடி மணித்தியாலத்தில் 60 நிமிடம் எனும் எண்கணித எண்ணக்கருக்களை எண்ணும் பழக்கத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாகரிகம் எது?

1. சீனா 2. சிந்துநதி
3. எகிப்து 4. மொசப்பத்தெமியா

05) வெடிமருந்து, திசையறிகருவி போன்றவற்றை கண்டுபிடித்த நாகரிகம் யாது?

1. எகிப்து 2. சீனா
3. சிந்து 4. மொசப்தேமியா

06) முதன்முதலல் இறப்பரை கண்டுபிடித்தது எந்த நாகரிகம்

1. எகிப்பு 2. சீனா
3. மாயா 4. சிந்து

07) யூப்பிரடீஸ், தைகிரிஸ் நதிப்பள்ளத்தாக்கில் வளர்ச்சி அடைந்த நாகரிகம் எது?

1. மொசப்பத்தேமியா 2. சீனா
3. எகிப்து 4. சிந்து

08) மொசப்பத்தெமியா நாகரிகம் தற்பொது அடங்கும் நாடு யாது?

1. இலங்கை 2. சீனா
3. மக்கா 4. ஈராக்

09) மொசப்பத்தேமியா என்பதன் பொருள் யாது?

1. இரு நதிகளுக்கு இடையே 2. ஓர் நாடு
3. இரு நதிகள் 4. பழைய நாகரிகம்

10) மொசப்பத்தேமியா நாகரிகத்திற்குரிய காலப்பகுதி யாது?

1. கிமு 3200 - 2500 2. கிமு 3100 - 2900
3. கி.மு 3100 - 2900 4. கிமு 4500 - 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) விவசாய நிலத்தை உருவாக்குவதற்காக மொசப்பத்தேமியா நாகரிகத்தவர் எதனை பயன்படுத்தினர?
1. மிருகங்கள் 2. உழவு இயந்திரங்கள்
3. மனிதர் 4. கிராமவாசிகள்

12) சிகுறாத் ஆலயம் எந்த நாகரிகத்திற்கு உரியது?
1. சிந்து 2. சீனா
3. மொசப்பத்தேமியா 4. எகிப்து

13) மொசப்பத்தேமியா மக்கள் எதனை தெய்வமாக கருதி வாழ்ந்தனர்?
1. வீடு 2. மிருகம்
3. விவசாயம் 4. இயற்கை

14) மொசப்பத்தேமிய நாகரிகத்தவர்களின் கடவுள் குழுவின் தலைவர் எவ்வாறு அழைக்கப்பட்டவர்?
1. காற்று 2. அனு
3. சிவன் 4. நாக

15) பூமிக்கு அதிபதியான கடவுள் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
1. அனு 2. சிகுறாத்
3. என்கிகி 4. என்லிலி

16) என்லிலி என்ற பெயரால் எதற்கு அதிபதியான கடவுள் வணங்கப்பட்டார்?
1. பூமி 2. வானம்
3. நிலம் 4. காற்று

17) மொசப்பத்தேமியாவின் வடக்கு பகுதியில் வாழ்ந்தவர்கள் யார்?
1. அசீரியர்கள்
2. வேடுவர்
3. நீக்ரொயிட்
4. ஆதிமனிதன்

18) தரைமார்க்கமாக, கழுதை மீது ஏற்றிகொண்டு வர்த்தகம் செய்தல் போன்ற முறை எவ்வாறு அழைக்கப்பட்டது?
1. வர்த்தக முறை 2. சந்தை
3. தவளம் முறை 4. பண்டமாற்று

19) காண்டாமிருகம் உருவம் பதித்த இலச்சினை எந்த நாகரிகத்திற்கு உரியது?
1. சீனா 2. சிந்துவெளி
3. மொசப்பத்தேமியா 4. எகிப்து

20) எகிப்து நாகரிகம் எந்த நதிக்கு அண்மையில் இருந்தது?
1. கங்கை 2. களனி
3. மகாவலி 4. நைல்நதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) எகிப்து நாகரிகம் நிலவியது எந்தக் காலப்பகுதியிலாகும்?

1. கி.மு 3150  2. கி.மு 4500
3. கி.மு 2050  4. கி.மு 3510

22) எகிப்திய நாகரிகம் அடங்கும் நாடு எது?

1. சீனா  2. எகிப்து
3. இந்தியா  4. இலங்கை

23) எகிப்து நாகரிகம் எந்தப் பரம்பரையை சேர்ந்த அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டது?

1. தமிழ் வம்சம்  2. இராஜசிங்க வம்சம்
3. இலம்பகர்ணவம்சம்  4. பாராவோ வம்சம்

24) எகிப்திய நாகரிகத்தவரின் பிரதான சீவனோபாயம் யாது?

1. கல்வி  2. மந்தை வளர்ப்பு
3. விவசாயம்  4. கலை

25) நீர்ப்பாசனத் தொகுதி அமைப்பதில் சிறந்து விளங்கிய நாகரிகம் எது?

1. எகிப்து  2. சீனா
3. சிந்து  4. மொசப்பத்தேமியா

26) பாராவோ மன்னர்களின் சடலங்கள் எதனுள் புதைக்கப்பட்டன?

1. புதைகுழிகளில்  2. பிரமிட்டுக்களில்
3. மயானத்தில்  4. கல்லறையில்

27) எகிப்தியர் காலத்தில் சிறந்து விளங்கிய எழுத்து தொகுதி எவ்வாறு அழைக்கப்பட்டன?

1. எகிப்திய சித்திரங்கள்  2. உருவங்கள்
3. எகிப்திய சித்திர எழுத்துக்கள்  4. எகிப்திய கலைகள்

28) எங்கு உள்ள பிரமிட்டுக்கள் ஏழு அதிசயங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது?

1. சீனா  2. கீசா
3. மொசப்பத்தேமியா  4. ஜப்பான்

29) பாராவோ மன்னனான அகனெட்டான் என்பவரின் மனைவியின் பெயர் யாது?

1. நெபநெபவுட்டேன்  2. கிளியோபட்ரா
3. குசுமாசனதேவி  4. லீலாவதி

30) எகிப்திய நாகரிகத்தில் இறந்த ஒருவரின் உடலை நீண்டகாலம் பேணிவைக்கும் முறை எவ்வாறழைக்கப்பட்டது?

1. டூடன்  2. பிரமிட்
3. பூதவுடல்  4. மம்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31) "மம்மி" முறையை உலகிற்கு அறிமுகம் செய்த நாகரிகத்தவர்கள் யார்?
1. மொசப்பத்தேமியா 2. சிந்து
3. எகிப்து 4. சீனா

32) கி.மு 1332 - 1323 இற்கு இடைப்பட்ட காலத்தில் எகிப்தை ஆட்சி செய்த மன்னன் யார்?
1. துட்டன்காமன் 2. துட்டகைமுனு
3. குளோடியஸ் 4. எல்லாளன்

33) எகிப்திய நகரின் தலைநகரத்தில் காணப்படும் எகிப்திய நாகரிகத்தினை பறைசாற்றும் விடயம் யாது?
1. பிரமிட்
2. சித்திர எழுத்துக்கள்
3. நெபநெவுட்டேன் அரசியின் சிலை
4. மம்மி

34) மொசப்பத்தேமிய நாகரிக்கத்தவர் வர்த்தகம் செய்ய பெரிதும் பயன்படுத்திய வாகனம்?
1. தவளம் முறை 2. தரைவழி
3. கழுதை 4. கப்பல்

35) என்கிகி, என்லிலி என்ற கடவுள்கள் எந்த நாகரிகத்துடன் தொடர்புடையது?
1. சீனா 2. சிந்து
3. மொசப்பத்தேமியா 4. எகிப்து

36) துட்டகாமன் மன்னனின் முகமூடி எதனால் உருவாக்கப்பட்டது,
1. செப்பு 2. தங்கம்
3. பித்தளை 4. இரும்பு

37) அகனெட்டான் மன்னன் இறந்த பின்னர் எகிப்தை ஆட்சி செய்த அரசி யார்?
1. லீலாவதி 2. குசுமாசனதேவி
3. கிளியோபற்ரா 4. நெபநெபவுட்டேன்

38) நெபநெவுட்டேன் நெபட்டிட்டி அரசி வாழ்ந்த காலப்பகுதி யாது?
1. கிமு 1270 - 1200 2. கி.மு. 2500 - 2150
3. கிமு 1370 - 1330 4. கிமு 1100 - 1000

39) ஆற்று நீரைக் கால்வாய் மூலம் பெற்று விவசாயம் செய்த நாகரிகம் யாது?
1. எகிப்து 2. சிந்து
3. சீனா 4. மொசப்பத்தேமியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40) எகிப்து நாகரிகத்தவர்களால் உலகிற்கு கிடைத்த கொடை யாது?
1. எண்கணிதம் 2. பிரமிட்
3. கப்பல் 4. எழுத்துக்கள்

41) நகரத்தையும் அங்கு வாழ்ந்தோர், அவர்கள் வாழ்ந்த விதம் என்பவற்றை கூறுவதே .......................... ஆகும்.

42) வட்டத்தில் $360^{\circ}$ உண்டென நாம் கணித பாடத்தில் கற்க .......................... நாகரிகத்தவர்களே காரணமாகும்.

43) அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தவர்கள் .......................... நாகரிகத்தவரே ஆகும்.

44) மாயா நாகரிகத்தவரே முதன் முதலில் .......................... உலகிற்கு அறிமுகப்படுத்தினர்.

45) மொசப்பத்தேமிய நாகரிகம் .......................... நதிப் பள்ளத்தாக்கில் வளர்ச்சியடைந்தது.

46) மொசப்பத்தேமிய நாகரிகத்தவர் வழிபட அமைத்த ஆலயங்கள் .......................... என அழைக்கப்பட்டன.

47) காற்றுக்கும் விவசாயத்திற்கும் அதிபதியான கடவுள் .................. என அழைக்கப்பட்டார்.

48) ஆபிரிக்கா கண்டத்தினூடாகப் பாய்ந்து செல்லும் நைல்நதியின் கீழ்ப்பகுதியிலேயே .......................... நாகரிகம் தோற்றம் பெற்றது.

49) பராவோ மன்னர்களின் சடலம் .......................... புதைக்கப்பட்டன.

50) நீண்டகாலம் பேணி வைத்திருக்கக் கூடிய .................... முறையை எகிப்திய நாகரிக மக்களே உலகிற்கு அறிமுகம் செய்தனர்.

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 2) | 1 | 3) | 3 | 4) | 4 | 5) | 2 |
| 6) | 3 | 7) | 2 | 8) | 4 | 9) | 1 | 10) | 3 |
| 11) | 1 | 12) | 3 | 13) | 4 | 14) | 2 | 15) | 3 |
| 16) | 4 | 17) | 1 | 18) | 3 | 19) | 2 | 20) | 4 |
| 21) | 2 | 22) | 2 | 23) | 4 | 24) | 3 | 25) | 1 |
| 26) | 2 | 27) | 3 | 28) | 2 | 29) | 1 | 30) | 4 |
| 31) | 3 | 32) | 1 | 33) | 1 | 34) | 4 | 35) | 3 |
| 36) | 2 | 37) | 4 | 38) | 3 | 39) | 4 | 40) | 2 |

41) நாகரிகம் 42) மொசப்பத்தேமியா
43) சீனா 44) இறப்பர்.
45) யூப்பிரட்டீஸ், தைகிறிஸ் 46) சிகுறாத்
47) என்லிலி 48) எகிப்து
49) பிரமிட் 50) மம்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 04 இலங்கையில் குடியேற்றங்கள் நிறுவப்படல்

**அறிமுகம்**

எந்த ஒரு நாட்டிலும் அல்லது பிரதேசத்திலும் மக்கள் முதன்முதல் வந்து குடியேறுவது குடியேற்றம் எனப்படும். இதனடிப்படையில் இந்நாட்டிற்கு வந்து குடியேறியவர்கள் இந்தநாட்டை எவ்வாறு விருத்தியடையச் செய்தார்கள் என்பதை இப்பாடத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**01) குடியேற்றம் என்றால் என்ன?**

★ ஒரு நாட்டிலோ அல்லது பிரதேசத்திலோ மக்கள் முதன் முதல் வந்து குடியேறுவது குடியேற்றம் எனப்படும்.

**02) எமது நாட்டில் எத்தனையாண்டுகளுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்தமைக்கான அடையாளம் காணப்படுகின்றது?**

★ ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்.

**03) எமது நாட்டில் மக்கள் வாழ்ந்த ஆரம்ப யுகம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?**

★ கற்காலம் (வேட்டை யுகம்)

**04) கற்காலம் என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?**

★ கற்களால் செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி மக்கள் தங்களுடைய பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்தமையால் அது கற்காலம் எனப்பட்டது.

**05) இலங்கையின் ஆரம்பகால குடியேற்றங்கள் காணப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.**

★ பாகியன்கலக் குகை.

★ கித்துல்கலக் குகை.

★ பட்டதொம்பலெனக் குகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06) இலங்கையின் ஆரம்பகால குடியிருப்பாளர்களின் வாழ் விடங்களைக் குறிப்பிடுக.**

★ மழை காலத்தில் கற்குகைகளிலும் மழையில்லாத காலங்களில் மிருகங்கள் நடமாடும் திறந்த வெளிகளிலும் வாழ்ந்தனர்.

**07) இலங்கையில் ஆரம்பக் குடியிருப்பாளர்களின் உணவுப் பழக்கவழக்க முறை பற்றிக் குறிப்பிடுக.**

★ அலைந்து திரிந்து வேட்டையாடியும் தாவர உணவினை சேகரித்தும் உணவுத் தேவையை பூர்த்தி செய்தமை.

★ தாவர உணவுகளாக காட்டுப்பலா, காட்டு, வாழை, கிழங்கு வகைகள் போன்றவற்றை உட் கொண்டமை.

★ மான், முயல், மர அணில், முள்ளம்பன்றி, ஆமை, உடும்பு, நத்தை போன்ற வற்றை பிரதான மாமிச உணவாக உட் கொண்டமை.

★ உணவில் உப்பினை பயன் படுத்திக் கொண்டமை.

★ உணவினை தீயில் சுட்டுப் பதப்படுத்தி உண்டமை.

★ நன்னீர் மீனினங்களான தித்தயா என்பவற்றை உட்கொண்டமை.



உணவு சேகரித்தல்

**08) இலங்கையின் கற்கால மக்கள் பயன்படுத்திய உபகரணங்களைக் குறிப்பிடுக.**

★ அன்றாடத் தேவைகளுக்கு கற்களால் செய்யப்பட்ட கற்கருவிகளை உபகரணங்களாகப் பயன்படுத்தியமை.


★ மிருகங்களின் எலும்புகளினாலும் தடிகளாலும் செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தியமை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09) இலங்கையின் ஆரம்பகால குடியிருப்பாளர்கள் (கற்கால மக்கள்) அணிந்து கொண்ட ஆபரணங்களையும் அலங்கார முறைகளையும் குறிப்பிடுக.**


- ★ கழுத்தை அலங்கரிக்க சுறா மீனின் பல்லினால் மணிகள் செய்து பயன்படுத்திக் கொண்டமை.
- ★ சிற்பியைத் துளைத்து கழுத்தில் அணியும் அட்டியல் செய்யப்பட்டமை.
- ★ பெண்கள் தம்மை அலங்கரித்துக் கொள்ள சிவப்பு, மஞ்சள் நிற பூசு கற்களைப் பயன்படுத்தியமை.



பாகியன்கல குகையில் கண்டெடுக்கப்பட்ட சிப்பியினாலான அட்டியல்




கிழங்கு வகைகளைச் சேகரித்தல்



கித்துல்கல குகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாகியன்கல குகை

**10) கற்கால மக்களின் சடங்கு முறை பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.**

- ★ இறந்தவர்களின் உடல்களை வளைத்தபடி புதைத்தமை.
- ★ இறந்தவர்களின் எலும்புகளில் நிறப்பூச்சுக்களை மேற்கொண்டமை.
- ★ இறந்தவர்களின் உடலைப் புதைத்து பின்னர் எலும்புக் கூடுகளை வெளியில் எடுத்து தகனம் செய்து அச்சாம்பலை பானையில் வைத்து மண்ணால் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்தமை.

**விஜயனின் வருகையும் குடியேற்றங்களின் பரம்பலும்**

**11) கற்காலம் எத்தனை ஆண்டுகளுக்கு முன் நிலவியது?**

- ★ ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்

**12) இற்றைக்கு 5000 - 4500 இடைப்பட்ட காலப்பகுதியில் நிலவிய யுகம் எது?**

- ★ ஆரம்ப இரும்பு யுகம்

**13) இரும்பு யுகத்தில் வாழ்ந்தவர்கள் முன்னேற்றம் அடைந்திருந்தமைக்கான சான்றுகளைக் குறிப்பிடுக.**

- ★ மட்பாண்டம் செய்யப் பழகிக் கொண்டமை.
- ★ இரும்பு உலோகப் பாவனை இடம்பெற்றமை.
- ★ நிரந்தர வீடுகளில் வசித்தமை.
- ★ விவசாயம் செய்யப் பழகிக் கொண்டமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14) ஆரம்ப இரும்பு யுக மனிதர்களின் உறைவிடம் பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.**

★ ஆரம்பத்தில் மலைப் பிரதேசங்களிலும் பின்னர் சமவெளிகளையும் நோக்கி நகர்ந்தமை.

★ இலைகுழைகளினால் கூரைவேயப்பட்ட வீட்டில் வசித்தமை.

★ கூரைகளை வேய்வதற்கு மானா, இலுக்குப்புல் என்பவற்றையும் பயன்படுத்தியமை.

★ மண் குடிசைகளில் வாழ்ந்தமை.

**15) ஆரம்ப இரும்பு யுக மனிதர்களின் உணவு முறைகளைக் குறிப்பிடுக.**


★ தானியங்களை உணவாக உட்கொண்டமை


**16) ஆரம்ப இரும்பு யுக மனிதர்களின் உபகரணப் பாவனை பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.**

★ கல்லாயுதங்களை சிறிய அளவில் உபயோகித்தமை.

★ மட்பாண்ட உபகரணங்களை தயார் செய்து கொண்டமை.

★ இரும்பு உலோகத்தினைப் பயன்படுத்தி உபகரணங்களை தயார் செய்து கொண்டமை.





பழைய மட்பாண்ட உபகரண சிதைவும் அதன் மாதிரியும்

**17) இரும்பு யுக மனிதர்களின் சடங்குமுறை பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.**


★ இறந்த உறவினர்களுக்கு கல்லறை கட்டியமை.

★ கல்லறை ஓட வடிவிலான மயானங்களை நிர்மாணித்துக் கொண்டமை.


★ அஸ்திக் கலசங்களை (சாம்பலை பானையில் வைத்து) அடக்கம் செய்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புராதன மண் குடிசை



புராதன கால அரைக்கும் கல் மற்றும் உபகரணங்கள்.

**18) விஜயனும் அவனது 700 தோழர்களும் இந்தியவிலிருந்து இலங்கைக்கு எத்தனையாம் ஆண்டு வந்தனர்?**

★ *கி.544*

**19) விஜயன் எத்தேசத்திலிருந்து இலங்கைக்கு வந்தான்?**

★ இந்தியாவின் "லாடா" தேசத்தின் சிங்க புரத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஜயன்**

| | | |
|---|---|---|
| ★ இயற்பெயர் | : | விஜயகுமாரன் |
| ★ தாய் | : | சிங்கசீவிலி |
| ★ தந்தை | : | சிங்கபாகு |
| ★ பூர்வீகதேசம் | : | சிங்கபுரம் (வட இந்தியா) |
| ★ புறப்பட்ட ஆண்டு | : | கி.மு. 543 |
| ★ இலங்கை வந்தடைந்த ஆண்டு | : | கி.மு. 544 |
| ★ நிறுவிய குடியேற்றம் | : | தமன்னாவ |
| ★ சகோதரன் | : | சுமித்தன் |
| ★ மனைவிமார் | : | குவேனி, மதுரை இளவரசி விஜயை |
| ★ இலங்கையில் தரை இறங்கிய இடம் | : | தமன்னாவ அல்லது தம்பபன்னி |

**20) விஜயன் இலங்கை வந்தபோது இடம்பெற்ற முக்கிய நிகழ்வு யாது?**

★ புத்தபெருமான் பரிநிர்வாணமடைந்தமை.

**21) தம்பபன்னி இலங்கையின் எத்திசையில் அமைந்துள்ளது?**

★ இலங்கையின் மேற்குக் கரையோரத்தில்



விஜயனின் வருகையைச் சித்திரிக்கும் கற்பனைச் சித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22) இலங்கைக்கு வருகை தந்த முதலாவது ஆரியக் குழுவின் தலைவர் யார்?**

★ விஜயன்

**23) விஜயன் இலங்கைக்கு வரும்போது இங்கு வாழ்ந்த மக்கள் குழுவினர் யார்?**

★ இயக்கர்

★ நாகர்

★ புலிஞ்ஞர் (வேடர்)

**24) விஜயன் இலங்கை வரும் போது நூல் நூற்றுக் கொண்டிருந்த பெண் யார்?**

★ குவேனி

**25) குவேனி நூற்ற நூல் எது?**

★ பருத்தி நூல்

**26) குவேனி எக்குலத்தினைச் (கோத்திரம்) சேர்ந்தவள்?**

★ இயக்கர் குலம்

**27) விஜயனுடைய தோழர்களை தன்னுடைய மாய சக்தியால் பிடித்து ஒளித்த பெண் யார்?**

★ குவேனி

**28) விஜயனுக்கும், குவேனிக்கும் பிறந்த பிள்ளைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**

★ ஜீவகத்த

★ திசால (திபல்லா)

**29) இயக்கர்களுடைய முக்கிய நகரங்களினைக் குறிப்பிடுக.**

★ சிரிசவத்து

★ லங்காபுர

**30) இலங்காபுர என்பதன் இன்றைய பெயர் யாது?**

★ மகியங்கனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**31) விஜயன் இயக்கர்களை அழித்த சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.**

★ சிரிசவத்து நகரில் இடம்பெற்ற விழாவொன்றில் குவேனியின் உதவியுடன் இயக்கர்களைப் போல் வேடம் தரித்து அவ் விழாவினுள் நுழைந்த விஜயனும் அவனது தோழர்களும் அவர்களை அழித்தனர்.

**32) விஜய இலங்கையில் அரசனாவதற்கு உதவிய பெண் யார்?**

★ குவேனி

**33) விஜயன் குவேனியைக் கைவிட்டு இரண்டாவது தடவையாக திருமணம் செய்த பெண் யார்?**

★ மதுரை இளவரசி (பாண்டிய இளவரசி)

**34) மதுரை இளவரசி எக்குலத்தைச் சேர்ந்தவள்?**

★ சத்திரிய குலம்

**35) விஜயனும் அவரது குழுவினரும் எந்நதிகளை அண்டி குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர்?**

★ மல்வத்து ஓயா

★ கலா ஓயா

**36) விஜயனின் தோழர்களால் அமைக்கப்பட்ட குடியேற்றங்களைத் தருக.**

★ அநுரதன் : அநுராதகம

★ உபதிஸ்ஸன் : உபதிஸ்ஸகம

★ உருவெல : உருவெலகம

★ விஜித : விஜிதகம

**37) குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட நதிக்கரைகளைக் குறிப்பிடுக?**

★ உருவெல - கலாஓயா

★ அநுராதகம - மல்வத்து ஓயா

★ உபதிஸ்ஸகம - கம்பீர நதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) கற்காலத்தில் இலங்கையில் வாழ்ந்தவர்கள் எவ்வாறான முறையில் உணவை பெற்றுக் கொண்டனர்?
1. விவசாயம் 2. வேட்டையாடி
3. பண்டமாற்று 4. சந்தையில்

02) கற்கால இலங்கையர் மழைகாலங்களில் எவ்வாறான இடங்களில் தங்கியுள்ளனர்?
1. வெட்டவெளிகளில் 2. வீடுகள்
3. குகைகள் 4. மரங்கள்

03) கற்கால இலங்கையர் மழை இல்லாத காலங்களில் எங்கு தமது வாழ்கையை நடத்தியுள்ளனர்?
1. வெட்டவெளிகளில் 2. குகைகள்
3. மரங்கள் 4. வீடுகள்

04) கற்கால மக்கள் பயன்படுத்திய சிறப்பான ஓர் ஆயுதம் எது?
1. மண்வெட்டி 2. தடி
3. கத்தி 4. கல்லாயுதம்

05) கற்கால இலங்கையர் கழுத்தில் மணி அணிவதற்காக எதனை பயன்படுத்தியுள்ளனர்?
1. சுறா மீனின் பல் 2. சிப்பி
3. கடல்முத்து 4. கற்கள்

06) கற்கால இலங்கையர் மேற்கொண்ட பிரதான சடங்கு யாது?
1. பிறந்தநாள் விழா 2. திருமண சடங்கு
3. மரணசடங்கு 4. திவச சடங்கு

07) கற்கால மனிதன் சடலத்தை அடக்கம் செய்த முறைகளில் ஒன்று?
1. அறியப்படவில்லை 2. வளைத்து
3. நிமிர்த்தி 4. அமர்ந்தவாறு

08) மண்டையோடுகளிற்கு நிறந் தீட்ட அவர்கள் பயன்படுத்திய இயற்கை கல்லின் நிறம் யாது?
1. சிவப்பு 2. நீலம்
3. பச்சை 4. மஞ்சள்

09) எமதுநாட்டின் ஆரம்ப யுகம் கற்களை அதிகமாக பயன்படுத்தியமையால் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
1. உலோக காலம் 2. கற்காலம்
3. இரும்பு யுகம் 4. கல்லின் பயன் காலம்

10) எமது நாட்டில் இற்றைக்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு முதல் மனிதன் வாழ்ந்திருக்கலாம் என்று அறியப்படுகின்றது?
1. ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்
2. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்
3. ஒரு இலட்சத்து எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்
4. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) 5000 - 4500 ற்கு இடைப்பட்ட கால மக்கள் கல்லிற்கு பதிலாக எதனை பயன்படுத்தினர்?

1. தகரம் 2. செப்பு
3. இரும்பு 4. கல்

12) கி.மு 544 இல் இலங்கைக்கு யார் உள்ளிட்ட குழுவினர் எமது நாட்டிற்கு வந்து இறங்கினர்?

1. குவேனி 2. நாகர்
3. இயக்கர் 4. விஜயன்

13) விவசாயத்திற்கு பழக்கப்பட்ட பண்டைய இலங்கையர் எங்கு அதிகமாக வசித்துள்ளனர்?

1. வடக்கிலங்கை 2. மலைநாடு
3. கரையோரம் 4. தெற்கிலங்கை

14) மலைப்பிரதேசங்களின் சமவெளிகளிலேயே புராதன இலங்கையர் வசித்து வந்துள்ளனர் அவ்வாறான சமவெளிகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

1. அழகிய பூமி 2. தரை
3. பீடபூமி 4. மலை

15) மலைநாட்டில் புராதன மனிதன் வாழ்ந்த இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சமையல் உபகரணம் யாது?

1. பானை 2. சட்டி
3. உரல் 4. அம்மி

16) 5000 - 4500 ற்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் பெரும் சாதனை யாது?

1. இரும்பை கண்டுபிடித்தமை. 2.நெருப்பை கண்டுபிடித்தமை
3. வீடுகளை அமைத்தமை. 4.நாடோடி முறை வாழ்ந்தமை.

17) கற்காலத்திற்கு பின் வாழ்ந்த மக்கள் எவ்வாறான இடங்களில் வாழ்ந்தனர்?

1. மாடிவீடு 2. குடிசைகளில்
3. வெட்டவெளியில் 4. குகைகளில்

18) குடிசையின் கூரைகளை வேய்வதற்காக பயன்படுத்திய புற்கள் எவை?

1. இலுக்கு, அறுகம்புல் 2. இலுக்கு, நாணல்
3. மானா, இலுக்கு 4. நாணல், மானா

19) கற்காலத்தின் பின் வாழ்ந்த மக்கள் இறந்த தமது உறவினர்களை எங்கு புதைத்தனர்?

1. கல்லறையில் 2. மரத்திற்கு அடியில்
3. நீரில் 4. பானையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) முன்னேறிச் சென்ற பண்டைய இலங்கையரிடம் முறையான தொழில்நுட்பம் இருந்தமைக்குச் சான்று கூறுபவை எவை?
1. இறந்த சடலங்கள் 2. எலும்புக் கூடுகள்
3. பாத்திரங்கள், இரும்பாயுதங்கள் 4. யாவும் சரி

21) விஜயனுடன் எத்தனைபேர் கி.மு 544ம் ஆண்டு இலங்கைக்கு வந்து இறங்கினர்?
1. ஏழாயிரம் பேர் 2. எழுநூறு பேர்
3. ஐம்பது பேர் 4. நூறு பேர்

22) விஜயன் எந்த நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்து இறங்கினான்?
1. அமெரிக்கா 2. ஜப்பான்
3. இந்தியா 4. சீனா

23) எமது வரலாற்றை கற்பதற்கு பெரிதும் துணைபுரியும் நூல் எது?
1. மகாவம்சம் 2. கல்லாயுதம்
3. அட்டகதா கதைகள் 4. செவிவழி கதைகள்

24) விஜயன் உள்ளிட்ட குழுவினர் வந்திறங்கிய இலங்கையின் சிறப்பு மிக்க இடம் எது?
1. அம்பாந்தோட்டை 2. கொழும்பு
3. யாழ்ப்பாணம் 4. தம்பபன்னி

25) தம்பபன்னி இலங்கையின் எப்பகுதியில் அமைந்துள்ளது?
1. வடக்கு 2. கிழக்கு
3. மேற்கு 4. தெற்கு

26) விஜயன் இலங்கைக்கு வரும் போது இலங்கையில் வாழ்ந்த மக்கள் எவ்வாறழைக்கப்பட்டனர்?
1. இயக்கர், நாகர் 2. தமிழர்
3. சிங்களவர் 4. ஜப்பானியர்

27) விஜயனின் குழுவினரை மாய சக்தியின் மூலம் பிடித்து ஒழித்து வைத்தவள் யார்?
1. மாயாவி 2. குவேனி
3. பாண்டிமாதேவி 4. குசுமாசனதேவி

28) விஜயன் குவேனியை சந்தித்த போது அவள் எவ்வாறான செயலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள்?
1. உணவு தயாரித்தல் 2. வீடு கட்டும் செயல்
3. மட்பாண்டம் வனைதல் 4. நூல் நூற்கும் செயல்

29) குவேனி எக்குலத்தைச் சேர்ந்த பெண் ஆவாள்?
1. நாகர் 2. இயக்கர்
3. தமிழர் 4. சிங்களவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30) குவேனி திருமணம் செய்துகொண்ட நபர் யார்?
1. இயக்கர் குல தலைவர் 2. விஜய குழுவின் தளபதி
3. விஜயன் 4. நாகர்குல இளவரசன்

31) குவேனிக்கும் விஜயனுக்கும் பிறந்த குழந்தைகளின் பெயர் யாது?
1. ஜீவஹத்த, திசால 2. சிங்கபாகு, சிங்கசீவி
3. வசபன், துட்டகைமுனு 4. எல்லாளன், பராக்கிரமபாகு

32) இயக்கர்களிற்குரிய இரண்டு நகரங்களும் எவை?
1. மன்னார், புத்தளம் 2. கண்டி, நுவரெலியா
3. யாழ்ப்பாணம், திருகோணமலை 4. சிரிசவத்து, லங்காபுர

33) இயக்கர்களை அழித்த பின் விஜயன் யாரை திருமணம் செய்தான்?
1. சேர இளவரசி 2. சோழ இளவரசி
3. பாண்டிய இளவரசி 4. கலிங்க இளவரசி

34) விஜயனுடன் வந்த குழுவினர் எவ் எவ் இடங்களில் வசித்தனர்?
1. இரணைமடு குளம், களனி கங்கை,
2. மகாவலி கங்கை, களுகங்கை
3. களனி கங்கை
4. மல்வத்து ஓயா, கலா ஓயா

35) அநுராதபுரத்தை அமைத்த அமைச்சர் யார்?
1. உருவெல 2. அநுராத
3. உபதிஸ்ஸ 4. விஜயன்

36) விஜயன் உள்ளிட்ட குழுவினர் எவ் இனத்தைச் சேர்ந்தவர்கள்?
1. தமிழினம் 2. ஆரிய இனம்
3. இயக்கர் 4. நாகர்

37) யாரின் வருகையுடன் இந்திய சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள் இலங்கையில் பரவியது
1. பிரித்தானியர் வருகை 2. சிங்களவரின் வருகை
3. சங்கமித்தை வருகை 4. விஜயனின் வருகை

38) விஜயன் ஆரிய இனத்தைச் சேர்ந்தவன் என்று கூறும் நூல் யாது?
1. யாதக அட்டகதா 2. சூளவம்சம்
3. மகாவம்சம் 4. தீபவம்சம்

39) உபதிஸ்ஸ என்று அமைச்சனால் உருவாக்கப்பட்ட குடியிருப்பு எது?
1. உபதிஸ்ஸகாம 2. அநுராதபுரகாம
3. யாழ்ப்பாணம் 4. கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40) இயக்கர்களை எமது நாட்டில் இருந்து அழித்தது யார்?
   1. பாண்டிய இளவரசி   2. விஜயன்
   3. குவேனி   4. ஜீவஹத்த

41) கற்களால் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் .................. என அழைக்கப்பட்டன.

42) பண்டைய இலங்கையர் இறந்த தமது உறவினருக்கு ........... சடங்கை மேற்கொண்டனர்.

43) எமது நாட்டில் மக்கள் வாழ்ந்த ஆரம்ப யுகம் ............. எனப்படுகின்றது.

44) கற்கால மனிதர்கள் ...................... முறை மூலம் தமக்கு தேவையான உணவுகளை பெற்றுக் கொண்டனர்?

45) 5000 - 4500 றக்கிடைப்பட்ட காலத்தில் கற்களிற்கு பதிலாக .................. இனை பயன்படுத்தினர்.

46) கற்காலத்திற்குப் பின்னரான காலப்பகுதி மக்கள் ............ திற்கு பழக்கப்பட்டமையால் இலகுவாக உணவைப் பெற்றுக் கொண்டனர்.

47) விஜயன் இலங்கைக்கு வரும் போது இங்கு ............... எனப்படும் மக்கட் குழுவினர் வாழ்ந்தனர்

48) விஜயன், இயக்கரிடமிருந்து ஆட்சியை கைப்பற்ற .............. எனும் பெண்ணை திருமணம் செய்தான்.

49) உருவெல என்ற அமைச்சனால் .............. உருவாக்கப்பட்டது.

50) விஜயன் உள்ளிட்ட குழுவினர் .................. இனத்தைச் சேர்ந்தவர்.

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 2) | 3 | 3) | 1 | 4) | 4 | 5) | 1 |
| 6) | 3 | 7) | 2 | 8) | 1 | 9) | 2 | 10) | 1 |
| 11) | 3 | 12) | 4 | 13) | 2 | 14) | 3 | 15) | 4 |
| 16) | 1 | 17) | 2 | 18) | 3 | 19) | 1 | 20) | 3 |
| 21) | 2 | 22) | 3 | 23) | 1 | 24) | 4 | 25) | 3 |
| 26) | 1 | 27) | 2 | 28) | 4 | 29) | 2 | 30) | 3 |
| 31) | 1 | 32) | 4 | 33) | 3 | 34) | 4 | 35) | 2 |
| 36) | 2 | 37) | 4 | 38) | 3 | 39) | 1 | 40) | 2 |

| | | | |
|---|---|---|---|
| 41) | கல்லாயுதங்கள் | 42) | மரண |
| 43) | கற்காலம் | 44) | வேட்டையாடும் |
| 45) | இரும்பு | 46) | விவசாயம் |
| 47) | இயக்கர், நாகர் | 48) | குவேனி |
| 49) | உருவெலகாம | 50) | ஆரிய |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 05

# எமது பண்டைய அரசர்கள்

**அறிமுகம்**

நாட்டு மக்களின் நன்மை கருதி செயற்பட்ட அறிவுடைய சிறந்த அரசர்கள் எமது நாட்டை ஆட்சி செய்ததால் எமது நாடு சுதந்திர நாடாகத் திகழ்ந்தது. இதனடிப்படையில் எமது நாட்டை ஆண்ட சிறந்த ஆட்சியாளர்களது செயற்திறன்களையும் பணிகளையும் இவ் அத்தியாயத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**01) எமது நாடு எத்தனையாண்டுகால வரலாற்றைக் கொண்டது?**

★ இரண்டாயிரம் ஆண்டுகால வரலாறு

**02) எமது நாட்டின் மறுபெயர்களையும் அப்பெயரால் நமது நாட்டை அழைத்தவர்களையும் குறிப்பிடுக.**

★ சிலோன் : ஆங்கிலேயர்
★ சிலான் : ஒல்லாந்தர்
★ செயிலான் : போர்த்துக்கேயர்
★ சிலதுவீபம் : இந்தியர்
★ தப்ரபேன் : கிரேக்கர்
★ சீலன் : சீனர்
★ செரண்டிப் : அரேபியர்
★ பலசிமுண்டு : பாரசீகர்

**03) இலங்கை பண்டையகாலம் முதல் பிரசித்தி பெற்றமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.**

★ இந்து சமுத்திரத்தின் மத்தியில் இருந்தமை.
★ பாதுகாப்பு மிக்க இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டிருந்தமை. (திருகோணமலை)
★ வாசனைத் திரவியங்களையும், வர்த்தகப் பொருட்களையும் கொண்டிருந்தமை.
★ எழில் மிகுந்த தீவாக காணப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டுகாபயன்**

★ தாய் : உன்மாதச்சித்திரா
★ தந்தை : தீககாமினி
★ மனைவி : சுவர்ணபாலி
★ குரு : பண்டுல பிராமணன்
★ அரசு : அநுராதபுரம்
★ ஆட்சிக்காலம் : கி.மு 377 - 307
★ ஆட்சி வருடம் : 70 ஆண்டுகள்
★ யுத்தத்திற்குப் பயன்படுத்திய குதிரை: சேத்திய
★ அமைத்த குளங்கள்: அபயவாவி, ஜெயவாவி, காமினி வாவி

**04) இலங்கையின் முதலாவது இராசதானியும் நீண்டகாலமாக நிலவிய இராசதானியுமாக காணப்படுவது எது?**

★ அநுராதபுரம்

**05) இலங்கையின் முதல் மன்னன் யார்?**

★ விஜயன்

**06) அநுராதபுரத்தின் முதல் மன்னன் யார்?**

★ பண்டுகாபயன்

**07) அநுராதபுரம் அநுராதகம என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?**

★ குறித்த பிரதேசம் முன்னேற்றம் அடைந்திருக்காமையே காரணமாகும்.

**08) அநுராதகமவை அநுராதபுரம் ஆக்கியவர் யார்?**

★ பண்டுகாபயன்

**09) பண்டுகாபய மன்னன் சிறு வயதில் உயிர் பிழைத்த சம்பவங்களைக் குறிப்பிடுக.**

★ பிறந்த உடனேயே பாதுகாப்பு கருதி தொரமடலாவைக்கு கொண்டு சென்ற போது மாமன்மார்கள் கொலை செய்ய மேற்கொண்ட முயற்சியிலிருந்து காலவேலன், சித்தன் என்பவர்களால் பாதுகாக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஏழாவது வயதில் நீராடிக் கொண்டிருந்த போது அவனது மாமன்மார்களினால் கொலை செய்ய முற்படுகையில் குளத்தில் உள்ள மரப்பொந்தில் ஒழிந்து கொண்டமை.

★ பன்னிரண்டாவது வயதில் இடையனுக்கு நெருப்பெடுக்க சென்றமையால் உயிர் தப்பியமை.



ஏழு வயதளவில் நீராடும் பண்டுகாபயனைக் கொல்ல முயற்சிக்கும் நிகழ்வுக்கான கற்பனைச் சித்திரம்

**10) அநுராதபுரத்தை திட்டமிட்ட ஒரு நகராக்க பண்டுகாபயன் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

★ அநுராதபுரம் என அழைக்கப்பட வேண்டிய பிரதேசம் யாதெனக் கண்டு எல்லைகள் இட்டமை.

★ நகரைச் சுற்றி நீர் அகழி அமைத்தமை.

★ நகரினுள் நுழைவதற்காக நான்கு திசைகளிலும் நுழைவாயில்கள் அமைத்தமை.

★ நான்கு வாயில்கள் ஊடாகவும் நகரின் ஏனைய பகுதிகளை இணைக்கும் வகையில் வீதித் தொகுதிகள் அமைக்கப்பட்டமை


★ நகரினை அழகுபடுத்தும் பூங்கா, தடாகம் என்பவற்றை அமைத்தமை.

★ நகர குத்திக என்ற பதவி உருவாக்கப்பட்டமை.

★ நகரில் சுகாதார வசதிகளையும் வைத்திய சேவைகளையும் வழங்கியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டுகாபயனால் திட்டமிடப்பட்ட அநுராதபுர நகரம்

**11) பண்டுகாபயன் மேற்கொண்ட சுகாதார வசதிகளைக் குறிப்பிடுக.**

★ நகரில் வாழும் மக்களின் குப்பை கூழங்களை அகற்ற பணியாட்களை நியமித்தமை.

★ நகரைச் சுத்தம் செய்ய ஐந்நூறு பேரை நியமித்தமை.

★ நகரின் கழிவகற்றும் வேலைத்திட்டத்திற்காக இருநூறு பேரை நியமித்தமை.

★ இறந்த உடலை அகற்றுவதற்கு நூற்று ஐம்பது புலையர்களை நியமித்தமை.

★ மயானத்தை காவல் செய்யவும் சுத்தம் செய்யவும் நூற்று ஐம்பது பேரை நியமித்தமை.

**12) பண்டுகாபய மன்னனின் சமயப் பணிகளைப் பட்டியற் படுத்துக.**

★ கட்டுப்பாடற்ற சமயக் கொள்கையை பின்பற்றியமை.

★ ஒவ்வொரு சமயத்தினருக்கும் வெவ்வேறான வழிபாட்டு இடங்களை அமைத்தமை.

★ கொல்லர்கள் வழிபட்ட கம்மாரத்தேவ என்னும் தெய்வத்திற்கு கோயில் கட்டியமை.

★ வேடர்களின் தெய்வத்திற்கு நகரின் மேற்குப் பகுதியில் கோயில் கட்டியமை.

★ தமக்கு உதவியோருக்கு ஆலயம் கட்டியமை. (சித்தராஜா, காலவெல)

★ பச்சிம என்னும் தெய்வத்திற்கு ஆலயம் கட்டியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13) அநுராதபுர நகரில் முதல் முதலில் குளத்தை அமைத்தவர் யார்?**

★ பண்டுகாபயன்

**14) பண்டுகாபயனின் பின் அரசனானவன் யார்?**

★ மூத்தசிவன்

**15) பண்டுகாபயனின் மாமன்மார்களைக் குறிப்பிடுக.**

★ அபய
★ கிரிகண்டசிவ
★ குடாதிஸ்ஸ
★ உத்திய
★ அசேல
★ விபாத்த
★ ராம
★ மத்த
★ மத்தகல
★ மகாதிஸ்ஸ

**16) பண்டுகாபயன் ஆட்சியைக் கைப்பற்ற உதவியவர்களைக் குறிப்பிடுக.?**

★ பண்டுலன்
★ அபய
★ சந்திரபானு

**17) பண்டுல பிராமணனின் மகன் யார்?**

★ சந்திரபானு

**தேவநம்பியதீசன்**

★ ஆட்சிக்காலம் : 247 - 277
★ இயற்பெயர் : தீசன், தீசகுமாரன்
★ தந்தை : மூத்தசிவன், மூடசிவன்
★ பிறப்பு வரிசை : இரண்டாவது பிள்ளை
★ அரசு : அநுராதபுரம்
★ சகோதரர்கள் : 09 சகோதரன், 02 சகோதரி
★ யானைகள் : பதும, குஞ்சர
★ புகழ்ப்பெயர்கள் : பௌத்த அரசன்,
பௌத்த முதல்வன்
பௌத்த காவலன்
இலங்கை அசோகன்
★ பட்டப்பெயர் : தேவநம்பிய
(தெய்வத்திற்குப் பிரியமானவன்)
★ ஆட்சிப்பீடம் ஏறியது : மூத்தசிவனுக்குப் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**18) தேவநம்பியதீசன் காலத்தில் வட இந்தியாவை ஆட்சி செய்தவர் யார்?**

★ அசோகன்

**19) அசோகன் எவ்வம்சத்தினைச் சேர்ந்தவன்?**

★ மௌரிய வம்சம்



மகிந்ததேரரின் வருகை



அசோகன்

**20) தீச மன்னனால் அசோக மன்னனை சந்திப்பதற்காக அனுப்பப்பட்ட தூதுக்குழுவிலுள்ளோரைக் குறிப்பிடுக.**

★ தலைவர் : அரிட்டன்

★ ஏனையோர் : ராஜகுரு
மித்தாமன்

**21) தீச மன்னன் அசோகனுக்கு அனுப்பி வைத்த பரிசுப் பொருட்களைக் குறிப்பிடுக.**

★ முத்து

★ இரத்தினக்கற்கள்

**22) இரண்டு தடவைகள் முடிசூட்டு விழாவை நடாத்திய இலங்கையின் மன்னன் யார்?**

★ தேவநம்பியதீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23) அசோக மன்னனால் தீசனுக்கு அனுப்பப்பட்ட பட்டாபிஷேகப் பொருட்களைத் தருக.**

★ ராஜவெண்குடை
★ நெற்றிப்பட்டி
★ ஆலவட்டம்
★ மிதியடி
★ பாதணி
★ வலம்புரிச்சங்கு

**24) எப்பேரரசரின் அறிவுரைப்படி தேவநம்பியதீசன் இரண்டாவது தடவையாக முடிசூட்டிக் கொண்டான்?**

★ அசோகப் பேரரசனின் அறிவுரைப்படி

**25) தீச மன்னன் இரண்டாவது தடவை எம் மரபின் அடிப்படையில் முடிசூடிக் கொண்டான்?**

★ சத்திரிய மரபு அல்லது மௌரிய மரபு

**26) தீசனுக்கு "தேவநம்பிய" எனும் பட்டத்தினை வழங்கியவர் யார்?**

★ அசோகன்

**27) இலங்கையில் பௌத்த சமயத்தினைப் பரப்புவதற்காக இலங்கை வந்த குழு எது?**

★ அசோக மன்னனின் மகனான மஹிந்த தேரர் தலைமையிலான குழு

**28) மஹிந்த தேரருடன் இலங்கை வந்தவர்களைக் குறிப்பிடுக.**

★ இத்திய
★ உத்திய
★ சம்பல
★ பத்சால
★ சுமண சாமனேரர்
★ பண்டுக உபாசகர்

**மஹிந்த தேரரின் வருகை**

★ தினம் : பொசன் பௌர்ணமி தினம்
★ இடம் : மிசாகபர்வதம் அல்லது மிகிந்தலை
(மன்னனை சந்தித்த இடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29) மஹிந்ததேரர் தீச மன்னனுக்கு போதித்த பௌத்த போதனை யாது?**

★ சூலகத்திம தூபம

**30) மஹிந்ததேரர் இலங்கை வந்த காலம் யாது?**

★ புத்தபெருமான் பரிநிர்வாணம் அடைந்து 237 ஆண்டுகளுக்குப் பின்னர்.

**31) இலங்கைக்கு வருகை தந்த மஹிந்ததேரர் தங்குவதற்கு தீசனால் வழங்கப்பட்ட இடம் யாது?**

★ மகாமேகவனப் பூங்கா

★ திஸாராம என்ற விகாரை

**32) மகாமேகவனப் பூங்காவை அமைத்த மன்னன் யார்?**

★ மூத்தசிவன்

**33) புத்தரின் வலது பக்க தாடை எலும்பு வைக்கப்பட்டு அமைக்கப்பட்ட தாதுகோபம் எது?**

★ தூபாராம

**34) தூபாராம விகாரையை அமைத்த மன்னன் யார்?**

★ தேவநம்பியதீசன்



தூபாராம தாதுகோபம்
(மேலிருந்த பார்வை)



தூபாராம தாதுகோபம்
(பக்கப் பார்வை)

**35) மகாவிகாரையை நிறுவிய மன்னன் யார்?**

★ தேவநம்பியதீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**36) மகாவிகாரையை நிறுவ தீசனுக்கு ஆலோசனை வழங்கியவர் யார்?**

★ மஹிந்த தேரர்

**37) தூபாராம தாதுகோபத்தின் ஆரம்ப வடிவம்யாது?**

★ நெற்குவியல் வடிவம் (தானியக் குவியல் வடிவம்)

**38) தூபாராம தாது கோபத்தின் தற்போதைய வடிவம் யாது?**

★ மணி வடிவம் அல்லது கண்டசார

**39) வட்டதாகே என்பது யாது?**

★ தாதுகோபத்தை சுற்றி அத் தூபியை பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்படும் மூன்று கற்தூண் வரிசைகளாகும்.

**40) தூபாராமாவைச் சுற்றி வட்டதாகே மனை ஒன்றை அமைத்தவர் யார்?**

★ வசபன்

**41) இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது தூபி யாது?**

★ தூபாராம

**42) தேவநம்பியதீசன் காலத்தில் சங்கமித்தை வருகை தந்தமைக் கான காரணம் யாது?**

★ அனுலாதேவியை பிக்குணியாக மாற்றுவதற்கு

**43) சங்கமித்தை வந்திறங்கிய இடம் யாது?**

★ ஜம்புகோளப்பட்டினம்

**44) சங்கமித்தையினால் கொண்டுவரப்பட்டது யாது?**

★ வெள்ளரசு மரக்கிளை

**45) சங்கமித்தையினால் கொண்டுவரப்பட்ட வெள்ளரசுக் கிளை எங்கிருந்து கொண்டு வரப்பட்டது ?**

★ இந்தியாவின் புத்தகாயாவில் இருந்து. (வெள்ளரசு மரத்தின் வலதுபக்கக் கிளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**46) சங்கமித்தையினால் கொண்டுவரப்பட்ட வெள்ளரசுக் கிளை எங்கே நடப்பட்டது?**

★ அநுராதபுரத்திலுள்ள மகாமேகவனத்தில்

**47) சங்கமித்தையுடன் வருகைதந்தவர்கள் யார்?**

★ 18 குலத்தினைச் சேர்ந்த கைத்தொழிலாளர்கள்



வெள்ளரசு மரக்கிளை கொண்டுவரப்படல்



வெள்ளரசு மரக்கிளை நடப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**48) தேவநம்பியதீசனின் சமயப் பணிகளைப் பட்டியற்படுத்துக.**

- ★ அட்டசெட்டலென் எனும் 68 கற்குகைகளை சுத்தம் செய்து பிக்குகளுக்கு தானமளித்தமை.
- ★ புதிய பல விகாரைகளை நிர்மாணித்தமை
  உ - ம் தூபராம மகாவிகாரை
- ★ பல சமயக் கட்டடங்களை அமைத்தமை.

**49) இலங்கையின் புத்த சமயத்தினை தழுவிய முதலாவது நபர்களைக் குறிப்பிடுக.**

- ★ மன்னன் : தேவநம்பியதீசன்
- ★ பிக்கு : அரிட்டன்
- ★ பிக்குணி : அனுலாதேவி



தேவநம்பியதீச மன்னன் அநுராதபுர எல்லையை அடையாளப்படுத்தியமை

**50) பிக்கு சங்கம் உருவாக்கியவர் யார்?**

- ★ அரிட்டன்

**51) பிக்குணி சங்கத்தினை உருவாக்கியவர் யார்?**

- ★ அனுலாதேவி

**52) பௌத்த சமயத்தினால் இலங்கை அடைந்த நன்மைகளைக் குறிப்பிடுக.**

- ★ வழிபாட்டு முறையில் மாற்றம் ஏற்பட்டமை
- ★ தூபிகள் வணங்கப்பட்டமை.
- ★ பிரார்த்தனை செய்தல் இடம்பெற்றமை.
- ★ சிங்கள அரிச்சுவடி, அட்டுவா இலக்கியம் என்பன உருவாக்கப்பட்டமை
- ★ கலை, கலாச்சாரங்களில் மாற்றம் ஏற்பட்டமை
- ★ பௌத்த கல்வி நிலையங்கள் உருவாக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துட்டகைமுனு**

| | | |
|---|---|---|
| ★ இயற்பெயர் | : | காமினி அபய |
| ★ தந்தை | : | காவந்தீசன் |
| ★ தாய் | : | விகாரமாதேவி |
| ★ மனைவி | : | துரனாதேவி |
| ★ சகோதரன் | : | சத்தாதீசன் |
| ★ பட்டத்து யானை | : | கண்டுல அல்லது கடோல் |
| ★ பட்டத்துக்குதிரை | : | திக்கதூலி |
| ★ முதலில் நிறுவிய தூபி | : | மிரிசவெட்டிய |
| ★ முதலில் நிறுவிய குளம் | : | சொரபொரவாவி |
| ★ குடும்பம் வாழ்ந்த இடம் | : | மகாகம இராசதானி |
| ★ புகழ்ப்பெயர் | : | மகாவம்சக்காவிய நாயகன், தேரவாதக்காவலன் |

**53) மகாகம இராசதானிக்குள் உள்ளடங்கிய பிரதேசங்களைத் தருக.**

★ இலங்கையின் தெற்கு மற்றும் தென்கிழக்குப் பிரதேசங்கள்

**54) துட்டகைமுனு வாழ்ந்த இடம் எது?**

★ உருகுனை ரட்டை

**55) துட்டகைமுனு சிறுவனாக இருந்த காலத்தில் அநுராதபுரத்தின் ஆட்சியாளன் யார்?**

★ எல்லாளன்

**எல்லாள மன்னன்**

| | | |
|---|---|---|
| ★ இயற்பெயர் | : | எலார |
| ★ வம்சம் | : | சோழ வம்சம் |
| ★ பூர்வீகதேசம் | : | தென்னிந்தியா |
| ★ சமயம் | : | இந்து |
| ★ அரசு | : | அநுராதபுரம் |
| ★ பட்டத்துயானை | : | மகாபர்வதம் |
| ★ புகழ்ப்பெயர் | : | மனுநீதி வேந்தன் |
| ★ ஆட்சிசெய்த வருடங்கள் | : | 44 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லாளன்**

- ★ நீதி நியாயத்தை நிலைநாட்டுவதில் பிரபல்யமானவன்
- ★ மிகவும் நேர்மையானவன்
- ★ எதிரியையும் நண்பனையும் ஒரேமாதிரிக் கவனித்தான்.
- ★ பிராணிகளின் மீது அன்பு செலுத்தினான்.

**துட்டகைமுனுவின் பத்துத் தளபதிகள் (மாமல்லர்கள்)**

- ★ நந்திமித்ர
- ★ சுரநிமல
- ★ மகாசோன
- ★ கோதயம்பர
- ★ தேரபுத்தபாய
- ★ பரண
- ★ வேலுசுமன
- ★ கஞ்சதேவ
- ★ புஸ்யதேவ
- ★ லபிய வசப


புஸ்யதேவ


நந்திமித்ர


மகாசோன



சுரநிமல


வேலுசுமன



தேரபுத்தபாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லாளனிடம் நீதிகோரும் பசு




துட்டகைமுனு

**56) அநுராதபுரத்தின் மேற்குக் கரையில் அமைந்த துறைமுகம் எது?**
- ★ மாதோட்டம் (மாந்தை அல்லது மன்னார்)

**57) துட்டகைமுனுவின் சகோதரனான சத்தாதீசனை காவந்தீச மன்னன் எப்பிரதேசத்திற்கு அனுப்பினான்?**
- ★ திகாமடுல்ல

**58) திகாமடுல்ல தற்போது எம்மாவட்டத்திற்குள் உள்ளடங்குகின்றது?**
- ★ அம்பாறை

**59) திகாமடுல்ல பிரதேசம் இன்று எவ்வாறு அழைக்கப்படுகின்றது?**
- ★ அம்பாறை



துட்டகைமுனு எல்லாளன் யுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**60) துட்டகைமுனு மன்னனும், எல்லாள மன்னனும் நேரடியாக சந்தித்துப் போர் புரிந்த இடம் எது?**

★ விஜிதபுர



துட்டகைமுனு எல்லாளன் யுத்தம்

**61) துட்டகைமுனு மன்னனின் சமயப் பணிகளைக் குறிப்பிடுக.**

★ பல விகாரைகளைக் கட்டுவித்தமை

★ பௌத்த பிக்குகளின் ஆசீர்வாதம் பெற்றுச் செயற்பட்டமை.

★ வெசாக் விழாவை இலங்கையில் அறிமுகம் செய்தமை.

**62) துட்டகைமுனு மன்னன் நிர்மாணித்த விகாரைகளைக் குறிப்பிடுக.**

★ மிரிசவெட்டிய

★ ருவன்வெலிசாய

★ லோவாமகாபாய

**ருவன்வெலிசாய**

**63) ருவன் வெலிசாயத்தை கட்ட ஆரம்பித்த மன்னன் யார்? கட்டி முடித்தவர் யார்?**

★ கட்ட ஆரம்பித்தவர் : துட்டகைமுனு

★ கட்டி முடித்தவர் : சத்தாதீசன்

**64) ருவன்வெலிசாய வரலாற்று மூலாதாரங்களில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?**

★ மகாதூபம்

★ மகாசாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**65) ருவன்வெலிசாய தாதுகோபம் பாளிமொழி மூலாதாரங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?**

★ ரத்னமாலி சைத்தியம்


**66) ருவன்வெலிசாயாவில் வைக்கப்பட்டுள்ள புத்தரின் சரீர தாது எங்கிருந்து கொண்டுவரப்பட்டது?**

★ இந்தியாவின் ராமகாம தூபியிலிருந்து

**67) ருவன்வெலிசாயாவின் உயரம் மற்றும் அடிப்பகுதியின் விட்ட யாது?**

★ உயரம் : 300 அடி

★ விட்டம் : 298 அடி



ருவன்வெலிசாய (புனர்நிர்மாணத்திற்கு முன்)

**68) ருவன்வெலிசாய தாதுகோபத்தை புனர்நிர்மாணம் செய்தவர் யார்?**


★ லஞ்சதீச மன்னன்

**69) துட்டகைமுனு மன்னன் எல்லாளனுக்கு நினைவுச் சின்னம் அமைப்பித்து பிறப்பித்த ஆணை யாது?**

★ இந்த இடத்தைக் கடந்து செல்பவர்கள் அந்த நினைவுச் சின்னத்திற்கு மரியாதை செலுத்த வேண்டுமென்றும் குதிரை யில் சவாரி செல்பவர்கள் இறங்கிச்செல்ல வேண்டுமென்றும் இசை முழக்கத்துடன் பேரணியில் செல்வோர் அமைதியாக செல்ல வேண்டும் எனவும் கூறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ருவன்வெலிசாய (புனர்நிர்மாணத்திற்கு பின்)

**70) சமஸ்கிருத மொழியில் துட்டு என்பதன் பொருள் யாது?**

★ அறிவாளி


**71) துட்டகைமுனுவின் வரலாற்றின் ஊடாக நாம் கற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகளைக் குறிப்படுக.**

★ ஒரு இலக்கை அடைவது எவ்வளவு கடினமாயினும் நீண்டகாலமாக திட்டமிட்டு புத்தியுடனும், தைரியத்துடனும் செயற்படுவதன் மூலமும் அதனை அடைந்து கொள்ளல்.

★ நாட்டிலும், சமயத்திலும், சமூகத்திலும் பற்றுடையவனாக இருத்தல்.

★ மதிக்க வேண்டியவர்களை மதித்தல்.


★ நாட்டு மக்களை நேசித்தல்.



துட்டகைமுனுவினால் நிறுவப்பட்ட எல்லாளனின் நினைவுத் தூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரணத்தருவாயில் இருந்த துட்டகைமுனுவிற்கு அவனது சகோதரனான சத்தாதிஸ்சன் கட்டிமுடிக்கப்படாத ருவன்வெலிசாயவின் பகுதியை வெள்ளைத் துணியால் கட்டி அரசனுக்குக் காட்டியமை

**வலகம்பா**

- ★ இயற்பெயர் : வட்டகாமினி அபய
- ★ தந்தை : சத்தாதீசன்
- ★ வேறுபெயர்கள் : பிதரஜ, பித்தரஜ, பிதிமகாராஜ
- ★ சகோதரர்கள் : தூலதத்தன், லஞ்சதிஸ்ஸ நாக (கல்லாடநாக)
- ★ மனைவி : சோமாதேவி
- ★ மகன்மார் : மகாசூலி, சோரநாகன்
- ★ வழிகாட்டிய குரு : குப்பிகலமகாதிஸ்ஸ தேரர்
- ★ கட்டிய குளம் : நுவரகலாவிய
- ★ கட்டிய விகாரை : அபயகிரி, சோமாராம விகாரை
- ★ எதிர்கொண்ட படை: பூலஹத்த (தென்னிந்திய படை)
- ★ அரசு இழந்தோடிய இடம் : சிலாசோபக நந்தவனம்
- ★ தப்பி ஓடும் போது இகழ்ந்தவர் : நிகண்டகிரி(சமணத் துறவி)
- ★ எதிராக ஏற்படுத்தப்பட்ட கலகம் : திஸ்ஸ எனும் பிராமணனால்
- ★ இவன் பின் ஆட்சி செய்தவன் : மகாசூலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**72) வலகம்பா மன்னன் காலத்தில் படையெடுத்த தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்களைக் குறிப்பிடுக.**

- ★ பூலஹத்த
- ★ தாடிகன்
- ★ பாகியன்
- ★ புலையமாறன்
- ★ பிலையமாறன்

**73) வலகம்பா மன்னன் காலத்தில் ஏற்பட்ட குழப்பங்களைக் குறிப்பிடுக.**

- ★ தென்னிந்தியர்களின் படையெடுப்பு
- ★ திஸ்ஸபிராமணனின் கலகம்
- ★ கிரி எனும் சமணக்குரு எதிர்த்தமை
- ★ 16 ஆண்டுகாலம் பஞ்சம் ஏற்பட்டமை.

**74) அபயகிரி விகாரையை வலகம்பாவிடமிருந்து தானமாகப் பெற்ற பிக்கு யார்?**

- ★ குப்பிகலமகாதிஸ்ஸ தேரர்

**75) பிற்காலத்தில் சர்வதேச கல்வி நிலையமாக வளர்ச்சியுற்ற விகாரை யாது?**

- ★ அபயகிரி

**76) வலகம்பா மன்னனின் சமயப் பணிகளைப் பட்டியற்படுத்துக.**

- ★ அபயகிரி விகாரையைக் கட்டியமை.
- ★ திரிபிடகத்தை எழுதிவித்தமை.
- ★ பிக்குகளுக்கு கற்குகைகளை தானமாக வழங்கியமை.

**77) "சோமாதேவி ஒரு வீரப் பெண்மணி" இதனை ஆதாரப்படுத்தி விளக்குக.**

- ★ தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்களால் வலகம்பாவுக்கு இடையூறு ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் குடும்பத்தவர்களுடன் இரதத்தில் தப்பியோடினான். இவ்வேளையில் இரதத்தின் பாரம் குறைந்தால் மன்னன் பாதுகாப்பாகச் செல்லலாமென எண்ணிய சோமதேவி இரதத்தில் இருந்து இறங்கி பகைவரிடம் மாட்டிக் கொண்டாள். இந்த அடிப்படையில் சோமாதேவி ஒரு வீரப்பெண்மணி ஆவாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**78) புத்தபெருமானின் போதனை அனைத்தும் உள்ளடங்கியிருக்கும் நூல் எது?**

★ திரிபிடகம்

**79) திரிபிடகம் எனும் நூல் உருப்பெற்ற இடம் எது?**

★ மாத்தளையிலுள்ள அலு விகாரையில்



திரிபிடகம் எழுத்துருப் பெறல்.

**80) திரிபிடகத்தை எழுதுவித்தவர் யார்?**

★ வலகம்பா

**81) உலகப் பௌத்த மக்களுக்காக இலங்கையரால் ஆற்றப்பட்ட பணி எது?**

★ திரிபிடகம் எழுதிவித்தமை.

**82) வலகம்பா எனும் பெயர் வரலாற்றுக் கல்வெட்டுக்களில் எவ்வாறு கூறப்படுகின்றது?**

★ பித்தரஜ

**83) வலகம்பா மன்னனை பித்தரஜ என்றும் கூறும் நூல் எது? ஏன் அவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?**

★ மகாவம்சம்

★ வலகம்பா மன்னனின் சகோதரனான கல்லாடநாகன் இறந்த பின்னர் அவனது மகனை தந்தைக்குரிய அன்புடன் பராமரித்ததால் அவ்வாறு அழைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**84) பித்தரஜ என்பது கல்வெட்டுக்களில் எவ்வாறு குறிப்பிடப் படுகின்றது?**

★ பிதமகாராஜா

★ பிதரஜ

**அபயகிரி விகாரை**


★ நிறுவியவர் : வலகம்பா

★ தானம் வழங்கியது : குப்பிகலதிஸ்ஸதேரருக்கு

★ ஆரம்பத்தில் இதன் உயரம் : 350 அடி

★ தாதுகர்ப்பத்தின் அடிப்பகுதியின் விட்டம் : 355 அடி

★ சிதைவுற்ற பின்னர் தற்போதைய உயரம் : 245 அடி



அபயகிரி விகாரை (புனர்நிர்மானத்திற்கு முன்)

**85) அபயகிரி விகாரையில் மீள் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட மன்னர்களையும் அவர்களது பணிகளையும் குறிப்பிடுக.**

★ 1ம் கஜபாகு : அபயகிரி விகாரையைப் பெரிதாக்கி அதன் முற்றத்தில் நான்கு வாயில்கள் அமைத்தான்.

★ கனிஷ்ட திஸ்ஸ மன்னன் : தூபியின் பிரதான நான்கு திசைகளிலும் "வாகல்கட" அமைத்தான்.

**86) சோமாதேவி பகைவர்கள் கையில் சிக்கிய இடத்தில் நிறுவப்பட்ட விகாரை எது?**


★ சோமராம விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**87) சோமராம விகாரையை நிறுவியவர் யார்?**

★ வலகம்பா



அபயகிரி விகாரை (புனர்நிர்மானத்திற்கு பின்)

**வசபன்**

| | | |
|---|---|---|
| ★ இயற்பெயர் | : | வசப |
| ★ பாளிப்பெயர் | : | வஹப |
| ★ வம்சம் | : | இலம்பகர்ண வம்சம் |
| ★ பூர்வீகம் | : | உத்தரதேசம் |
| ★ மனைவி | : | பொத்தாதேவி |
| ★ இவனால் கொல்லப்பட்டவர் | : | சுப |
| ★ ஆட்சிக்காலம் | : | கி.பி 67 - 111 |
| ★ ஆட்சி வருடங்கள் | : | 44 |
| ★ மகன் | : | வங்கநாசிக திஸ்ஸன் |
| ★ தளபதி | : | இசிகிரியன் |
| ★ ஆட்சி செய்த வடபகுதி | : | நாகதீபம் (யாழ்ப்பாணம்) |
| ★ நிறுவிய பூங்கா | : | ரன்மசு பூங்கா |
| ★ நிறுவிய கால்வாய் | : | எலகர (ஆழிசார) |
| ★ அமைத்த கால்வாய் | : | 12 |
| ★ அமைத்த குளங்கள் | : | 11 |

★ புகழ்ப்பெயர் : உத்தரமகாராஜா, நீர்ப்பாசன பொறியியலாளர்

★ குளங்கள் : மயெந்திக்குளம், (மகாவிலச்சிக் குளம்)
மானாக்கெட்டி (மானாகட்டிய குளம்)
வாதமங்கனக்குளம் (நொச்சிபொத்தானக் குளம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**88) வசபமன்னனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வம்சம் எது?**

★ இலம்பகர்ண வம்சம்

**89) இலம்பகர்ணர்கள் முன்னர் நாட்டின் எவ்வேலைகளுக்கு பொறுப்பாக இருந்னர்?**

★ ஆவண வேலைகளுக்கு

**90) வசப மன்னனின் பொருளாதாரப் பணிகளைக் குறிப்பிடுக.**

★ பாரிய குளங்களை நிர்மாணித்தமை

★ கால்வாய்த்தொகுதிகளை அமைத்தமை

உ - ம் : அம்பன் கங்கையிலிருந்து 3 மைல் தூரத்திற்கு நீரைக்கொண்டு செல்வதற்காக எலகர கால்வாயை அமைத்தமை

★ சுரங்க வழி நீர்ப்பாசன முறையை அறிமுகம் செய்தமை

**91) வசப மன்னனின் ஆட்சி அதிகாரம் பரவி இருந்த இடங்களைக் குறிப்பிடுக.**

★ வடக்கு : யாழ்ப்பாணம்

★ கிழக்கு : மட்டக்களப்பு

★ தெற்கு : சித்துள் பௌவ / திஸ்ஸமகாராம

★ மேற்கு : குருநாகல்

**92) வசப மன்னனால் அமைக்கப்பட்ட குளங்கள் காணப்படும் மாவட்டம் எது?**

★ அநுராதபுரம்

**93) சுரங்கக் கால்வாய் முறை என்றால் என்ன?**

★ நிலத்திற்குக் கீழாக குழாய்கள் வழியாக நீரைக் கொண்டு செல்லும் முறை

**94) நாட்டின் நிர்வாகத்தை இலகுவாக்கும் பொருட்டு வசப மன்னனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை குறிப்பிடுக.**

★ நாட்டை நிர்வாக அலகுகளாகப் பிரித்து அதற்கென அரச அதிகாரிகளை நியமித்தமை.

உ - ம் : யாழ்ப்பாணப் பிரதேசம் இசிகிரிய என்ற அமைச்சனால் நிர்மாணிக்கப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**95) வடக்கில் வசப மன்னனின் ஆட்சி நிலவியமைக்கு சான்று பகரும் ஆதாரம் எது?**


★ வல்லிபுரப் பொற்சாசனம்
(கண்டறியப்பட்ட இடம் வல்லிபுரம்)



வல்லிபுரப் பொற்சாசனம்

**96) வல்லிபுரப் பொற்சாசனத்தினூடாக அறியப்படும் தகவல்களை குறிப்பிடுக.?**

★ யாழ்ப்பாணத்தை நிர்வகிக்கும் பொருட்டு இசிகிரிய எனும் அமைச்சர் நியமிக்கப்பட்டமை.
★ யாழ்ப்பாணம் "நாகதீப" என அழைக்கப்பட்டமை.
★ இசிகிரிய என்பவனால் "பியங்குகதிஸ்ஸ" எனும் விகாரை நிறுவப்பட்டமை.



வசபமன்னனால் அநுராதபுரத்தில் நகரமதில்களை உயர்த்திக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**97) அநுராதபுரத்தின் பாதுகாப்பையும் வனப்பையும் அதிகரிக்க மன்னன் மேற்கொண்ட பணிகளைக் குறிப்பிடுக.**

★ அநுராதபுர நகரைச் சுற்றி மதில்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டமை.

★ நகரில் ஆங்காங்கே பொய்கைகளை அமைத்து வாவிகளிலிருந்து அவற்றிற்கு நீர் பாய்ந்து செல்வதற்கான திட்டங்களை மேற்கொண்டமை.

★ பின்னர் அவற்றில் அன்னங்களை வளர்க்கும்படி அறிவுரை வழங்கியமை.

★ ரன்மசுப் பூங்கா அமைத்தமை.

**98) பௌத்தசமய வளர்ச்சிக்கு வசப மன்னனால் மேற்கொள்ளப்பட்ட பணிகளைக் குறிப்பிடுக.**

★ தூபராமதூபிக்கு வட்டதா மனை ஒன்றும் இசுறுமுனிய விகாரையில் போயா மனையும் அமைத்து பிக்கு களுக்கு தானமளித்தமை.

★ சித்துள்பௌவ விகாரையை அமைப்பித்தமை.

★ நாட்டின் பல பாகங்களிலும் உள்ளன விகாரைகளை புனர்நிர்மாணம் செய்வதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டமை.




எலகரக் கால்வாய் நிர்மாணம்

**99) முதன் முதலாக நாட்டில் வருமானத்தை அதிகரிக்க வரி அறவிடும் முறையை அறிமுகப்படுத்திய மன்னன் யார்?**

★ வசபன்

**100) நாட்டின் நிர்வாகத்தை இலகுவாக்கும் பொருட்டு முதல் முறையாக நிர்வாக அலகுகளை ஏற்படுத்தியவன் யார்?**

★ வசபன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**101) வசப மன்னனின் வரலாற்றினூடாக நாம் பெற்றுக்கொள்ளும் படிப்பினை யாது?**

- ★ மன்னன் தைரியமும் தூரநோக்கு சிந்தனையும் கொண்டவராக காணப்பட்டமையின் ஊடாக நாமும் அவ்வாறு நடந்து கொள்ள முடியும்
- ★ மன்னன் பொறுமையுடன் செயற்பட்டதூடாக நாமும் அவ்வாறு நடந்துகொள்ள முடியும்.
- ★ எதனையும் ஆராய்ந்து முடிவெடுக்கும் தன்மையின் ஊடாக படிப்பினையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**மகாசேனன்**

| | | |
|---|---|---|
| ★ இயற்பெயர் | : | மகாசேனா |
| ★ பாளிப்பெயர் | : | மகாசென் |
| ★ தந்தை | : | கோதபாயன் |
| ★ சகோதரன் | : | ஜெட்டதீஸன் |
| ★ ஆட்சிக்காலம் | : | கி.பி 276 - 303 |
| ★ மகன் | : | கீர்த்தி ஸ்ரீ மேவன் |
| ★ குரு | : | சங்க மித்ரதேரர் |
| ★ புகழ்ப்பெயர் | : | மின்னேரியாத்தெய்வம்,<br>பெரிய குளங்களின் தந்தை |

**102) மகாசேன மன்னன் விவசாய மேம்பாட்டிற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளினைக் குறிப்பிடுக.**

- ★ 16 குளங்களையும் பிரதான கால்வாய் ஒன்றையும் அமைத்தமை.
- ★ எலகரக்கால்வாயை விசாலமாக்கி மின்னேரியா வாவி, கவுடுலுவாவி என்பவற்றுடன் தொடர்புடைய நீர்ப்பாசனத் தொகுதியை அமைப்பித்தமை.
- ★ குளங்களுக்கு நீர் வழங்கவும், போக்குவரத்துக்கும் கால்வாய் அமைத்தமை.

**103) மகாசேனனால் அமைக்கப்பட்ட குளங்களைக் குறிப்பிடுக.**

| புராதன பெயர் | இன்றைய பெயர் |
|---|---|
| ★ மணிஹிரவாவி | மின்னேரியா |
| ★ வல்லுரவாவி | ஹிருளுவாவி |
| ★ கானுவாவி | கணதரா வாவி |
| ★ மகாமானி வாவி | மாமினிய வாவி |
| ★ கங்கதிஸ்ஸ வாவி | கவுடுலு வாவி |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**104) மகாசேனனால் அமைக்கப்பட்ட கால்வாய் எது?**

★ பப்பதன்ன கால்வாய் (பர்வந்த)

**105) மகாசேன மன்னன் மின்னேரியாத் தெய்வம் என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?**

★ மின்னேரியாக் குளம் போன்ற பாரிய குளங்களை அமைப்பித்து மக்களுக்கு சேவை செய்ததன் காரணத்தினால் அவ்வாறு அழைக்கப்பட்டான்.




மின்னேரியாக் குளம்

**106) மின்னேரியாக் குளத்தின் அமைப்பினைக் குறிப்பிடுக**

★ 1 ½ மைல் நீளம்

★ 4670 ஏக்கர் நிலத்தை உள்ளடக்கியது.




ஜேதவனராம விகாரையின் நிர்மாணப்பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**107) மகாசேன மன்னனால் அமைக்கப்பட்ட விகாரைகள் எவை?**

★ ஜேத்தவனராம
★ மின்னேரியா விகாரை
★ கோகன்ன விகாரை
★ ஏகாபில் விகாரை
★ தாசென்கல விகாரை



ஜேத்தவனராம (புனர்நிர்மாணத்துக்கு முன்)

**108) ஜேத்தவனராமவின் அமைப்பினைக் குறிப்பிடுக.?**


★ மகாசேன மன்னனால் நிறுவப்பட்டது.
★ 400 அடி உயரமுடையது.
★ தாதுகர்ப்பத்தின் அடிப்பகுதியின் விட்டம் 370 அடி.
★ உலகிலேயே அக்காலத்திலிருந்த விசாலமான தூபி இதுவாகும்.
★ புத்தபெருமானின் தாது இதில் வைக்கப்பட்டுள்ளது.

**109) மகாசேன மன்னனின் சமயப் பணிகளைக் குறிப்பிடுக.**

★ பல விகாரைகளைக் கட்டியமைத்தான்
★ நாட்டின் பல பாகங்களிலுள்ள விகாரைகளை புனர்நிர்மாணம் செய்தான்.
★ புத்த பிக்குகளுக்கு காவியுடை வழங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேத்தவனராம (புனர்நிர்மாணத்துக்கு பின்)

**110) மகாசேனன் எத்தனையாண்டுகள் இலங்கையை ஆட்சி செய்தான்?**

★ 27

**111) மகாசேன மன்னனின் வரலாற்றிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் படிப்பினைகள் எவை?**

★ மக்களின் நலன்கருதி பல பணிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

★ நாட்டு மக்களின் நன்மதிப்பினைப் பெற்றுக்கொண்டு செயற்பட வேண்டும்.

**தாதுசேனன்**

| | | |
|---|---|---|
| ★ தந்தை | : | தாடாநாமன் / தாதாநாமன் |
| ★ வம்சம் | : | மோரிய வம்சம் |
| ★ குரு | : | திக்சிய மகாதேரர் |
| ★ புதல்வர்கள் | : | காசியப்பன், முகலன் |
| ★ ஆட்சிக்காலம் | : | கி.பி. 459 - 477 |
| ★ சகோதரர் | : | சலதிஸ்போ |
| ★ தோற்கடித்தது | : | திரிதரனை |
| ★ குளங்கள் | : | 18 பாரிய குளம், 18 சிறிய குளம் |
| ★ புகழ்ப்பெயர் | : | கலாவாவிக்கடவுள், சமத்துவக்கொடை வேந்தன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாதுசேனனால் அமைக்கப்பட்ட குளங்கள்**


- ★ கலாவாவி
- ★ மானாமதுவாவி
- ★ மெத்தக்குட்டிய வாவி
- ★ யோதவாவி
- ★ மகாகணவாவி
- ★ மாத்துக்கம வாவி
- ★ பாணம வாவி
- ★ மகாதூப வாவி

**112) அநுராதபுர மக்கள் இன்றும் பயனடையும் தாதுசேனனின் குளம் எது?**

★ கலாவாவி



கலாவாவி



யோதஎல கால்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**113) தாதுசேனன் அமைத்த கால்வாய் எது?**

- ★ யோதக்கால்வாய் இதன் மறுபெயர் (ஜயகங்கை)
- ★ நீளம் 54 மைல் கொண்டது
- ★ கலாவாவியிலிருந்து திஸ்ஸவாவிக்கு நீரைக் கொண்டு செல்கின்றது.



தாதுசேன மன்னனின் நிர்மாணப்பணிகள்

**114) தாதுசேனனின் பௌத்த சமயப் பணிகளைக் குறிப்பிடுக?**

- ★ 18 விகாரைகளை அமைத்தமை

  உ - ம் : தக்கன கிரி தூபி
  கலாவாவி விகாரை
  அவுக்கண விகாரை
  வட்டதாதூபி

- ★ பௌத்த விகாரைகளை புனர் நிர்மாணம் செய்தமை.
- ★ பிக்குமாரின் தானசாலைகளை புனர்நிர்மாணம் செய்தமை.

  உ- ம் : மகாபாலி தானசாலை.

- ★ போதிகர விழா, போதிகர மனைகளை ஏற்படுத்தியமை.
- ★ சீன நாட்டுடன் சமயத்தொடர்புகளைப் பேணியமை.
- ★ முப்பெரும் விகாரைகளுக்கு இடிதாங்கி பொருத்தியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி - 01

01) பண்டுகாபயனின் தந்தையின் பெயர் யாது?
1. சத்தாதீசன் 2. தீககாமினி
3. மூடசிவன் 4. காவந்தீசன்

02) பண்டுகாபயனின் மனைவியின் பெயர் யாது?
1. குசுமாசனதேவி 2. பாண்டிமாதேவி
3. லீலாதேவி 4. சுவர்ணபாலி

03) அநுராதபுரத்திற்கு எல்லை வகுத்த மன்னன் யார்?
1. எல்லாளன் 2. துட்டகைமுனு
3. பண்டுகாபயன் 4. வசபன்

04) கம்மாரதேவ என்ற பெயருள்ள தெய்வத்தினை யார் வழிபட்டனர்?
1. கொல்லர்கள் 2. குயவர்கள்
3. தச்சர்கள் 4. அரசர்கள்

05) நகரின் அருகில் முதன் முதலில் குளமொன்றை அமைத்த அரசன் யார்?
1. தேவநம்பிய தீசன் 2. வசபன்
3. பண்டுகாபயன் 4. தாதுசேனன்

06) பண்டுகாபய மன்னன் அமைத்த முதலாவது குளத்தின் பெயர் யாது?
1. அபயவாவி 2. ஹிருளுவாவி
3. களனிவாவி 4. கந்தளாய் வாவி

07) பண்டுகாபயன் எத்தனை ஆண்டுகள் எமது நாட்டை ஆட்சி செய்தான்?
1. பத்து ஆண்டுகள் 2. முப்பது ஆண்டுகள்
3. அறுபது ஆண்டுகள் 4. எழுபது ஆண்டுகள்

08) பண்டுகாபயனால் திட்டமிடப்பட்ட அநுராதபுர நகரம் தொடர்பாக விளக்கம் கூறும் நூல் யாது?
1. தீபவம்சம் 2. மகாவம்சம்
3. சூளவம்சம் 4. யாவும் சரி

09) மூடசிவனின் மகனும் எமது நாட்டின் சிறந்த அரசனுமாக இருப்பவர் யார்?
1. துட்டகைமுனு 2. தேவநம்பிய தீசன்
3. வசபன் 4. எல்லாளன்

10) தேவநம்பிதீசன் காலத்தில் வடஇந்தியா எப்பேரரசனால் கட்டியாழப்பட்டது?
1. சோழர் 2. சேரர்
3. பாண்டியர் 4. அசோகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) தேவநம்பிய தீசனால் அனுப்பப்பட்ட குழுவின் தலைவனின் பெயர் யாது?

1. அரிட்டன் 2. அசோகன்
3. மகிந்தன் 4. தீசன்

12) அசோக மன்னன் பயன்படுத்திய மதிப்பிற்குரிய பெயர் யாது?

1. கடவுள் 2. அசோக
3. தேவநம்பிய 4. பண்டுகாபய

13) "தேவநம்பிய" என்பதன் பொருள் யாது?

1. தேவர்களை நம்பியவன்
2. கடவுளுக்கு பிரியமானவன்
3. தேவர்களுக்கு பிரயமானவன்
4. தெய்வம்

14) அசோக மன்னனின் மகனின் பெயர் யாது?

1. வசபன் 2. பண்டுகாபயன்
3. மகிந்த தேரர் 4. தீசன்

15) மகிந்ததேரர் எதற்காக இலங்கைக்கு வந்தார்?

1. கோயிலை தரிசிக்க 2. சுற்றுலாவிற்கு
3. தீசனை சந்திக்க 4. பௌத்த சமயத்தை பரப்ப

16) அநுராதபுரத்தில் தூபாராமவை அமைத்தவன் யார்?

1. துட்டகைமுனு 2. வசபன்
3. தேவநம்பியதீசன் 4. பண்டுகாபயன்

17) வட்டதாகே எனப்படுபவை யாவை?

1. தூபியை பாதுகாக்கும் கற்தூண்கள்
2. தூபராம
3. அரண்மனை
4. யானை வண்டி

18) தூபாராம தூபிக்கு வட்டதாகே மனையை அமைத்த மன்னன் யார்?

1. துட்டகைமுனு 2. 1ம் பராக்கிரமபாகு
3. வசபன் 4. பண்டுகாபயன்

19) இலங்கையில் எம்மன்னன் காலத்தில் வெள்ளரசுக்கிளை கொண்டு வரப்பட்டது.

1. வசபன் 2. பண்டுகாபயன்
3. துட்டகைமுனு 4. தேவநம்பியதீசன்

20) ஜம்புகோளப்பட்டண துறைமுகம் எப்பிரதேசத்தில் அமைந்துள்ளது?

1. மன்னார் 2. யாழ்ப்பாணம்
3. கொழும்பு 4. கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) அட்டசெட்டலென் எனக் குறிப்பிடப்படுவது எது?
1. மிகிந்தலை கற்குகை 2. சிகிரியா
3. வெள்ளரசுக்கிளை 4. கல்வெட்டு

22) அநுராதபுர நகர எல்லையை யானைகள் கொண்டு அடையாளப்படுத்திய மன்னன் யார்?
1. வசபன் 2. பண்டுகாபயன்
3. தேவநம்பியதீசன் 4. துட்டகைமுனு

23) தேவநம்பியதீசன் நகர எல்லையை நிர்மாணிக்க உதவியவர் யார்?
1. மகிந்ததேரர் 2. சங்கமித்தை
3. சத்தாதீசன் 4. பிக்குமார்கள்

24) இலங்கையில் புத்தசமயத்தை முதலில் தழுவிய மன்னன் யார்?
1. வசபன் 2. தேவநம்பியதீசன்
3. துட்டகைமுனு 4. பண்டுகாபயன்

25) தேவநம்பியதீசனின் தந்தை யார்?
1. சந்தாதீசன் 2. வசபன்
3. காவந்தீசன் 4. துட்டகைமுனு

26) உருகுனைரட்ட எனக் குறிப்பிடப்படும் பிரதேசம் எது?
1. மாகம 2. கொழும்பு
3. கண்டி 4. அநுராதபுரம்

27) துட்டகைமுனுவின் சகோதரனான தீசனை அவன் எங்கு அனுப்பினான்?
1. மாகம 2. திகாமடுல்லாவுக்கு
3. உருகுணை 4. கண்டி

28) திகாமடுல்ல எனப்பட்டது தற்போது எப்பிரதேசத்தை குறிப்பிடுகின்றது?
1. அநுராதபுரம 2. பொலனறுவை
3. அம்பாறை 4. மாத்தளை

29) எல்லாளன் விஜித்தபுரத்தில் எம்மன்னனுடன் போர் புரிந்தான்?
1. பண்டுகாபயன் 2. வசபன்
3. காவந்தீசன் 4. துட்டகைமுனு

30) அநுராதபுரத்தை எல்லாளன் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?
1. 25 ஆண்டுகள் 2. 44 ஆண்டுகள்
3. 30 ஆண்டுகள் 4. 15 ஆண்டுகள்

31) கண்டுல எனும் யானை எம்மன்னனுக்கு உதவியது?
1. பண்டுகாபயன் 2. துட்டகைமுனு
3. வசபன் 4. தேவநம்பியதீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32) காமினி அபயன் எனும் பெயரையுடைய மன்னன் யார்?
1. துட்டகைமுனு 2. வசபன்
3. பண்டுகாபயன் 4. தேவநம்பியதீசன்

33) அபயகிரி விகாரை எப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது
1. பொலன்னறுவை 2. கொழும்பு
3. அநுராதபுரம் 4. கண்டி

34) கல்வெட்டுக்களில் "பித்தரஜ" என குறிப்பிடப்பட்ட மன்னன் யார்?
1. பண்டு காபயன் 2. துட்டகைமுனு
3. வசபன் 4. வலகம்பா

35) பித்தரஜ தொடர்பான தகவல் எந்நூலில் குறிப்பிடப்படுகின்றது?
1. மகாவம்சம் 2. தீபவம்சம்
3. சூளவம்சம் 4. பூஜவெலிய

36) அபயகிரி விகாரையை பெரிதாக்கிய மன்னன் யார்?
1. 1ம் விஜயபாகு 2. பராக்கிரமபாகு
3. 1ம் கஜபாகு 4. துட்டகைமுனு

37) பின்வருவனவற்றுள் இலம்பகர்ண வம்சத்தை சேர்ந்த மன்னன் யார்?
1. 1ம் கஜபாகு
2. வசபன்
3. பண்டுகாபயன்
4. கனிஸ்ட திஸ்ஸமன்னன்

38) முதன் முதல் பாரிய குளங்களை அமைத்த மன்னன் யார்?
1. வலகம்பா
2. 1ம் பராக்கிரமபாகு
3. தேவநம்பியதீசன்
4. வசபன்

39) இசிகிரிய மன்னன் எப்பிரதேசத்தை நிர்வகிக்க நியமிக்கப்பட்டான்?
1. பொலன்னறுவை
2. கம்பளை
3. யாழ்ப்பாணம்
4. அநுராதபுரம்

40) வல்லிபுர பொற்சாசனத்துடன் தொடர்புடைய மன்னன் யார்?
1. வலகம்பா
2. வசபன்
3. பண்டுகாபயன்
4. 1ம் விஜயபாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41) வசபமன்னன் ............. அமைந்துள்ள சிதுல்பவ்வ விகாரைக்கு தூபியை அமைப்பித்தான்.

42) ....................... மன்னன் 11 குளங்களை அமைத்தான்.

43) கோதாபயன் என்பவரின் புதல்வன் .............. ஆவான்.

44) ................... மனிஹிர வாவி என அழைக்கப்பட்டது.

45) ஜேத்தவனராம ...................... எனும் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

46) ஜேத்தவனராமயில் புத்தபெருமானின் ................. வைக்கப்பட்டுள்ளது.

47) மகாசேன மன்னன் ........................ என குறிப்பிடப்படுகின்றான்.

48) ............................ உள்ள கணதரா வாவி மகாசேனனால் அமைக்கப்பட்டது.

49) முதன் முதலில் உள்நாட்டு வருமானத்தை அதிகரிக்க வரி அறவிடும் முறையை ................... மன்னன் அறிமுகப்படுத்தினான்.

50) வலகம்பா மன்னனின் தந்தை ................. ஆவான்.

## விடைகள்


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 2) | 4 | 3) | 3 | 4) | 1 | 5) | 3 |
| 6) | 1 | 7) | 4 | 8) | 2 | 9) | 2 | 10) | 4 |
| 11) | 1 | 12) | 3 | 13) | 2 | 14) | 3 | 15) | 4 |
| 16) | 3 | 17) | 1 | 18) | 3 | 19) | 4 | 20) | 2 |
| 21) | 1 | 22) | 3 | 23) | 1 | 24) | 2 | 25) | 3 |
| 26) | 1 | 27) | 2 | 28) | 3 | 29) | 4 | 30) | 2 |
| 31) | 2 | 32) | 1 | 33) | 3 | 34) | 4 | 35) | 1 |
| 36) | 3 | 37) | 2 | 38) | 4 | 39) | 3 | 40) | 2 |

41) திஸ்ஸமாராமையில் 42) வசபன்
43) மகாசேனன் 44) மின்னேரியாவாவி
45) அநுராதபுரம் 46) தாது
47) மின்னேரியாத் தெய்வம் 48) மிகிந்தலையில்
49) வசபன் 50) சத்தாதிஸ்ஸ மன்னன்.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No: 900
Acc No 307




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் துறைமுகங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் மாவட்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் மாகாணங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இலங்கையின் நீர்ப்பாசன நிர்மாணங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இலங்கையின் புராதன நதிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் இடைத்தவணை பரீட்சை வினாத்தாள்
# வரலாறு

**தரம் : 06** **நேரம் : 2 மணி**

**பகுதி - I**

❖ **பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.**

01. இஸ்ரோரியா என்பது எம்மொழிச் சொல்லாகும்?
(1) கிரேக்கம் (2) பாளி
(3) இலத்தீன் (4) தமிழ்

02. வரலாற்றின் தந்தையாக கருதப்படுபவர்?
(1) ஹெரடோரஸ் (2) E.H கார்
(3) திரவிலியன் (4) வீல்டூரன்ட்

03. இலங்கை வரலாற்றை அறிய உதவும் நம்பத்தகுந்த இலக்கிய மூலாதாரம் எது?
(1) மகாவம்சம் (2) சூளவம்சம்
(3) தீபவம்சம் (4) தாதுவம்சம்

04. "கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையிலான முடிவற்ற சம்பாஷனைகளே வரலாறாகும்." எனக்கூறியவர்?
(1) ஸ்ருவட் பிகொட் (2) வில்டூரண்ட்
(3) E.H கார் (4) E.றியார்

05. பாடசாலை வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களுள் இலக்கிய மூலாதாரங்கள் எனக்குறிப்பிடக் கூடியது?
(1) கழுத்துப்பட்டி (2) ஓவியம்
(3) நினைவுக்கல் (4) சம்பவ திரட்டு புத்தகம்

❖ **இடைவெளி நிரப்புக.**

06. ஹெரடோரஸ் ...................................... எனும் நாட்டில் வாழ்ந்தார்.

07. புத்த வருடம் ஆரம்பமானது புத்த பெருமானின் ......................................இருந்து ஆகும்.

08. பராக்கிரமபாகு மன்னன் பொலநறுவைக் கல்விகாரையைக் கட்டியது ................................ காலப்பகுதியில் ஆகும்.

09. ஆதி காலத்தில் வாழ்ந்த மனிதர்களில் பயன்படுத்தப்பட்டு தற்போது எஞ்சியுள்ள பொருட்கள் ....................எனப்படும்.

10. இலங்கை வரலாறு பற்றி எழுதப்பட்டுள்ள முதல் இலக்கிய மூலதாரம் ................................ ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **கீழே குறிப்பிட்டுள்ள வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.**

11. இஸ்லாம் சமயத்தின ஸ்தாபகரான முகமது நபி கி.பி 622 இல் மக்காவில் இருந்து மதீனாவுக்கு சென்றார். ( )
12. மனிதன் இறந்த காலத்தில் செய்த விடயங்கள் அனைத்தும் வரலாற்றுக்கு உரித்தானவை ( )
13. நிகழ்காலத்தை அறிந்து கொண்டு இறந்த காலத்தை திட்டமிட வரலாறு எமக்கு உதவுகின்றது. ( )
14. புத்தபெருமான் பரிநிர்வாணம் அடைந்த தினம் இன்று வெசாக் போயா தினமாக கணிப்பிடப்படுகிறது. ( )
15. வரலாறு எமக்கு வழிகாட்டுகின்றது ( )

(15 x 02 = 30 புள்ளிகள்)

❖ **கேட்கப்பட்ட வினாக்களுக்கு ஏதுவான விடைகளை அதே ஒழுங்கில் குறிப்பிடுக.**

01. வரலாறு என்றால் என்ன என்பதை அறிஞர்களின் வரைவிலக்கனத்தினூடாக வரையறை செய்க.
02. வரலாறு பற்றிய வரைவிலக்கணங்களை முன்வைத்த அறிஞர்கள் ஐந்து பேரைக் குறிப்பிடுக.
03. மூலாதாரங்கள் என்றால் என்ன? அதன் பிரதான வகைப்பாடுகள் எவை?
04. உமது பாடசாலை வரலாற்றை அறிய உதவும் இலக்கிய மூலாதாரங்கள் ஐந்து குறிப்பிடுக.
05. உமது பாடசாலை வரலாற்றை அறிய உதவும் தொல்பொருள் மூலாதாரங்கள் ஐந்து குறிப்பிடுக.
06. வரலாற்றை கற்கும் போது நாம் எதிர்கொள்ளும் சவால்களைக் குறிப்பிடுக.
07. வரலாற்றினூடாக நாம் அறிந்து கொள்ளும் விடயங்கள் ஐந்து குறிப்பிடுக.
08. வரலாற்றை கற்பதனால் நாம் அடைந்து கொள்ளும் பயன்கள் ஐந்து குறிப்பிடுக.
09. தொல்பொருள் அகழ்வு என்றால் என்ன?
10. வரலாற்றுக் காலத்தை அளவிடப் பயன்படும் ஆண்டு முறைகளைக் குறிப்பிடுக.
11. கி.மு, கி.பி. என்பவைகளுக்கிடையிலான வேறுபாடு யாது?
12. கீழ்வரும் ஆண்டுகளில் இடம்பெற்ற நிகழ்வுகளைக் குறிப்பிடுக.
    A. கி.பி. 1948 B. கி.பி. 01 C. கி.மு 544
13. கீழ்வரும் ஆண்டுகளை புத்தவருடத்தில் கணிப்பிடுக.
    A. உமது பிறந்த ஆண்டு B. தற்போதைய ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாந்தவணை பரீட்சை வினாத்தாள்
# வரலாறு

**தரம் : 06** **நேரம் : 2 மணி**

## பகுதி - I

❖ **சரியானவிடையின் கீழ் கோடிடுக.**

01. இலங்கையின் முதலாவதுஇலக்கிய மூலாதாரம்?
(1) போதிவம்சம் (2) தீபவம்சம்
(3) சூளவம்சம் (4) மகாவம்சம்

02. இஸ்ரோரியா என்பது எம்மொழிச் சொல்?
(1) கிரேக்கம் (2) பாரசீகம்
(3)இலத்தீன் (4) உருது

03. வரலாறு கற்பதனால் நாம் அடைந்துகொள்ளும் பயன்களில் பொருத்தமற்றது?
(1) நலனாய்வுச் சிந்தனை விருத்தியடையும்
(2) தலைமைத்துவப் பண்பு விருத்தியடையும்
(3) ஏனையோரின் கருத்துக்களை மதியாத பண்பு விருத்தியடையும்
(4)நாட்டின் தனித்துவத்தைஅறிந்துகொள்ளமுடியும்

04. "கீழைத்தேசங்களின் தானியக் களஞ்சியம்" என அழைக்கப்பட்ட நாடு எது?
(1) இலங்கை (2) அரேபியா
(3) இந்தியா (4) பர்மா

05. நாம் பயன்படுத்தும் "க" என்ற எழுத்து எத்தனை ஆண்டுகளால் இந்நிலையை அடைந்தது?
(1) 1550 ஆண்டுகளால் (2) 1300 ஆண்டுகளால்
(3) 1500 ஆண்டுகளால் (4) 1200 ஆண்டுகளால்

06. நிகழ்வுகளின் சமகாலத்தில் உருவாக்கப்படும் மூலாதாரம்?
(1) கல்வெட்டு (2) இலக்கியம்
(3) சிதைவுகள் (4) மூன்றும் அல்ல

07. இலங்கையானது பிரித்தானியரிடமிருந்து சுதந்திரமடைந்தது?
(1) கி.பி 1948ல் (2) கி.பி 1946ல
(3) கி.பி 1945ல் (4) கி.பி 1947ல்

08. வரலாற்றின் தந்தை எனக் குறிப்பிடப்படுபவர்?
(1) ஹெரடோராஸ் (2) திரவிலியன்
(3) சார்ள்ஸ் டார்வின் (4) E.றியார்

09. மனிதனுடைய தோற்ற வரலாற்றின் தொட்டிலாக கருதப்படும் பிரதேசம்?
(1) ஆபிரிக்கா (2) அந்தாட்டிக்கா
(3) அமெரிக்கா (4) அரேபியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. புவியில் தோற்றம் பெற்ற முதலாவது உயிரினம் எது?
(1) அமீபா (2) பங்கசு
(3) புரோகாயோட் (4) வைரஸ்

11. பாதங்கள் பலவற்றைக் கொண்ட மரஅட்டை தோற்றம் பெற்ற யுகம்?
(1) சிலுரியன் (2) பெலியோசொயி
(3) பிளைத்தோசின் (4) ஹொலோசீன்

12. ஒபபீனியா எனப்படும் கடல் வாழ் உயிரினம் கொண்டிருந்த கண்களின் எண்ணிக்கை யாது?
(1) 4 (2) 5 (3) 8 (4) 6

13. ஹோமோ ஹெபிலஸ் என்பதன் பொருள்?
(1) உணவுடையமனிதன் (2) நெருப்புடையமனிதன்
(3) ஆற்றலுடையமனிதன் (4) புத்தியுடையமனிதன்

14. நவீனமனிதன் எக்கூர்ப்புநிலைக்குரித்தானவன்?
(1) ஒஸ்ரலோபிதிகஸ் (2) ஹோமோஹெபிலஸ்
(3) சிம்பன்சி (4) ஹோமோசேபியன்ஸ்

15. நாடோடிகளாகவும், குழுக்களாகவும் மனிதன் வாழ்ந்த கலாசார கட்டம்?
(1) பழைய கற்காலம் (2) புதிய கற்காலம்
(3) இடைக் கற்காலம் (4) அதிபுதிய கற்காலம்

16. நிக்ரொயிட் மனிதன் வாழ்ந்திருக்கக்கூடிய நாடாக கருதப்படுவது?
(1) அவுஸ்ரேலியா (2) கிறீன்லாந்து
(3) கனடா (4) ஆபிரிக்கா

17. புதிய கற்காலத்தில் மனிதனால் செய்யப்பட்ட அரிவாள் இணங்காணப்பட்ட பிரதேசம்?
(1) இஸ்ரவேல் (2) லண்டன்
(3) கனடா (4) பாரசீகம்

18. பூமியின் எப்பகுதியில் முதன்முதலாக உயிரினங்கள் தோற்றம் பெற்றன?
(1) தரையில் (2) மலையில்
(3) நீரில் (4) மரத்தில்

19. கோதுமைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட முதலாவது நாடு?
(1) மத்திய மெக்சிக்கோ (2) சீனா
(3) நேபளாம் (4) மத்தியதரைக் கடல்

20. மனிதனின் முக அமைப்புக்கள் வேறுபட்டு தோன்றுவதற்கு பிரதான காரணம்?
(1) பிறப்பு (2) பழக்கவழக்கம்
(3) கலாச்சாரம் (4) சூழல்

(20 x 2 = 40 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II

❖ சகல வினாக்களிற்கும் விடைதருக.

01. (1) வரலாறு என்றால் என்ன?
(2) வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களின் பிரதான வகைப்பாட்டை குறிப்பிட்டு அவற்றுக்கான உதாரணங்கள் தலா இரண்டு வீதம் குறிப்பிடுக.
(3) வரலாறு கற்பதனால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக.
(3 x 4 = 12புள்ளிகள்)

02. (1) உமது பாடசாலை வரலாற்றை அறிய உதவும் இலக்கிய மூலாதாரங்கள் இரண்டும் தொல் பொருள் மூலாதாரங்கள் இரண்டும் குறிப்பிடுக.
(2) வரலாற்றுக் காலத்தைஅளவிடப் பயன்படும் ஆண்டு முறைகளை குறிப்பிடுக.
(3) வரலாற்றுக் காலத்தை அளவிடப் பயன்படும் ஆண்டு முறைகளின் ஆரம்ப நிகழ்வுகளைக் குறிப்பிடுக
(3 x 4 = 12புள்ளிகள்)

03. (1) மானிடப் பரிணாமம் என்றால் என்ன?
(2) மனிதனின் உடற்கூர்ப்பின் விருத்திப் படிநிலைகளை குறிப்பிடுக
(3) ஹோமோசேப்பியன்களின் முகஅமைப்புக்களைக் குறிப்பிடுக
(3 x 4 = 12புள்ளிகள்)

04. (1) ஓபபீனியா உயிரினத்தின் இயல்புகள் நான்கு குறிப்பிடுக.
(2) கலாசார மாற்றம் என்றால் என்ன?
(3) பழைய கற்காலமனிதனின் இயல்புகள் நான்கு குறிப்பிடுக
(3 x 4 = 12புள்ளிகள்)

05. (1) இடைக் கற்காலத்தில் மனிதன் பெற்ற முன்னேற்றங்கள் நான்கு குறிப்பிடுக.
(2) மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்தமையால் அடைந்த அனுகூலங்களைத் தருக.
(3) ஆரம்பகாலத்தில் கட்டப்பட்ட வீடுகளின் இயல்புகள் இரண்டு தருக.
(3 x 4 = 12புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் இடைத்தவணை பரீட்சை வினாத்தாள்
# வரலாறு

**தரம் : 06** **நேரம் : 2 மணி**

## பகுதி - I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெளிவாக எழுதுக.**

01. வரலாற்றின் தந்தையாக கருதப்படுபவர் யார்?
02. கி.பி 5ம் நூற்றாண்டில் மகாவிகாரையில் வைத்து எழுதப்பட்டதாக கருதப்படும் மூலாதாரம்.
03. கீழைத்தேசங்களின் தானியக் களஞ்சியம் என அழைக்கப்பட்ட நாடு எது?
04. பூமி தோன்றிய தூசிப்படலத்தினை ஆங்கில இலக்கியங்கள் எவ்வாறு குறிப்பிடுகின்றன.?
05. கல்லில் ஆயுதங்கள் மேற்கொள்வதற்கு முதலில் முயற்சி செய்த மனிதன் யார்?

❖ **இடைவெளி நிரப்புக.**

06. மனிதனின் பரிணாமக் கோட்பாட்டை ……………… ………………… என்பவர் முன்வைத்தவர்
07. ஐந்து கண்டங்களும் ஒன்றாக காணப்பட்ட நிலப்பகுதி ……………………………………. எனப்பட்டது
08. பெரும் பனிக்காலத்தின் முடிவில் ……………………………… எனும் யுகம் தோன்றியது.
09. ஓபபீனியாவின் பாறைப்படிவு ……………………………………… எனும் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது
10. மூலாதாரங்களின் வரலாற்றுக் காலத்தை கணிப்பதற்காக ……………… எனும் அலகு பயன்படுத்தப்படும்.

❖ **மிகப் பொருத்தமானவற்றுடன் தொடர்புபடுத்துக.**

| | | |
|---|---|---|
| 11. | சோளம் பயிரிடல் | இஸ்ரவேல் |
| 12. | நெருப்பு பயன்படல் | மெக்சிக்கோ |
| 13. | மொரங்கோலொயிட் | சீனா |
| 14. | மொசப்பதேமியா | ஜப்பான் |
| 15. | நெல் பயிரிடல் | ஈராக் |

❖ **மிகப் பொருத்தமான விடையை எழுதுக.**

16. முதல் முதல் இறப்பரினை அறிமுகஞ் செய்த நாகரிகம் எது?
17. மொசப்பதேமியா என்பதன் பொருள் யாது?
18. உலகில் முதன் முதலில் எழுத்துக்கலையைத் தோற்றுவித்தவர் எந் நாகரிகத்தவர்?
19. உலகின் மிகப்பழமை வாய்ந்த நூல் எது?
20. ஹமுராபி மன்னன் எவ்வம்சத்தை சேர்ந்தவர்?

(20 x 2 = 40 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II

01. (1) இலக்கிய மூலாதாரங்கள் மூன்றினை குறிப்பிடுக.

(2) வரலாற்றுக்கால அளவீட்டு முறைகள் நான்கு குறிப்பிடுக.

(3) கீழ்வரும் மூலாதாரங்களில் காலத்தினை நூற்றாண்டில் குறிப்பிடுக.

A. தீபவம்சம் C. கல்விகாரை
B. மகாவம்சம் D. மின்னேரியாக்குளம்

02. (1) ஒபபீனியா எனும் உயிரினத்தின் இயல்புகள் 3 குறிப்பிடுக.

(2) மனிதனின் உடலியல் ரீதியான கூர்ப்புக் கட்டங்கள் 4 குறிப்பிடுக.

(3) கீழ்வருவன எக்காலத்திற்குரியன எனக்குறிப்பிடுக.

A. மனிதன் குழுவாக இடத்திற்கிடம் அலைந்தமை
B. வில், அம்பு என்பவற்றை பயன்படுத்தியமை
C. விவசாயம் செய்ய பழகிக் கொண்டமை
D. சமய வழிபாடுகளில் ஈடுபடல்

03. (1) நதிக்கரைகளில் நாகரிகம் தோன்றியமைக்கான காரணம் 3 தருக.

(2) புராதன உலகில் தோற்றம் பெற்ற நாகரிகங்கள் மூன்றினையும் அதன் நதிக்கரைகளையும் குறிப்பிடுக.

(3) கீழ்வரும் விடயங்களுடன் தொடர்புடைய நாகரிகங்களைக் குறிப்பிடுக.

A. கி.மு 3100 - 2900 ற்கு இடைப்பட்ட கால நாகரிகம்
B. ரைனோசிரஸ் எனும் இலச்சினை பொறிக்கப்பட்ட நாகரிகம்
C. நைல் நதியை அண்டி தோற்றம் பெற்ற நாகரிகம் எது?
D. கெய்ரோவினை தலைநகராகக் கொண்ட நாகரிகம் எது?

04. (1) சிந்துநதி நாகரிகத்திற்கு உட்பட்ட நகரங்கள் மூன்றினைப் பெயரிடுக.

(2) கீழ்வரும் சொற்களுக்கு பொருத்தமான விடையினை குறிப்பிடுக.

A. என்கிகி B. என்லிலி
C. அனு D. எஸ்தர்

(3) நாகரிகத்தின் பண்புகள் 4 குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாந்தவணை பரீட்சை வினாத்தாள்
# வரலாறு

**தரம் : 06** **நேரம் : 2 மணி**

## பகுதி - I

❖ **மிகப்பொருத்தமானவிடையின் கீழ் கோடிடுக.**

01. வரலாற்றைக் கற்கஉதவும் மூலாதாரங்களில் இலக்கிய மூலாதாரமாவது?
   (1) வம்சக்கதை
   (2) சாசனம்
   (3) கல்வெட்டு
   (4) சிதைவுகள்

02. முற்காலத்தில் இலங்கை தானியக் களஞ்சியம் என அழைக்கப் படுகையில் இராசதானியாக நிலவிய நகர் எது?
   (1) பொலன்னறுவை
   (2) கண்டி
   (3) அநுராதபுரம்
   (4) தம்பதெனியா

03. வெசாக் போயாதினம் எதனை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படுகின்றது.
   (1) புத்தபெருமான் பரிநிர்வாணம்
   (2) புத்தபெருமானின் வாழ்வு
   (3) புத்தபெருமானின் பிறப்பு
   (4) புத்தபெருமானின் மறைவு

04. புவியும் உயிரினங்களும் உருவாதல் பற்றிய கருத்துக்களுள் மிகப் பொருத்தமானது.
   (1) சிலூரியன் யுகத்தில் தாவரங்கள் தோற்றம் பெற்றன.
   (2) மிருகங்கள் பெலியோசொயி யுகத்தில் தோன்றின
   (3) பெரும்பனியுகம் மனிதன் தோன்றுவதற்கான பின்னணியை ஏற்படுத்தவில்லை
   (4) சிலூரியன் யுகத்தில் மரஅட்டைகள் தோற்றம் பெற்றன.

05. எலும்புகளைக் கொண்டு வீடமைத்தல் கொண்ட மனித வர்க்கம்.
   (1) ஹோமோஇரெக்டஸ்
   (2) ஹோமோசேப்பியன்ஸ்
   (3) ஹோமோநியண்டதாலென்சிஸ்
   (4) ஹோமோஹெபிலஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. களி மண்ணால் செய்யப்பட்ட அரிவாள் கண்டுபிடிக்கப்பட்ட கற்குகை
(1) ஈராக்
(2) இந்தியா
(3) இஸ்ரவேல்
(4) சீனா

07. யூப்பிரட்டிஸ் - தைகிரிஸ் நதிப்பள்ளத்தாக்கில் தோற்றம் பெற்ற நாகரிகம்
(1) சுமேரியநாகரிகம்
(2) நைல்நதிநாகரிகம்
(3) சீனநாகரிகம்
(4) சிந்துவெளிநாகரிகம்

08. வனரக் குடும்பத்திலிருந்து மனிதப் பரம்பரை தோன்றுவதற்கான முக்கிய காரணமாக கருதப்படுவது
(1) உணவுப் பற்றாக்குறை
(2) வெப்ப காலத்தில் நிலவிய காலநிலை
(3) இருகால்களால் நடக்கத் தொடங்கியதால்
(4) பெரும்பனிக் காலத்தில் நிலவிய காலநிலை

09. மனிதனுடைய தோற்ற வரலாற்றின் தொட்டிலாக கருதப்பட்ட பிரதேசம்
(1) வடக்கு ஆபிரிக்கா
(2) கிழக்காபிரிக்கா
(3) தெற்கு ஆபிரிக்கா
(4) மேற்கு ஆபிரிக்கா

10. ஆப்பு வடிவத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நாகரிகம்
(1) மொசப்பதேமிய நாகரிகம்
(2) குவாங்கோ நாகரிகம்
(3) சீன நாகரிகம்
(4) நைல்நதி நாகரிகம்

11. சிந்துநதி நாகரித்தில் இணங்காணப்பட்ட உருவத்தில் உள்ள சமூக பிரிவு
(1) மதகுரு
(2) அரசன்
(3) அரசி
(4) உயர்குடிமனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ கீழ்வருவனவற்றைப் பயன்படுத்தி கேட்கப்படும் வினாக்களுக்கான விடைகளைக் கீறிடுக.

A. மம்மி முறை　　B. சித்திரஎழுத்துக்கள்
C. மொகஞ்தாரோ நகர்　　D. தவலம் முறை
E. இலச்சினைகள்　　F. பழமைவாய்ந்த நூல்

12. மொசப்பதேமிய நாகரிகத்துடன் தொடர்புடைய விடயங்களைக் குறிப்பிடுக.
(1) Bயும் Cயும்　　(2) Aயும் Dயும்
(3) Dயும் Fஉம்　　(4) Eயும் Fஉம்

13. எகிப்திய நாகரிகத்துடன் தொடர்புடைய விடயங்களைக் குறிப்பிடுக.
(1) Aயும் Bயும்　　(2) Eயும் Fஉம்
(3) Cயும் Dயும்　　(4) Aயும் Cயும்

14. இந்திய நாகரிகத்துடன் தொடர்புடைய விடயங்களைக் குறிப்பிடுக.
(1) Cயும் Eயும்　　(2) Dயும் Bயும்
(3) Cயும் Aயும்　　(4) Bயும் Fஉம்

15. சிப்பியைத் துளைத்து கழுத்தில் அணியும் அட்டியல் கண்டுபிடிக்கப்பட்ட கற்குகை.
(1) பாகியன்கல　　(2) கித்துல்கல
(3) பட்டதொம்பலென　　(4) இராவணன் எல்ல

16. பிரமிட் அமைப்புக்களுடன் தொடர்புடைய நாகரிகம்.
(1) சிந்துவெளிநாகரிகம்　　(2) குவாங்கோநாகரிகம்
(3) மொசப்பதேமியநாகரிகம்　　(4) நைல்நதிநாகரிகம்

17. விஜயன் இலங்கையில் திருமணம் செய்த இயக்கப்பெண்.
(1) குவேனி　　(2) பத்தகச்சானா
(3) விஜயை　　(4) உன்மாதச் சித்திரா

18. இலங்கையில் குடியேற்றங்கள் நிறுவப்பட்டமை தொடர்பாக தகவல்களை எடுத்துக் கூறும் மூலாதாரம்.
(1) மகாவம்சம்　　(2) சூளவம்சம்
(3) தீபவம்சம்　　(4) நுரசவாஹினி

19. பண்டுகாயன் வளரந்த மாடு மேய்ப்பவனின் இடம்
(1) தொரமடலாவ　　(2) அனுராதபுரம்
(3) சேத்தியகிரி　　(4) பொலனறுவை

20. இலங்கையில் பௌத்தமதத்தை பரப்பியவர்
(1) தீஸன்　　(2) மகிந்ததேரர்
(3) அசோகன்　　(4) சங்கமித்தா

(20 x 2 = 40புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II

- ❖ **கவனிக்குக.**
- ❖ **சகலவினாக்களுக்கும் விடைதருக.**

01. (1) இலங்கை வரலாற்றை வெளிப்படுத்தும் எழுத்துரு ஆவணம் மூன்று குறிப்பிடுக.

(2) பின்வரும் ஆண்டுகளைப் குறிப்பிடுக.

A. மகாசேனனின் ஆட்சிஆரம்பம்

B. இயேசுகிறிஸ்துவின் பிறப்பு

C. இலங்கை சுதந்திரம் அடைந்தமை

(3) கீழேகேட்கப்படும் வினாக்களுக்குஏதுவானவிடைகளைக் குறிப்பிடுக.

A. இலங்கையில் வாழும் ஹோமோ சேப்பியன்ஸ்களின் முக அமைப்பு

B. இற்றைக்கு 9000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமாகிய கலாசார கட்டம்

C. மானிடப் பரிணாமத்தின் முதலாவது கட்டம்

D. உலகில் முதலில் தோன்றிய நுண்ணுயிர்

03. (1) புராதன உலகில் நிலவிய நாகரிகங்களை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.

A. உலகில் அறியப்பட்ட எழுத்துக்கலை தோன்றிய நாகரிகம்

B. விளையாட்டு மண்வண்டி பயன்படுத்தப்பட்ட நாகரிகம்

C. சடலங்களை மருந்திட்டுப் பாதுகாத்த நாகரிகம்

(2) சீனர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட விடயங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

(3) மொசப்பதேமிய நாகரிகம் கொண்டிருக்கும் சமூகப் பிரிவுகளைக் குறிப்பிட்டு அப்பிரிவுகளின் இயல்புகள் தலா ஒவ்வொன்று வீதம் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. (1) சிந்துநதி நாகரிக மக்கள் பயன்படுத்திய உலோகங்கள் மூன்று குறிப்பிடுக.

(2) எகிப்திய நாகரிகம் நிலவிய போது அங்கு ஆட்சியாளர்களாக விளங்கிய அரசர்கள் மூவரைக் குறிப்பிடுக.

(3) கீழ்வரும் விடயங்களோடு தொடர்புடைய நாகரிகங்களைக் குறிப்பிடுக.

A. தவலம் முறைப்பயன்பாடு

B. கி.மு2600 - 1990 காலப்பகுதியில் நிலவியமை

C. பாராவோ பரம்பரையைச் சேர்ந்த மன்னர்களின் ஆட்சி

D. மிருகஅடையாளத்துடன் களிமண் இலச்சினை.

05. (1) இலங்கையில் கற்கால மனிதன் வாழ்ந்திருக்க கூடிய கற்குகைகள் மூன்று பெயரிடுக.

(2) இலங்கையில் குடியேற்றங்களை நிறுவிய விஜயனின் தோழர்களில் மூவரைக் குறிப்பிட்டு அவர்களது குடியிருப்புக்களையும் குறிப்பிடுக.

(3) வரலாற்றுக்குமுற்பட்டகாலம் தொடர்பாக வினாவப்படும் வினாக்களுக்கான விடைகளைகுறிப்பிடுக.

A. வாழ்க்கை முறைப் பண்புகள் இரண்டு

B. அலங்காரமுறைகள் இரண்டு.

06. (1) பண்டுகாபய மன்னன் தொடர்பான கீழ்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.

A. தாய் -

B. தந்தை -

C. குரு -

(2) இலங்கையில் விஜயன் வருகைக்கு முன்னர் வாழ்ந்த மக்களின் முன்னேற்றத் தன்மையை கொண்டிருந்தார்கள் என்பதற்கான சான்றுகள் மூன்று குறிப்பிடுக.

(3) A. இயக்கர் குலத்தவர்களுக்குரித்தான புராதன நகரங்கள் 2 தருக.

B. இலங்கையின் முதலாவது ஆரியக் குழுத்தலைவன் இரத்த உறவு கொண்ட பெண்கள் இருவரைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் இடைத்தவணை பரீட்சை வினாத்தாள்
# வரலாறு

**தரம் : 06** **நேரம் : 2 மணி**

## பகுதி - I

❖ **எல்லாவினாக்களுக்கும் விடைதருக.**

01. வரலாற்றின் தந்தை யார்?
(1) ஹெரடோரஸ் (2) ஸ்டுவர்ட்
(3) பொலிபியஸ் (4) E.H. கார்

02. மகாசேன மன்னன் ஆட்சிசெய்த இராசதானி
(1) அனுராதபுரம் (2) பொலன்னறுவை
(3) மகாகமம் (4) சிகிரியா

03. இலங்கையின் காலத்தால் முந்திய இலக்கிய மூலாதாரம்
(1) மகாவம்சம் (2) சூளவம்சம்
(3) தீபவம்சம் (4) தாதுவம்சம்

04. புவியின் உட்பகுதியிலுள்ள பதார்த்தம்
(1) நெருப்பு (2) லாவா
(3) புகை (4) நிகாரிகா

05. வரலாறு என்பது முடிவற்ற பேச்சுவார்த்தை எனக் குறிப்பிட்டவர்
(1) ஹெரடோரஸ் (2) டார்வின்
(3) ஈ.எச். கார் (4) E. றியார்

06. வில் அம்பு என்பவற்றை பயன்படுத்தியதாக கருதப்படும் வரலாற்று காலம்.
(1) பழையகற்காலம் (2) புதியகற்காலம்
(3) இடைக்கற்காலம் (4) நவீன காலம்

07. கலைகளை உலகிற்கு அறிமுகப்படுத்திய வரலாற்று மனிதன்
(1) ஹோமோசேப்பியன்
(2) ஹோமோ இரெக்டஸ்
(3) ஹோமோநியாண்டதாலென்சிஸ்
(4) ஹோமோ ஹெவிலஸ்

08. நிக்ரொயிட் இன மக்கள் வாழும் நாடு.
(1) கிறின்லாந்து (2) ஆபிரிக்கா
(3) ஜாவா (4) பிரித்தானியா

09. நாகரிகங்களுள் நகர அமைப்பில் சிறந்ததாக கருதப்படும் நாடு எது?
(1) ஈராக் (2) இந்தியா
(3) எகிப்து (4) சீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. என்கிகி என அழைக்கப்படும் கடவுள் கீழ்வருவனவற்றுக்கு எவற்றுக்கு முக்கியமானவர்?

(1) பூமி (2) விவசாயம் (3) கடல் (4) காற்று

11. விலங்கு இலட்சிணை காணப்படும் நதிக்கரை நாகரிகம்

(1) நைல்நதி (2) குவாங்கோநதி
(3) சிந்துநதி (4) மொசப்பதேமியா

12. சிப்பியை துளைத்து அட்டியல் செய்ததாக கருதப்படும் தொல்பொருள் மூலாதாரம் காணப்படும் இடம்.

(1) கித்துக்கல (2) பாகியன்கல
(3) பட்டதொம்பலென (4) புந்தல

13. விஜயன் இலங்கையில் வந்திறங்கியதாக கருதப்படும் இடம்.

(1) புத்தளம் (2) தம்பன்னி
(3) யாழ்ப்பாணம் (4) மாந்தை

14. விஜயன் முதலில் திருமணம் செய்த பெண்

(1) குவேனி (2) விஜயை
(3) பத்தகச்சானா (4) அனுலா

15. வசப மன்னன் இலங்கையின் எந்த அரச வம்சத்துக் குரியவனாக கருதப்படுகின்றான்.

(1) மௌரியம் (2) சத்திரியம்
(3) இயக்கர் (4) இலம்பகர்ணம்

16. பண்டுகாபயனினால் அமைக்கப்பட்ட நகரம்

(1) பொலன்னறுவை (2) அநுராதபுரம்
(3) மகாகமை (4) உறுகுனை

17. இலங்கை வரலாற்றின் முதலாவது பிக்குணியாக கருதப்படுவது

(1) மகிந்ததேரர் (2) தேவநம்பியதீஸன்
(3) அரிட்டன் (4) அனுலா

18. இலங்கையின் வெள்ளரசுமரக்கிளை கொண்டு வரப்பட்டது

(1) சங்கமித்தையால் (2) மகிந்ததேரரால்
(3) அரிட்டனால் (4) அசோகனால்

19. அநுராதபுரத்தில் வாழ்ந்தமக்களுள் “கம்மக்கார” எனும் தெய்வ வழிபாட்டை வழிபட்ட மக்கள்.

(1) விவசாயமக்கள் (2) கொல்லர்
(3) குயவர் (4) தச்சர்கள்

20. அநுராதபுரத்தில் பண்டுகாயனால் நகர நிர்வாகத்திற்காக உருவாக்கப்பட்ட பதவி

(1) நகரகுத்திக (2) நகரவடிக
(3) நடஅதெக (4) அச அதெக

(20 x 2 = 40 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II

❖ அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.

01. தொல்பொருள் மூலாதாரங்கள் நான்கு தருக.

02. காலங்களினை அளவிடப்பயன்படும் ஆண்டு முறைகள் 4 தருக.

03. வரலாற்றினை கற்றுக்கொள்ளும் போது ஏற்படும் சவால்கள் நான்கு தருக.

04. ஒபபீனியா என்ற உயிரினத்தின் இயல்புகள் 3 தருக.

05. A விலங்குகள் B தாவரங்கள் இவைகள் தோன்றிய காலங்களை முறையே தருக.

06. பெரும்பனி யுகத்தின் இயல்புகள் மூன்று தருக.

07. முதல் மூன்று மானிடப் பரிணாமங்களையும் குறிப்பிடுக.

08. கலாச்சாரத்தின் வளர்ச்சி காலங்களை குறிப்பிடுக.

09. நதிக்கரைகளில் நாகரிகங்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை குறிப்பிடுக.

10. எகிப்திய நாகரிகத்தவர்களால் உலகிற்கு கிடைத்த கொடைகள் மூன்றை குறிப்பிடுக.

11 கற்கால மனிதவர்க்கத்தின் இயல்புகள் நான்கு தருக.

12. விஜயன், குவேனிக்கு பிறந்த பிள்ளைகளைக் குறிப்பிடுக

13. நீர்ப்பாசன பணிகள் மேற்கொண்ட மன்னர்கள் நால்வரை குறிப்பிடுக.

14. இலங்கை அனுராதபுரத்தின் சிறப்பியல்புகள் நான்குதருக.

15. பண்டுகாபயன் ஆட்சிக்கு வர உதவியோரைக் குறிப்பிடுக

(15x4=60புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாந்தவணை பரீட்சை வினாத்தாள்
# வரலாறு

**தரம் : 06** **நேரம் : 2 மணி**

## பகுதி - I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. மகாநாமதேரரால் பாளி மொழியில் எழுதப்பட்ட நூல்.
    (1) மகாபோதி வம்சம்
    (2) மகாவம்சம்
    (3) தீபவம்சம்
    (4) சூளவம்சம்

02. வரலாறு கற்பதன் பயன்களில் பொருத்தமற்றது
    (1) தேசிய தனித்துவத்தை இனங்காணல்
    (2) நலனாய்வுச் சிந்தனை விருத்தி
    (3) ஏனைய பண்பாடுகளை ஒதுக்குதல்
    (4) தேசிய ஒற்றுமை விருத்தி

03. புவியும் உயிரினங்களும் உருவாதல் பற்றிய கருத்துக்களுள் மிகப்பொருத்தமானது
    (1) சிலுரியன் யுகத்தில் மர அட்டைகள் தோன்றின.
    (2) மிருகங்கள் பெலியொசொயி யுகத்தில் தோன்றின
    (3) பெரும்பனியுகம் மனிதன் தோன்றுவதற்கான பின்னணியை ஏற்படுத்தவில்லை
    (4) சிலுரியன் யுகத்தில் தாவரங்கள் தோற்றம் பெற்றன.

04. பழைய காலத்தைச் சேர்ந்ததும் களிமண்ணால் செய்யப் பட்டதுமான அரிவாள் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.
    (1) மெக்சிக்கோ
    (2) சீனா
    (3) இஸ்ரேல்
    (4) தாய்லாந்து

05. எதிரே காட்டப்பட்டுள்ள இவ்வுருவமானது. எக்கூர்ப்பு நிலைக்குரியது.
    (1) ஒஸ்ரலோபிதிகஸ்
    (2) ஹோமோ இரெக்டஸ்
    (3) ஹோமோ ஹெபிலஸ்
    (4) ஹோமே சேபியன்ஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. நகர நிர்மாணத்தில் உயர்பொறி முறை அறிவைப் பிரயோகித்த நாகரிகம்.
(1) மொசப்பதேமியா
(2) சிந்துநதி நாகரிகம்
(3) நைல்நதி நாகரிகம்
(4) குவாங்கோ நாகரிகம்

07. கலாசாரத்தின் தொட்டில் என அழைக்கப்பட்ட நாட்டின் இன்றைய பெயர்.
(1) ஈரான் (2) ஈராக்
(3) பாகிஸ்தான் (4) சீனா

08. உலகின் மிகப்பழமை வாய்ந்த இலக்கிய நூலாக கருதப்படும் வீரக்கதை யாரால் எழுதப்பட்டது.
(1) ஹமுராபி (2) அக்ஹெனதன்
(3) கில்கமேஷ் (4) பாராவோ

09. சிப்பியைத் துளைத்து கழுத்தில் அணியும் அட்டியல் கண்டெடுக்கப்பட்ட குகை.
(1) பாகியன் கல (2) கித்துகல்கல
(3) பெல்லன்பதிபெலஸ்ஸ (4) சீகிரிய

10. விஜயன் திருமணம் செய்து கொண்ட மதுரை இளவரசியின் பெயர்.
(1) குவேனி (2) விஜயை
(3) சிங்கசீவலி (4) சுப்பாதேவி

11. இயக்க கோத்திரத்தின் இராசதானியான இலங்காபுரத்தின் இன்றைய பெயர்.
(1) மகியங்கனை (2) மிகிந்தலை
(3) தம்மண்ணா (4) களனி

12. இலங்கைக்கு வருகை தந்த முதல் ஆரியக்குழு.
(1) பண்டுவாசுதேவன் குழு
(2) விஜயன்குழு
(3) சிங்கபாகு
(4) பாண்டிய இளவரசி

13. இலங்கைக்கு வழங்கப்பட்ட வேறு பெயரும் வழங்கிய இனத்தவரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் தவறான சோடி எது?
(1) தப்ரபேன் - கிரேக்கர்
(2) செரண்டிப் - ஒல்லாந்தர்
(3) சிலோன் - ஆங்கிலேயர்
(4) சீலன் - சீனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கீழ்வரும் அனுராதபுர அரசர்களுடைய மனைவியர்களுள் பொருத்தமற்றதை இனங்காண்க.
1. காவந்தீசன் - விகாரமாதேவி
2. பண்டுகாபயன் - சுவர்ணபாலி
3. வட்டகாமினி - சோமாதேவி
4. வசபன் - அனுலாதேவி

15. கீழ்வரும் அனுராதபுர அரசர்களுடைய வழிகாட்டிகளாக விளங்கியவர்களுள் பொருத்தமற்ற சோடியை இனங்காண்க.
1. பண்டுகாபயன் - பண்டுலன்
2. வலகம்பா - மகாதிஸ்ஸதேரர்
3. தீசன் - மகிந்ததேரர்
4. மகாசேனன் - குப்பிக்கலதிஸ்ஸ

16. புதுமையான கால்வாய் எனக்குறிப்பிடப்படும் யோதக் கால்வாயினை அமைத்தவர்
1. தாதுசேனன்
2. மகாசேனன்
3. வசபன்
4. வலகம்பா

17. வல்விபுரம் பொற்சாசனத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படும் விடயங்களில் பொருத்தமற்றது.
1. வசப மன்னனின் அதிகாரம் வடபகுதி வரை பரவியமை
2. இசிகிரிய எனும் பிரதேச ஆட்சியாளன் நிர்வகித்தமை
3. ரன்மசு பூங்கா வசப மன்னனால் அமைக்கப்பட்டமை
4. பியங்குக திஸ்ஸ எனும் விகாரை அமைக்கப்பட்டமை

18. அனுராதபுர ஆரம்பகால அரசர்களும் அவர்களுடைய புதல்வர்களினது பெயரும் குறிப்பிடப்படுகின்றது. இதில் பொருத்தமற்ற சோடியை இனங்காண்க.
1. மூத்த சிவன் - தீசன்
2. காவந்தீசன் - சத்தாதீசன்
3. வலகம்பா - மகாசூலி
4. மகாசேனன் - காசியப்ப

19. தூபாராம தாதுகோபத்தின் ஆரம்ப வடிவம் யாது?
1. தானியகார
2. கண்டாகர
3. அம்லாகர
4. பத்மாகர

20. பிக்குணி சாசனத்தின் தேவைக்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டவர்.
1. அனுலாதேவி
2. மகிந்தர்
3. சங்கமித்தா
4. அரிட்டன்

(20 x 2 = 40 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II

❖ **கவனிக்குக.**

01. 1. கீழ்வரும் சம்பவங்களோடு தொடர்புடைய மன்னர்களைக் குறிப்பிடுக.

A. இலங்கையில் மௌரிய முறைப்படி முடி சூடியவர்

B. பத்து மாமல்லர்களை கொண்டிருந்த ஆட்சியாளர்

C. அபயகிரி விகாரையை நிர்மாணித்தவர்

D. சுரங்கவழி நீர்ப்பாசன முறையை அறிமுகப்படுத்தியவர்

2. கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையினை எழுதுக.

A. தாதுசேனன், வசபன் ஆகிய மன்னர்களின் வம்சங்களை முறையே குறிப்பிடுக.

B. அசோக மன்னனின் மகன் மற்றும் மகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

C. துட்டகைமுனு மன்னனின் தாய் தந்தையரைக் குறிப்பிடுக.

D. விஜயனின் தோழர்களால் அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் இரண்டு குறிப்பிடுக.

3. கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை குறிப்பிடுக.

A. முற்காலத்தில் ஆசியாவில் கட்டப்பட்ட மிக உயர்ந்த செங்கல் கட்டடம் எது?

B. முதன் முறையாக உள்நாட்டு வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு வரி அறவிடும் முறையை அறிமுகம் செய்த மன்னன்?

C. மகாகமையில் தோன்றி அனுராதபுரத்தை கைப்பற்றிய ஆட்சியாளன்.

D. இலங்கையை பலசிமுண்டு என அழைத்த அந்நியர்

(12 x 1 = 12 புள்ளிகள்)

02. 1. வரலாறு பற்றிய வரைவிலக்கணங்களை முன்வைத்த அறிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக.

2. வரலாற்றைக் கற்றுக் கொள்வதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.

3. கீழ்வரும் விடயங்களோடு தொடர்புடைய மனிதனின் கூர்ப்புக் கட்டங்களைக் குறிப்பிடுக.

A. ஆற்றலுடைய மனிதன் எனப்படும் நிலை -

B. நெருப்பை முதன் முதல் உபயோகித்த நிலை -

C. மனிதனது நிலையை அடைந்த வானரம் -

4. கீழ்வரும் காலங்களில் மனிதனின் வாழ்க்கை முறையின் பண்புகள் ஒவ்வொன்று குறிப்பிடுக.

Class No:
Acc No: 3071



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. பழைய கற்காலம் B. இடைக் கற்காலம்

C. புதிய கற்காலம் D. விவசாய யுகம்

(2+3+3+4=12புள்ளிகள்)

03. 1. உலகில் தோன்றிய நாகரிகங்கள் இரண்டையும் அவைகள் அடங்கும் கண்டங்களையும் குறிப்பிடுக.

2. விஜயன் பற்றிய கீழ்வரும் விடயங்களைக் குறிப்பிடுக.

A. இலங்கை வந்த ஆண்டு -

B. இலங்கையில் தரையிறங்கிய இடம் -

C. திருமணம் புரிந்த மதுரை இளவரசி -

3. மொசப்பதேமிய சமூகத்தின் பண்புகள் மூன்று குறிப்பிடுக.

4. இலங்கையின் ஆரம்பக் குடியேற்ற வாசிகளின் சிறப்பியல்புகள் நான்கு குறிப்பிடுக.

(2+3+3+4=12புள்ளிகள்)

04. 1. பண்டுகாபய மன்னன் பொருளாதார நலன்களை விருத்தி செய்ய அமைத்த குளங்கள் இரண்டு தருக.?

2. மகிந்ததேரருடன் இலங்கை வந்த மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக.?

3. தேவநம்பியதீச மன்னன் பௌத்த மத விருத்திக்காக மேற்கொண்ட பணிகள் மூன்று குறிப்பிடுக.

4. துட்டகைமுனுவின் தளபதிகள் நால்வரைக் குறிப்பிடுக.

(2+3+3+4=12புள்ளிகள்)

05. 1. தாதுசேன மன்னன் நிர்மாணித்த குளங்கள் இரண்டு தருக?

2. மின்னேரியாத் தெய்வம் என சிறப்பிக்கப்படும் மன்னனின் சமயப்பணிகள் மூன்று தருக?

3. கீழ்வருவனவற்றோடு தொடர்புடைய மன்னர்களைக் குறிப்பிடுக.

A. பூலஹத்தவின் படையெடுப்பை எதிர்கொண்டமை

B. எல்லாளனின் படையெடுப்பை எதிர்கொண்டமை

C. முதன் முதலாக குளமொன்றை கட்டியமை

4. மகாசேன மன்னனால் அமைக்கப்பட்ட குளங்கள் நான்கையும் அதன் புராதன பெயர்களையும் குறிப்பிடுக.

(2+3+3+4=12புள்ளிகள்)

Class No:
Acc No 307



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

307

Class No:
Acc No 307

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு தரம் 6
(குறிப்புகள், வினா, விடை)

வரலாறு தரம் 7
(குறிப்புகள், வினா, விடை)

வரலாறு தரம் 8
(குறிப்புகள், வினா, விடை)

வரலாறு தரம் 9
(குறிப்புகள், வினா, விடை)

வரலாறு தரம் 10
(குறிப்புகள், வினா, விடை)

வரலாறு தரம் 11
(குறிப்புகள், வினா, விடை)

வரலாறு தரம் 10 (முதலாம் தவணை)
(குறிப்புகள், வினா, விடை)

வரலாறு தரம் 10 (இரண்டாம் தவணை)
(குறிப்புகள், வினா, விடை)

வரலாறு தரம் 10 (மூன்றாம் தவணை)
(குறிப்புகள், வினா, விடை)

பிரித்தானியர் வருகை முதல் சுதந்திரத்தின்
பின்னரான இலங்கை வரை தரம் 11
(குறிப்புகள், வினா, விடை)

உலக வரலாறு தரம் 11
(குறிப்புகள், வினா, விடை)

pbd
201003257
VARALARU G-6
Rs. 250.00
29/03/2016

Rs. 250/=

ISBN : 978 - 955 - 38705 - 8 - 2

# LOYAL PUBLICATION

125, New Moor Street, Colombo 12.
Tel: 011 2433874 / 011 4280880 / 077 7556277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org